வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 357 | பக்கங்கள் : 16





07 'தங்கச்சி' யாரோ? ஆனால், தகவுடைய சொல்!


08 ஜனாதிபதி தேர்தலில் மக்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகள்


09 விஜேவர்த்தன குடும்ப அரசியலை மீளெழுச்சி காண வைப்பதே ரணிலின் மூல இலக்கு!


11 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் தெரிவுகளும் வாய்ப்புகளும்!

# பயங்கரவாத சட்டத்தை உடன் கைவிடவேண்டும்!

## இலங்கையிடம் கோரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை

கொழும்பு, டிசெம்பர் 03

**இலங்கையின் வடக்கு-கிழக்கில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை பயன்படுத்தி சமீபத்தில் இடம்பெற்ற கைதுகள் குறித்து கரிசனை கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.**

இது மனித உரிமைகளை மீறும் சட்டத்தினை பயன்படுத்துவதை நிறுத்திவைப்பது குறித்த அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கு மாறானது எனவும் அது தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை கைவிடவேண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது. இதேவேளை,

இலங்கையில் கைது செய்யும் நடவடிக்கைகளுக்காகத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

சர்வதேச தர நிலைகள் மற்றும் மனித உரிமைகள் மரபுகளுக்கு ஏற்ப சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்றும், இதற்கிடையில் உறுதிமொழிகளின்படி பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

மாவீரர் நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்கள் கைதுசெய்யப்பட்டுவரும் பின்புலத்திலேயே ஐரோப்பிய ஒன்றியம் தமது கவலையை வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு, வெல்லாவெளியில் முன்னெடுக்கப் 15



## அச்சுவேலி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

### இரண்டு பேர் காயம்

*யாழ்ப்பாணம், டிசெ. 03*

*யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் அச்சுவேலி நாவற்காடு பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அத்தோடு, இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.*

*புத்தூர் பகுதியைச் சேர்ந்த சிவநேசன் சியான் என்ற 22 வயது இளைஞரே உயிரிழந்தவர்* 15

## அடுத்த வாரத்தில் இலங்கைக்கு மேலும் 780 மில்லியன் டொலர்!

*கொழும்பு, டிசெ. 03*

*டிசெம்பர் இரண்டாம் வாரத்திற்குள் இலங்கைக்கு 780 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.*

*கடன் தொகை முந்நூற்று முப்பது மில்லியன் அமெரிக்க டொலர்களும், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையாகவும், உலக வங்கியின் உதவியாக இருநூற்று ஐம்பது மில்லியன்* 15

## இன்று புயல் அபாயம்!

*கொழும்பு, டிசெ. 03*

*தென்மேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை நேற்று காலை முதல் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளதாக வளிமண்டலவியல்* 15

## வைத்தியசாலையின் அசமந்தப் போக்கே இரட்டைக் குழந்தைகளின் தாய் மரணம்!

### உறவினர்கள் குற்றச்சாட்டு

*யாழ்ப்பாணம், டிசெ. 03*

*இரட்டை குழந்தையைப் பிரசவித்த தாய்க்கு அம்மை நோய் தொற்று ஏற்பட்டதும் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு அழைத்து செல்லுமாறும் பணிக்கப் பட்டதால், நோய் தொற்று அதிகமாகி தாய் உயிரிழந்ததாக குடும்பத்தினர் குற்றம்சுமத்தியுள்ளனர்.*

*யாழ்ப்பாணம் - தொண்டமானாறு - வல்லை வீதியை சேர்ந்த நி.விதுசா (வயது-25) என்ற இளம் தாய் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார்.*

*கடந்த 21ஆம் திகதி குறித்த பெண் குழந்தை பேறுக்காக யாழ்.* 15

## நாணய நிதியத் திட்டத்தின் முதல் மீளாய்வு 12ஆம் திகதி

*கொழும்பு, டிசெ. 03*

*சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் முதல் மீளாய்வு எதிர்வரும் 12ஆம் திகதி, அந்த நிதியத்தின் நிறைவேற்றுச் சபையில் பரிசீலிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.*

*உத்தியோகபூர்வ கடன் வழங்கும் நாடுகள் கடந்த வாரம் வழங்கிய உறுதியை அடுத்து* 15

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்

*வவுனியா, டிசெ. 03*

*படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியும், ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய* 15



## காணாமற்போனோர் விசாரணைகள் அடுத்த ஆண்டுக்குள் நிறைவடையும்!

### சபையில் குறிப்பிட்டார் நீதி அமைச்சர்

*கொழும்பு, டிசெ. 03*

*காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் 4795 முறைப்பாடுகள் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.*

*முறைப்பாடுகள் தொடர்பான சகல விசாரணைகளையும் அடுத்த ஆண்டுக்குள் நிறைவு செய்து உறுதியான தீர்மானத்தை எடுத்த எதிர்பார்த்துள்ளோம் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நீதி,* 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

ஒருநாள் ஒரு விவசாயி, தன் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளைப் பறித்து மூட்டைக் கட்டி மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு அவற்றை விற்க நகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

அப்போது, வீதியின் ஒரு திருப்பத்தில் வண்டியின் ஒரு சில்லு பள்ளத்தில் போய் விழ, வண்டி சாய்ந்து விட்டது.

"கடவுளே! இது என்ன சோதனை? எனக்கு உதவி செய்!" என்று அவன் மனமுருக வேண்டினான். கடவுள் உதவிக்கு வரவில்லை. இரண்டாம் முறை, மூன்றாம் முறையென பலமுறை கடவுளை உதவிக்கு அழைத்தும், அவர் வரவில்லை. வேறு யாரும் உதவிக்கு வரவில்லை.

கடைசியில், பள்ளத்தில் விழுந்திருந்த வண்டியின் சில்லை தானே தூக்கி வீதியில் நகர்த்தி வைக்க முயற்சி செய்தான். என்ன ஆச்சரியம்? தனியாக தன்னால் தூக்க முடியாது என்று அவன் நினைத்திருக்க, எளிதாக சில்லு பள்ளத்திலிருந்து எழுந்து விட்டது. அப்போதுதான், அவன் தன் பின்னால் நின்று கொண்டிருந்த ஒரு வழிப் போக்கன் தான் சில்லை தூக்குவதில் உதவி செய்தமை தெரியவந்தது.

அவனை வணங்கிய அவன், "மிகவும் நன்றி ஐயா! கடவுள் செய்யாத உதவியை நீங்கள் செய்துவிட் டீர்கள்!" என்றான்.

"கடவுளே! உதவி செய்! என்று சொல்லியபடி கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தால், கடவுள் எப்படி உதவி செய்வார்? நீயே முயற்சி செய்தால்தான், கடவுள் உனக்கு உதவி செய்வார். அதற்கு நீதான் அவருக்கு, ஒரு வாய்ப்பு தர வேண்டும்!" என்று கூறிவிட்டு அந்த ஆள் தன் வழியே நடந்தான்.

புலம்பெயர் நாடுகளிலிருந்து சில அமைப்புக்களின் பிரதிநிதிகளும், தாயகத்திலிருந்து சிலரும் புதுடில்லிக் குச் சென்றிருப்பது நாம் அறிந்ததுதான்.

அதுபற்றி இந்தப் பத்தியிலும் எழுதியிருந்தேன்.

எந்தவித முன்அறிவிப்பும் இன்றி இப்படியொரு குழு புதுடில்லி சென்ற பின்னர்தான் அவர்கள் அங்கு சென் றதே தெரியவந்தது.

அதனால், யார் ஏற்பாட்டில், அவர்கள் சென்றார்கள் என்பது தெரியாமலே இருந்துவந்தது. அதிலும் பலர் தமிழர் பிரச்னை தொடர்பாக பல்வேறு கருத்துக்களைக் கொண்டவர்கள்.

இனப்பிரச்னைக்கு தீர்வாக இந்தியா தொடர்ந்து பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தையே வலியுறுத்தி வரும் நிலையில், பதின்மூன்றை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்ற கருத்தைக் கொண்டவர்களும் அந்தக் குழுவில் இடம்பெற்றிருப்பது பயனுள்ளதாக அமையப் போவதில்லை என்ற எண்ணத்தை பலம் கொண்டிருந்த போதிலும், அந்தக் குழுவிலிருந்த முன்னாள் முதலமைச் சரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான விக்கினேஸ்வரன், இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் படுத்த இந்தியா உதவவேண்டும் என்ற கோரிக்கையை அங்கு சென்றதும் முன்வைத்தது பலருக்கும் நம்பிக்கை யைத் தந்தது.

அவர்கள் தமது விஜயத்தின் நோக்கம், இந்திய கொள்கை வகுப்பாளர்களையும் கருத்துருவாக்கிகளை யும் சந்தித்து இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் இன்றைய அவலங்களை சொல்வதும், அதன்மூலம் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கச் செய்வதும்தான் அவர்களின் விஜயத்தின் நோக்கம் என்பதை தெரிவித் திருந்தனர்.

அங்கு சென்றுள்ள அந்தக் குழுவினர், தொடர்ந்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்து இங்குள்ள நிலைமை களை விளக்கிவருவதாக அவர்களுடன் தொடர்பில் உள்ள ஓர் உள்ளூர் அரசியல்பிரமுகர் தெரிவித்தார்.

வெறுமனே, இந்தியப் பிரதமருக்கு இங்கிருந்து கடி தங்களை அனுப்பிவிட்டு, காத்திருப்பதை விடுத்து இது போன்ற விஜயங்களை மேற்கொண்டு நமது நிலமையை எடுத்துச் சொல்வது நல்லதுதான்.

இந்த விஜயத்தின்போது, அவர்கள் முக்கிய தலைவர் களைச் சந்திக்காவிட்டாலும், அரசாங்கத்தை இயக்கு கின்ற 'சவுத்புளொக்' பிரமுகர்களைச் சந்தித்தாலே அது தமிழ் மக்களுக்கு பயனுள்ளதாகத்தான் அமையும்.

மேலே சொன்னதுபோல, கடவுளே எனக்கு உதவி செய்... உதவி செய் என்று வேண்டிக்கொண்டு பேசா மல் இருந்தால், கடவுள் வந்து உதவி செய்யப்போவ தில்லை. நாமும் நம்மாலான முயற்சியை எடுத்தால் தான் கடவுளும் நமக்கு உதவிசெய்ய முன்வருவார் என்பதை, அந்தக் குழுவினர் உணர்ந்து கொண்டிருப் பார்களோ என்னவோ.!

- ஊர்க்குருவி.

# மருந்துகள் தொடர்பில் நிலவும் பிரச்னைகளை தீர்க்க திட்டம்!

கொழும்பு, டிசெ. 02

2024 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் மருந்து களைக் கொள்முதல் செய்வது தொடர்பான சிறப்பு வழிகாட் டல்களை வெளியிடுவது மற்றும் அதற்காக ஒரு தனி நிறுவனத்தை நிறுவுவது குறித்து கவனம் செலுத் தப்பட்டுள்ளதாகவும், இதன் ஊடாக மருந்து இறக்குமதியில் இடம்பெறும் ஊழல், முறைகேடு கள் மற்றும் ஏனைய சர்ச்சைக் குரிய விடயங்களைத் தடுக்க வழி ஏற்படும் எனவும் சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம் பேபொல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

தற்போது, நாட்டில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் மருத் துவ சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான தரமான மருந்து களை நோயாளிகளுக்கு வழங்குவதில் கவனம் செலுத்தி யுள்ளோம்.

தற்போதைய பொருளாதார நிலை காரணமாக சிகிச்சை மற் றும் பராமரிப்பு பணிகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தா லும் அவற்றைத் தவிர்த்து, அடுத்த ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகளைக் கொண்டு எதிர்வரும் வருடத்தில் இந்த செயற்பாடுகளை வெற்றிகர மாக முன்னெடுக்க எதிர்பார்த் துள்ளோம்.

மேலும், சுகாதார அமைச்சில் பல கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

கடந்த வாரங்களில் சில மாற் றங்களைச் செய்தோம்.

அடுத்த வாரத்திலும் இது போன்ற சில மாற்றங்களைச் செய்ய தயாராக இருக்கிறோம்.

மேலும், மனித வளங்கள், சட்டவிதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளில் மாற்றங்களைச் செய்யவும் எதிர்பார்க்கிறோம்.

மருந்துக் கொள்வனவு செயல் முறையிலும் பல்வேறு மாற் றங்கள் செய்யப்பட்டன.

குறிப்பாக, 2024ஆம் ஆண் டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஊடாக, மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வது தொடர் பான விசேட வழிகாட்டுதல்களை வெளியிடுதல் மற்றும் அதற்கென தனியான நிறுவனமொன்றை ஸ்தாபிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், மருந்து இறக்கு மதியின் போது இடம்பெறும் ஊழல், முறைகேடுகள் மற்றும் பிற சர்ச்சைக்குரிய சம்பவங்க ளைத் தவிர்க்க முடியும்.

நாட்டில் உள்ள மருந்துகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், இந்நாட்டில் மருந்து களை உற்பத்தி செய்தல், அவற் றைச் சந்தைக்கு அறிமுகப்படுத் தும் பணியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது.

சுகாதாரத் துறையில் தாக்கம் செலுத்தும் மனித வள மேலாண் மைக்காக பிரபலமற்ற முடிவு களை எடுக்க வேண்டியுள்ளது.

அதற்காக, பதவிகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

இந்த ஒவ்வொரு மாற்றங்களு டனும், தற்போது மருந்துகள் தொடர்பில் நிலவும் பிரச்சினை களைத் தீர்க்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் சில சீர்திருத்தங் களை மேற்கொள்ள தயாராகி வருகிறோம்.

அனைவருக்கும் ஒரே மாதிரி யான சுகாதார சேவையை எவ் வாறு வழங்குவது மற்றும் சமூகப் பாதுகாப்பு வழங்குவது குறித்து உலகில் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

அதற்காக உலக சுகாதார நிறு வனத்துடன் சுகாதார அமைச்சு இணைந்து செயல்பட்டு வருகிறது.

மேலும், தற்போது பெய்து வரும் மழையால் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருகிறது.

சுகாதார குழுக்களின் முயற்சி களினால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு டெங்கு நோய் இறப்பு விகிதத்தை குறைக்க முடிந்தது. - என்றார். (அ)

# கடந்த ஒன்பது மாதங்களில் மாத்திரம் 2403 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள்!

கொழும்பு, டிசெ. 03

நிறைவடைந்த 09 மாத காலப் பகுதிகளில் மாத்திரம் நாடளா விய ரீதியில் 2403 சிறுவர் துஷ் பிரயோக வழக்குகள் பதிவு செய் யப்பட்டுள்ளன. இந்நிலைமை கவலைக்குரியது என நீதி, சிறைச் சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செல வுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலை கள் அலுவல்கள் மற்றும் அரசிய லமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு களுக்கான செலவினத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற் றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

நாட்டின் நீதிக் கட்டமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதி யத்தின் நிபந்தனைகளில் ஒருசில விடயங்கள் செயற்படுத்தப்பட் டுள்ளன. இதனால்தான் முதற் கட்ட நிதி கிடைக்கப்பெற்றது. ஜி.எஸ்.பி. வரிச்சலுகையினை பெற்றுக்கொள்வதற்கும் கடந்த காலங்களில் நீதிக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன.

நீதியமைச்சின் கீழ் 21 நிறு வனங்கள் உள்ளன. நீதிமன்ற கட்டமைப்பில் உயர் நீதிமன்றம் முதல் தொழில் நீதிமன்றம் வரை யிலான நீதிமன்ற நடவடிக்கை ளில் 11,4458 வழக்குகள் நிலுவை யில் உள்ளன.

உயர்நீதிமன்றத்தில் 17 நீதி யரசர்கள் உள்ளார்கள். ஒரு நீதி யரசருக்கு 334 வழக்குகள் என்ற அடிப்படையில் வழக்கு விசார ணைகள் வழங்கப்படுகின்றன. அதே போல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 20 நீதியரசர்கள் உள்ளார்கள். அவர்களில் ஒருவ ருக்கு 202 என்ற வழக்குகள் என்ற அடிப்படையில் வழக்குகள் வழங் கப்படுகின்றன.

2023ஆம் ஆண்டு செப்ரெம் பர் மாதமளவில் உயர்நீதிமன்றத் தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் பெருமளவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மனித மற்றும் பௌதீக வள பற்றாக் குறைக்கு மத்தியில் தான் நீதிமன்ற



நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன. நிலுவையில் உள்ள வழக்குகளை நிறைவு செய்வதற்கு தொழில்நுட்ப வசதிகளை பயன் படுத்த வேண்டியுள்ளது. இதற் காக சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

நிறைவடைந்த 09 மாத காலப் பகுதிகளில் மாத்திரம் நாட ளாவிய ரீதியில் 2403 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந் நிலைமை கவலைக்குரியது. இந்த வழக்குகளில் 1167 வழக்குகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப் பதற்கு புதிய சட்டங்களை அறி முகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# பொலிஸ் உத்தியோகத்தரை கத்தியால் குத்தி போத்தலால் தாக்கியவர்களில் இருவர் கைது

கொழும்பு, டிசெ. 03

மோட்டார் சைக்கிளில் பய ணித்த மூவர் மோட்டார் சைக் கிளை விட்டு தப்பிச்செல்ல முற் பட்டபோது, அவர்களை துரத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத் தரை குறித்த மூன்று பேரும் கத்தி யால் குத்தி போத்தலால் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

அவ்வேளை மூன்று சந்தேக நபர்களில் இருவர் பிரதேச வாசிகளின் உதவியுடன் வெள்ள வத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது கையில் மூன்று கத் திக்குத்து காயங்கள் ஏற்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

தப்பிச்சென்ற மற்றொரு சந் தேக நபரை கைது செய்யும் நட வடிக்கை தொடர்பிலான விசார ணைகளை வெள்ளவத்தை பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற ஒதியமலைப் படுகொலையின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல்

முல்லைத்தீவு, டிசெ. 03

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைப் பகுதியில் 1984 ம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஒதியமலை படுகொலையின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கொட்டும் மழைக்கு மத்தியிலும் பொலிஸாரின் கெடுபிடிகளுக்குள்ளும் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைப் பகுதியில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் 2 ஆம் திகதி அதிகாலை வேளையில் புகுந்த இராணுவத்தினால் அங்கிருந்த இளைஞர்கள் மற்றும் ஆண்களை சனசமூக நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு 27 பேர சுட்டும், வெட்டியும் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டதுடன், 5 பேர் கடத்தப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டதாக உறவினர்கள் கருதுகின்றனர்.

குறித்த ஒதியமலைப் படுகொலையின் 39 ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று ஒதியமலை சனசமூக நிலைய வளாகத்தில் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் பொலிஸாரின் கெடுபிடிகளுக்குள்ளும் உணர்வுபூர்வமாக இடம் பெற்றன.

நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்களால் அவர்களுக்கான நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தி நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

நினைவேந்தல் நிகழ்வை தொடர்ந்து வழமை போல் ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மசாந்தி பூசையும் அன்னதான நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பட்டார்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கிராம மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)





# காஸாவில் போர்க் குற்றங்கள் குறித்து பலவீனமான நிலைப்பாட்டில் இலங்கை!

## லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 03

பலஸ்தீனம் - காஸாவின் இன்றைய நிலை தொடர்பில் அரசாங்கம் பலவீனமான நிலைப்பாட்டில் உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தினால் இந்த நிலையில் உள்ளதா என்பதை அறியவில்லை. காஸாவில் போர் குற்றங்கள் இடம்பெறுகின்றன. நாளாந்தம் 100இற்கும் அதிகமானோர் மரணிக்கிறார்கள். சர்வதேச நாணய நிதியமும் வேண்டும், மேற்குலகமும் வேண்டும். ஆனால், தர்மத்தின் நிலையில் இருந்து நாம் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். இஸ்ரேல் என்ற நாடு ஆரம்பத்தில் இருக்கவில்லை என்பதை முழு உலகும் அறியும் என எதிர்க் கட்சிகளின் பிரதம கொறடாவான லக்க்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவினத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பலஸ்தீனம் - காஸாவின் இன்றைய நிலை தொடர்பில் அரசாங்கம் பலவீனமான நிலைப்பாட்டில் உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தினால் இந்த நிலையில் உள்ளதா என்பதை அறியவில்லை. நாளாந்தம் 100க்கும் அதிகமானோர் மரணிக்கிறார்கள். சர்வதேச நாணய நிதியமும் வேண்டும், மேற்குலகமும் வேண்டும். ஆனால் தர்மத்தின் நிலையில் இருந்து நாம் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

10, 20 யூதர்களுக்காகவே இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு காலப் பகுதியில் பலஸ்தீனத்தில் இஸ்ரேல் என்பதொன்று இருக்கவில்லை. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் 60 இலட்சம் யூதர்களை பலஸ்தீனர்களோ பிற தரப்பினரோ கொல்லவில்லை. இன்று மனித உரிமை பற்றி பேசும் ஐரோப்பியர்களே யூதர்களை கொன்றார்கள். இதுவே உண்மை. காஸாவில் போர் குற்றங்கள் இடம் பெறுகின்றன. ஆகவே இவ்விடயம் தொடர்பில் இலங்கை ஒரு



நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அரசாங்கம் செல்கிறதா என்பதை நாங்கள் அறியவில்லை. கடந்த காலங்களில் இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் மாத்திரமே முன் வைக்கப்பட்டன. ஆனால், தற்போது பொருளாதார படுகொலை குற்றச்சாட்டும் முன் வைக்கப்பட்டுள்ளது. பொருளாதார படுகொலையாளிகள் யார் என்பதை உயர்நீதிமன்றம் தற்போது அறிவித்துள்ளது.

எமது நாட்டின் நீதிமன்றம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முன்னாள் ஜனாதிபதிகளுக்கு கடுமையான தீர்ப்பு வழங்கியுள்ளது என்பதை சர்வதேசத்துக்கு குறிப்பிட முடியும் - என்றார். (அ)

# புனர்வாழ்வு நிலையங்களில் 1084 பேர்!

கொழும்பு, டிசெ. 03

புனர்வாழ்வளித்தல் தொடர்பான சட்டம் அண்மையில் இயற்றப்பட்டுள்ளது. கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் 520 பேரும், சேனபுர மத்திய நிலையத்தில் 471 பேரும், வவுனியா மத்திய நிலையத்தில் 93 பேரும் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவினத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# ஒரு நாளில் 938 மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் நாட்டில் உருவாக்கம்!

கொழும்பு, டிசெ. 02

எந்தக் கட்டுப்பாடும் இன்றி கழிவுப் பிளாஸ்ரிக்கை தேவைக்கு அதிகமாக இறக்குமதி செய்ய தொழிற்துறையினருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் நடத்திய கலந்துரையாடலில் தெரிய வந்தது. எனவே, எதிர்காலத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கும் போது தொழில்துறையின் தேவைக்கு ஏற்ற வகையில் அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு, மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்குப் பணிப்புரை விடுத்தது.

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு அதன் தலைவர் அஜித் மான்னப்பெரும தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வருடாந்தம் இலங்கைக்கு 4 இலட்சம் மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் மூலப்பொருள் இறக்குமதி செய்யப்படும் நிலையில், வருடாந்தம் 20,000 மெற்றிக் தொன் கழிவுப் பிளாஸ்ரிக்கை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றமை இங்கு புலப்பட்டது.

கடந்த வருடத்தில் 20,000 மெற்றிக் தொன் கழிவுப் பிளாஸ்ரிக்கை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும், தொழில் துறையினால் 5,179 மெற்றிக் தொன் கழிவுப் பிளாஸ்ரிக் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டிருப்பதும் இங்கு தெரியவந்தது. எனவே, இவ்வாறான அனுமதியை வழங்கும்போது தொழில்துறையினரின் தேவையைக் கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் அனுமதியை வழங்குமாறும், குறிப்பிட்ட 5 ஆண்டுகளுக்குள் கொண்டு வரப்படும் பிளாஸ்ரிக்கை சேகரிப்பதற்கான கட்டமைப்பைத் தயாரிக்குமாறும் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்துடன், சராசரியாக நாளொன்றுக்கு 938 மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாகவும், இதில் 32 வீதம் மாத்திரமே மீள சேகரிக்கப்படுவதாகவும், இவ்வாறு சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக்கில் 4 வீதம் மாத்திரமே இயந்திரங்களின் ஊடாக மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதாகவும் இங்கு தெரியவந்தது. மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படாத பிளாஸ்டிக் கழிவுப் பொருளாக சூழலில் காணப்படுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மீள்சுழற்சிக்கான பிளாஸ்ரிக்கை சேகரிப்பதில் காணப்படும் அதிக செலவீனம் காரணமாக அதில் பலர் ஆர்வம் காட்டுவதில்லையென அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (அ)

# எனது கதையை முடிக்கும் நோக்கிலேயே சுகாதார அமைச்சு பதவி வழங்கப்பட்டது

## கூறுகின்றார் மைத்திரிபால

கொழும்பு, டிசெ. 02

தனது கதையை முடிக்கும் நோக்கிலேயே மகிந்த ராஜபக்ஷ ஆட்சிகாலத்தில் தனக்கு சுகாதார அமைச்சு பதவி வழங்கப்பட்டது என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னை இல்லாமல் ஆக்கும் நோக்கிலேயே 2010 இல் எனக்கு சுகாதார அமைச்சு பதவி வழங்கப்பட்டது. ஆனால் எனக்கு அந்த அமைச்சு பதவி வழங்கப்பட்டதால்தான் ஜனாதிபதி ஆக முடிந்தது என்பதை தற்போதைய சுகாதார அமைச்சருக்கு நினைவுபடுத்துகின்றேன். என்னை முடிக்க பார்த்தனர். ஆனால் நான் விழித்துக்கொண்டேன்.

எனது ஆட்சிகாலத்தில் பிடிக்கப்பட்ட போதைப் பொருட்கள் நீதவான் முன்னிலையில் எரிக்கப்பட்டது. தற்போது கைப்பற்றப்படும் போதைப்பொருட்களுக்கு என்ன நடக்கின்றது என்பது தெரியவில்லை.

சுகாதார அமைச்சில் ஊழல், மோசடிகள் உள்ளன. விலை மனுகோரல்கூட முறையாக நடப்பதில்லை. ஊழல், மோசடி நிறுத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

# பூமியின் இருப்பை உறுதி செய்ய முழு உலகமும் ஒன்றுபடவேண்டும்



## டுபாயில் தெரிவித்தார் ஜனாதிபதி

காழும்பு, டிசெ. 03

காலநிலை அனர்த்தங்களை மட்டுப் படுத்தி பூமியின் இருப்பை உறுதி செய்வ தற்காக முழு உலகமும் ஒன்றுபட வேண் டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

டுபாயில் நடைபெறும் ஐக்கிய நாடு களின் 28 ஆவது காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான கோப்-28 உயர்மட்ட மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்-

நிதி, தொழில்நுட்பம் மற்றும் கால நிலைக்கான முதலீடுகள் தொடர்பிலான குறைந்தளவான செயற்பாடுகளின் விளைவாக, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெரும் விளைவுகளுக்கு முகம்கொடுக்க நேரிடும்.

காலநிலை நிதியளித்தல் தொடர் பான உயர்மட்ட நிபுணத்துவ குழுவின் அறிக்கையில் காலநிலை அனர்த்தங்க ளுக்கு ஈடுகொடுப்பதற்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களாவது அவசியப் படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதியளிப்பதற்கான நியதிகளை செயற்படுத்துவதற்கான குழுவின், 2023 நவம்பர் 4 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் சுயாதீன பங்களிப்புக்களை மாத்திரம் பெற்றுத்தருமாறு கோரப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இந்த நிதியம் அல்லது நிதியத்திற்கு பங்களிப்புச் செய் யும் தரப்பு தொடர்பிலான விடயங்கள் குறிப்பிடப்படவில்லை.

அந்த அறிக்கையும் உலக கடன் சலுகை வழங்கல் தொடர்பிலான பிரச்சி னையின் போது பதிலற்றதாக விளங்குகிறது.

எவ்வாறாயினும், அந்த அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து நான்கு நாட்களுக்குப் பிறகு வெளியிடப்பட்ட உலகளாவிய மதிப்பீட்டு தொடர்பிலான முதலாவது தொழில்நுட்ப கலந்துரை யாடலுக்கான அறிக்கையில் இதற்காக வருடத்திற்கு குறைந்தபட்சம் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் அவ சியப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

முரண்பாடுகள் ஏற்படாமல் இருப்ப தற்கான இணக்கப்பாடுகளை எட்டுவது இதற்கான தீர்வாக அமையாது.

நாம் யாரை ஏமாற்ற போகிறோம்? காலநிலை நீதிகளை மறுக்கிறோம்.

ஐந்தாவது ஆசிய பசுபிக் வலய சுற் றாடல் அதிகாரிகள் மற்றும் அமைச் சர்களின் மாநாட்டின் இணக்கப்பாட் டுக்கு அமைவாக, 2024 பெப்ரவரி 06 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் மாநாட்டில் கால நிலை நீதிமன்றம் ஒன்றை நிறுவுவ தற்கான யோசனையை இலங்கை முன்வைக்க இருக்கிறது.

அந்த நீதிமன்றம் ஊடாக காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற் கான ஆக்கபூர்வமானதும் செயற்திறன் மிக்கதுமான தலையீடுகளை மேற்கொள் வதற்கான களத்தை உருவாக்க வேண் டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கூறியது போல், வரி செலுத்துவோரின் பணம் வீணாகாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான சிக்க லைத் தீர்க்க, 'உலகளாவிய தீப்பிடிக்கும் காலம் வந்துவிட்டது.'

எதிரி நம் வாசலில் இருக்கிறான். நாங்கள் இன்னும் தள்ளிப்போடுகிறோம். எதிர்த்துப் போரிட படைகளை தயார் படுத்திக்கொண்டிருக்கிறோம். எனவே, அடுத்த இரு வாரங்கள் மிக முக்கியமா னது.

காலநிலை மாற்றத்தைத் தணிக்க தலைமைத்துவத்தை வழங்கும் திறன் நம்மிடம் உள்ளதா இல்லையா என்பதை அதன் மூலம் தீர்மானிக்க முடியும்.

புவி வெப்பமடைதலை 1.5 செல்சி யஸியினால் குறைப்பதில் இலங்கை உறுதியாக உள்ளது. பூமியின் 44வீத மேற்பரப்பில் 134 வெப்ப வலய நாடுகள் உள்ளன 2030களில் அந்த நாடு களிலேயே உலகின் 50வீத மக்கள் தொகை காணப்படும்.

22 ஆம் நூற்றாண்டில் வெப்ப வல யம் பூமத்திய ரேகையிலிருந்து விலகிச் செல்லக்கூடும் என்று சில விஞ்ஞானிகள் எதிர்வுகூறியுள்ளனர்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல் மற்றும் இயற்கை தீர்வுகளுக்கு பெருமளவான முதலீடுகள் தேவை.

எனவே, இலங்கை மற்றும் ஏனைய தரப்பினர் வெப்ப வலயம் தொடர்பான அறிக்கையிடலுக்கான நிபுணர் குழு ஒன்றை கூட்ட தீர்மானித்துள்ளனர்.

இது வெப்ப வலயத்தில் மாத்தி ரமின்றி உலகம் முழுவதிலும் பல துறைசார் திட்டத்தை பகிர்ந்தளிக்க உள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தை சுற்றியுள்ள நாடுகள் சங்கத்தின் தற்போதைய தலைவர் என்ற வகையில், இலங்கை இந்து சமுத்திரத்திற்கும் மற் றும் காலநிலை மாற்றத்துக்கும் இடை யில் நிலவும் ஒன்றோடு ஒன்று சார்ந்தி ருத்தல் தன்மை தொடர்பில் கவனம் செலுத்துகிறது.

ஒரு பாதுகாப்பான கடல் மூலம் ஒட்சிசன் உற்பத்தி செய்யப்படுவதோடு, புவி வெப்பமடைதலால் உற்பத்தி செய்யப்படும் கார்பன் மற்றும் வெப்பம் அதன் ஊடாக உறிஞ்சப்படுகிறது.

நிலப்பரப்பு, காடுகளுடன் ஒப்பிடும் போது, சதுப்புநிலங்கள் மற்றும் கடற் புற்கள் மூலம் அதிக கார்பன் உறிஞ்சப் படுகின்றன.

இருப்பினும், விரைவான காலநிலை மாற்றம் காரணமாக கடல் சூழல் மாறி வருவதுடன், இதனால் கடல் மட்டம் மற்றும் வெப்பநிலை உயர்கிறது. கடல் அமில மயமாக்கல், பவளப் பாறைகள் அழிவு, கடல் வாழ் உயிரினங்களின் வாழ்விடங்கள் அழிவு மற்றும் தீவிர வானிலை முறைகள் ஏற்படும்.

இந்த நிகழ்வுகள் மூலம் கடல் பல்லு யிர்தன்மை, கடல் சார்ந்த உணவு முறை கள் மற்றும் கடலோர வாழ்வாதாரத்தை சீர்குலைப்பதன் மூலம் நேரடியாக மனித உயிர்களை பாதிக்கிறது.-என்றார்.

# பல்வேறு பொருட்களுக்கு விசேட வியாபார பண்ட வரி!

கொழும்பு, டிசெ. 03

நேற்று முன் தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பல்வேறு பொருட்களுக்கு விசேட வியாபாரப் பண்ட வரி விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால், நிதியமைச்சர் என்ற வகையில் விசேட வியாபாரப் பண்ட வரி விதித்து வர்த்த மானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வரி 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன்படி, யோக்கட், வெண்ணெய், பேரீச்சம்பழம், திராட்சை, அப்பிள், மீன் மற்றும் வெங்காயம் உள்ளிட்ட பல வகையான பொருட்களுக்கு விசேட வியாபாரப் பண்ட வரி விதிக்கப்பட்டுவதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

(அ)

# 22,000 ஆசிரியர் வெற்றிடங்கள்!

கொழும்பு, டிசெ. 03

நாடளாவிய ரீதியில் 22,000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச் சர் ஜனக வக்கும்புர தெரிவித் துள்ளார்.

குறித்த வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களை இணைத்துக்கொள்ளும் நடவ டிக்கைகள் தற்போது ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இதற்கமைய, ஆசிரியர்கள் ஓய்வுபெற்றமை யினால் ஏற்பட்ட வெற்றிடங் களுக்குரிய பாடங்களுக்கான ஆசிரியர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நட வடிக்கை எடுத்துள்ளது.

மாகாண சபைகளின் கீழ் காணப்படும் பாடசாலைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின்



கீழ் காணப்படும் பாடசாலை களுக்காக இவ்வாறு ஆட் சேர்ப்பு மேற்கொள்ளப்படு வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பாடசாலை தவ ணையின் போது ஆட்சேர்ப்பு நடவடிக்கையை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக இரா ஜாங்க அமைச்சர் மேலும் சுட் டிக்காட்டினார். (அ)

# பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைப்பது அடுத்த மாதம் முதல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 03

2022/2023 கல்வியாண் டிற்காக பல்கலைக்கழகங்களில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகும் என பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

முதற்கட்டத்தில் 42,145 மாணவர்கள் இணைத்துக் கொள் ளப்படவுள்ளதாக பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

இம்முறை கலைப்பீடத்திற்கு அதிகளவான மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள் ளதுடன், அந்த எண்ணிக்கை 11,780 ஆக அதிகரிக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே, பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப் பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியு மென பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவின் பிரதி செயலாளர் ஷாலிகா ஆரிய ரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் 02 வாரங்க ளுக்குள் பல்கலைக்கழக அனு மதிக்கான பதிவு நடவடிக் கைகளை ஆரம்பிப்பதாகவும், மாணவர்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பி, அதனூடாக தேவை யான ஆலோசனைகளை வழங்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

2022 கல்வி பொது தராதர உயர் தர பரீட்சையின் பெறு பேறுகளுக்கு அமைவாக, பல்க லைக்கழகங்களுக்கு மாண வர்களை இணைத்துக்கொள்வ தற்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று முன் தினம் வெளியிடப் பட்டன. (அ)

# நெளுக்குளம் - செட்டிகுளம் வீதியை பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை!

வவுனியா, டிசெ. 03

வவுனியா, பாவற்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள் ளதால், நெளுக்குளம் - செட் டிகுளம் வீதியை இரவு நேரத் தில் பயன்படுத்துவதை தவிர்க் குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக பாவற்குளத்தின் நீர்வரத்து அதிகரித்து 19.4 அடிக்கு நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது.

தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் நீர்மட் டம் சடுதியாக உயர்வடைய வாய்ப்புள்ளது.



இதன் காரணமாக, பாவற் குளத்தின் வான்கதவுகள் திறக் கப்பட்டுள்ளன.

இதனால் நேரியகுளம் ஊடான நெளுக்குளம் - செட் டிகுளம் வீதியில் நீர் பாய்ந்து செல்வதால் பொதுமக்கள் குறித்த வீதியை பயன்படுத்து வதை நிறுத்தி மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலை யம் தெரிவித்துள்ளது. (அ)

Eelanadu ஈழநாடு
03.12.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழரசு கட்சியின் தலைமை?

இலங்கை தமிழரசு கட்சியின் அடுத்த தலைவர் யார் என்னும் போட்டி ஆரம்பித்துள்ளது. இதுவரையில் ஊடகங்களில் பேசப்பட்ட விடயம் இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தங்களின் வேட்பு மனுவை கட்சியின் செயலாளரிடம் ஒப்படைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கை தமிழரசு கட்சி 1949இல் உருவாக்கப்பட்டது. ஒரு பிரதான கட்சியில் ஏற்படும் உடைவிலிருந்து அல்லது ஒரு கட்சியிலிருந்து ஆளுமையுள்ள ஒருவர் வெளியேறும் போதே, புதிய கட்சிகள் உருவாக்கின்றன. இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய கட்சிகளின் உருவாக்கம் பெரும்பாலும் இவ்வாறுதான் நிகழ்ந்திருக்கின்றது. ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், தவறான அரசியல் பாதையில் பொன்னம்பலம் பயணிக்கின்றார் என்னும் குற்றச்சாட்டை முன்வைத்தே, இலங்கை தமிழரசு கட்சியை உருவாக்கினார்.

1970களுக்கு பின்னரான அரசியல் சூழலில் ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கு, தமிழரசு கட்சியின் போதாமையை உணர்ந்த செல்வநாயகம், புதிய அரசியல் கூட்டணி ஒன்றைப் பற்றி சிந்தித்தார். இதன் விளைவாகவே, ஐக்கிய விடுதலைக் கூட்டணி - பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உருவாகியது. எனினும் பின்னர் ஏற்பட்ட புதிய அரசியல் நெருக்கடிகளை தமிழர் விடுதலைக் கூட்டணியினாலும் எதிர்கொள்ள முடியாத போது, தமிழ் தேசிய அரசியல் செல்நெறி முற்றிலுமாக, இளைஞர்களின் - ஆயுத இயக்கங்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது.

மீண்டும் தமிழரசு கட்சி எவ்வாறு தமிழ் தேசிய அரசியல் அரங்கிற்குள் நுழைந்தது? விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது, அன்றைய சூழலை கையாளுவதற்கான ஒரு துருப்புச் சீட்டாகவே மிதவாத கட்சியொன்றின் கீழ், அனைவரையும் ஒன்றுபடுத்தும் யோசனையை புலிகளின் தலைமை ஆதரித்தது. ஒரு வேளை ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படாதிருந்திருந்தால், வீட்டுச் சின்னம் மீண்டும் தமிழ் சமூகத்திற்குள் நுழையும் சந்தர்ப்பம் இல்லாமல் போயிருக்கும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால், இன்று வேறுவிதமான தலைமைத்துவ போட்டியே இடம்பெற்றிருக்கும்.

2009இற்கு பின்னரான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் காலத்தில், ஆரம்பத்திலிருந்தே ஏதோவொரு வகையில் உள் முரண்பாடுகள் இருந்த வண்ணமேயிருந்தது. இதற்கு காரணம் தமிழரசு கட்சியின் மேலாதிக்கம். இதனை சரிசெய்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஒரு தேசிய ஜனநாயக இயக்கமாக கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் - அதற்கான ஆற்றலிருந்தும், இரா. சம்பந்தன் அதனை செய்யவில்லை. சரியான தலைமைத்தும் ஒன்றை வழங்கும் வரலாற்றுப் பொறுப்பை அவர் தவறவிட்டார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் அடுத்த தலைவர் யார் என்னும் போட்டி, தமிழரசு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கின்றது. தற்போது தலைவராக இருக்கும் மாவை சேனாதிராசாவின் தலைமைத்துவம் ஏற்கனவே கேள்விக்குள்ளாகிவிட்டது. அவர் பெயரளவில்தான் தலைவராக இருக்கின்றார். இந்த நிலையில் கட்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லக் கூடிய அந்த ஒருவர் யாரென்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. அதனை போட்டியின் மூலம் தெரிவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதானது, கட்சிக்குள் நிலவும் உள் முரண்பாடுகளையே எடுத்துக் காட்டுகின்றது. ஒரு வேளை இந்த போட்டியில் ஆளுமையுள்ள ஒருவர் தோற்கடிக்கப்படும் பட்சத்தில் கட்சிக்குள் பிளவுகள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

## வைத்தியசாலை வாயிலில் தேங்கும் வெள்ளம்

*வடமராட்சி டிசெ. 02*

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரதான வாயில் பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதனால் வைத்தியசாலைக்கு வந்து செல்லும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.



வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதி புனரமைப்புப் பணி இடம்பெற்றிருந்த நிலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. வீதி புனரமைப்பின்போது முன்பு இருந்ததை விட சில அங்குல அளவில் வீதி உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் வீதி ஓரமாக உள்ள பகுதி தாழ்வானதாக மாறியுள்ளது. குறித்த வீதி புனரமைப்புப் பணி முழுமைபெறாத நிலையில் வீதியின் தெற்கு பக்கமாக பருத்தித்துறை ஆதார லைவத்தியசலையின் பிரதான வாயில்கள் உள்ளிட்ட பகுதி தாழ்வான நிலையில் காணப்படுகின்றன.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக குறித்த தாழ்வான பகுதியில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இவ்வாறு தேங்கியுள்ள வெள்ளநீரானது வடிந்தோடுவதற்கு ஏற்ற வாறான நிலை காணப்படாததால் தானாக வறண்டு போகும் வரை தேங்கிநிற்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

இதனால் வைத்தியசாலைக்கு வந்து செல்லும் பொதுமக்கள், வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலைக்கு முன்பாக சேவையில் ஈடுபட்டு வரும் முச்சக்கர வண்டி சாரதிகள் உள்ளிட்டோர் தினமும் பெரும் அசௌகரியத்திற்குள்ளாகி வருகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகம் சார்பிலும், முச்சக்கர வண்டி சங்கத்தினராலும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பலமுறை கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என வேதனை தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு தினமும் பல நூற்றுக்கணக்கானோர் வந்து செல்லும் நிலையில் பிரதான வாயில்களில் இவ்வாறு வெள்ள நீர் தேங்கி நிற்பதானது பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதுடன் சுகாதார பாதிப்புகளும் ஏற்படும் என்பதானால் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக தலையிட்டு சீர்செய்யுமாறும் கோரிக்கை விடுத்துளனர்.

(அ-2)

## லிட்ரோ எரிவாயு விலையில் திருத்தம் இல்லை!

*கொழும்பு, டிசெ. 03*

மாதாந்த எரிவாயு விலைத் திருத்தத்திற்கமைய, டிசெம்பர் மாதத்தில் லிட்ரோ எரிவாயுவின் விலையில் திருத்தம் எதுவும் இடம்பெறாது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச விலை அதிகரிப்பு மற்றும் டொலரின் உயர்வினை ஆராய்ந்து பார்க்கும்போது உள்நாட்டு எரிவாயுவின் விலையை அதிகரிக்க நேரிடும்.

எனினும் எதிர்வரும் பண்டிகை காலத்தைக் கருத்திற் கொண்டு இந்த மாதம் எரிபொருள் விலையை அதிகரிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட விலை விபரங்களுக்கமைய, இந்த மாதம் 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 3 ஆயிரத்து 565 ரூபாயாக மாற்றமின்றி விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

*வடமராட்சி. டிசெ. 02*

வடமராட்சி சந்நிதியின் ஆச்சிரமத்தால் இவ் வாரமும் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

வாராந்தம் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறுகின்ற வாராந்த நிகழ்வில் நேற்று தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.



அத்ததுடன் பாடசாலை ஒன்றிக்கான மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் வாராந்த சொற்பொழிவும் இடம்பெற்றது சொற்பொழிவினை இணுவில் ஆசிரியர் வாகீசன் வழங்கினார்.

சந்நிதியின் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியின் அடியார்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-2)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# புகைப்படங்களால் கதை சொல்லும் ஒளிப்படக் கலைஞர் ஜான் ஐசக்

பகிர்வு -106

- கணபதி சர்வானந்தா

"நான் 1984ல் எத்தியோப்பிய பஞ்சத்தை புகைப்படம் எடுக்கும்போது, ஒரு பெண் தன் குழந்தையை சாலையோரத்திலேயே பிரசவித்ததையும், குழந்தையின் தொப்புள்கொடி இன்னும் அவளுடன் இணைந்திருப்பதையும் நேரில் பார்த்தேன். அரை மயக்கத்தில் இருந்த அவளை அவளுடைய ஆடைகளால் மூடி, பக்கத்தில் முகாமில் இருந்த மருத்துவர் மற்றும் செவிலியரை அழைத தேன். அப்பொழுது, ஒரு தொலைக்காட்சிக் குழுவினர் இதைப் பார்த்தார்கள். அவர்கள் ஜீப்பில் சென்று கேமராவை எடுத்துவந்து, நிர்வாணமாகச் சாலையில் கிடந்த நிலையில் அவளைப் படம்பிடித்தனர். நான் அவளுக்கு ஆடை அணிவிப்பதைப் பார்த்த கேமரா மேன் மிகவும் எரிச்சலடைந்தார். அவருடைய புகைப்படத் தருணத்தை கெடுத்ததற்காக என்னை ஓங்கிக் குத்தினார்.

அதே பயணத்தின்போது, ஒரு பெண் இறந்துகொண்டிருக்கும் தன் குழந்தையை என் கையில் கொடுத்து வைத்திருக்கச் சொன்னாள். அவளுடைய எல்லா குழந்தைகளும் அவள் கையில் ஒவ்வொன்றாக இறந்ததால், "என் கடைசிக் குழந்தையை என் கைகளில் வைத்திருக்கும் அவமானத்திலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்" என்று அவள் என்னிடம் சொன்னாள். எனவே, நான் குழந்தையை என் கைகளில் வைத்திருந்தேன். குழந்தை இறந்தது, அந்தத் தாயும் எதுவும் சொல்லாமல் வெளியேறினாள். எனது ஓட்டுநர் மற்றும் மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் அந்தச் சிறிய குழந்தையை நானே அடக்கம் செய்ய வேண்டியிருந்தது...

1988ம் ஆண்டில் நான் மீண்டும் எத்தியோப்பியாவில் இருந்தேன். குப்பைகளை அகற்றி, குப்பைகளைச் சேகரித்து மறுசுழற்சி செய்து அதன்வழி வாழ்கிற ஏழ்மையான மக்களைப்பற்றி ஒரு புகைப் படக்கதை உருவாக்கினேன். அப்போது, ஒரு கண் பார்வையற்று இருந்த ஒரு வயதான பெண்ணை நான் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில், எத்தியோப்பியாவில் அமைதியின்மையில் காணப்பட்டது. அங்கு புரட்சி நடந்துகொண்டிருந்ததால் நான் ஹோட்டலுக்கு திரும்பிச்செல்கிற அவசரத்தில் இருந்தேன்.

நான் தங்கியிருந்த இடத்துக்கு என்னை அழைத்துச்செல்ல ஹெலிகாப்டர் காத்திருந்தது. மாலை 6.00 மணிக்குப் பிறகு ஊரடங்கு உத்தரவு. அந்தப் பெண்மணி தன்னைப்பற்றி என்னிடமும் என் மொழிபெயர்ப்பாளரிடமும் சொல்லிக்கொண்டிருந்ததால் நான் இன்னும் சிறிதுநேரம் அங்கு இருக்கவேண்டும் என அவள் விரும்பினாள். எங்களுக்கு ஏதாவது கையில் கொடுத்துவிட வேண்டுமென அவள் நினைத்திருந்தாள். உண்மையில் அவள், ஒரு கோழி முட்டையிடுவதற்காகக் காத்திருந்தாள். கோழி முட்டையிட்டது. கடைசியில் அவள் அந்த முட்டையை எடுத்து என்னிடம் கொடுத்து, அதை ஹோட்டலுக்கு எடுத்துச்சென்று சாப்பிடச் சொன்னாள். கொடுப்பதுதான் மிகப்பெரிய மகிழ்ச்சி. அந்தப் பெண் எனக்கு அதை கற்றுக் கொடுத்தாள். நான் வாழும்வரை அந்த சந்திப்பை ஒருபோதும் மறக்க மாட்டேன்...

எனவே எனது செயல்களால், குறிப்பாக எனது புகைப்படங்களால் ஒருவரின் கண்ணியத்தை சிறிதுகூட பறித்துவிடக்கூடாது என்பதில் நான் அதீத கவனமாக இருக்கிறேன். நான் நன்கறிந்த மற்றும் நான் பணிபுரிந்த மூன்றுபேர் இந்த விஷயத்தில் என்னைப் பெரிதும் பாதித்தனர். என் அம்மா, நடிகை ஆட்ரி ஹெப்பர்ன் மற்றும் அன்னை தெரசா. அவர்கள் அனைவரும் மனித கண்ணியத்தை வலியுறுத்தினர். முதலில் நான் ஒரு மனிதன், அதன் பின்னரே நான் ஒரு புகைப்படக்காரன். புகைப்படம் என்பது என் வாழ்வின்வழி என்றே உணர்கிறேன். ஏனெனில், அதில் ஈடுபடும்போதே என் ஆன்மாவரை மகிழ்வையும் நிறைவையும் உணர்கிறேன்.
- ஜான் ஐசக் (புகைப்படப் பத்திரிகையாளர்)

ஜான் ஐசக், உலகின் பலமுக்கிய விருதுகளைப் பெற்ற புகைப் படப் பத்திரிக்கையாளர் மற்றும் எழுத்தாளர் ஆவார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அவர் நியூயார்க் நகரில் வாழ்ந்து வந்தவர். மாறி வரும் இப்பேருலகில் நிகழ்கிற மானுடப் போராட்டங்களையும் வெற்றிகளையும் புகைப்படக்கதைகளாகப் பதிவுசெய்ததற்காக நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பயணித்துள்ளார். ஜான் ஐசக், மெட்ராஸ் பல்கலைக்கழக புதுக்கல்லூரியில் (The New College, Madras University) விலங்கியலில் இளங்கலைப்பட்டம் பெற்றவர்.

வியட்நாமிய படகு மக்கள், எத்தியோப்பியப் பஞ்சம், கம்போடிய கொலைக்களங்கள், ஈரானியப் புரட்சி, பாரசீக வளைகுடா போர், லெபனான், போஸ்னியா, குவைத், ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் போர்கள் மற்றும் ருவாண்டன் இனப்படுகொலை ஆகியவைகளை ஜான் ஐசக் புகைப்பட ஆவணங்களாகப் பதிவுசெய்துள்ளார். 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்குச் சென்று மிகுந்த சிரமங்களுக்கு இடையில் இந்த ஆவணப் புகைப் படங்கள் எடுக்கப்பட்டன. இந்த படங்களை ஐக்கிய நாடுகள் சபை, தன்னுடைய ஏராளமான வெளியீடுகளிலும் பலவிதமான அமைதி முயற்சிகளுக்கும் பயன்படுத்தியது.



அதுமட்டுமில்லாமல், ஜான் ஐசக் உலகின் மிகச்சிறந்த வன விலங்குப் புகைப்பட ஆசான்களில் ஒருவர். இந்தியாவின் தேசிய பூங்காக்களில் ஆபத்தான நிலையிலுள்ள புலிகள், நியூ மெக்ஸிகோவின் இடம் பெயர்ந்த கொக்குகள், அலாஸ்காவின் காட்மாய் தீபகற்பத்தின் கரடுமுரடான கரடிகள், மேய்ன் மச்சியாஸ் சீல் தீவின் பஃபின் பறவைகள் மற்றும் ஆப்பிரிக்காவின் நமீபியாவின் தேசிய பூங்காக்கள் ஆகியவைகளை இவர் ஆவணப் படுத்தியுள்ளார். சுற்றுச்சூழலியல் தொடர்பான பல்வேறு உலகளாவிய இதழ்களில் இவருடைய புகைபடத்தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

1969 முதல் 1998 வரை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுத் தகவல் துறையில் (Public Information Department) புகைப் படக்கலைஞராகப் பணியாற்றியுள்ளார். ஒரு இருளறை தொழில்நுட்ப வல்லுநராக (Darkroom Technician) அங்கு தனது பணியைத் துவங்கிய இவர் நாளடைவில் புகைப்படப் பத்திரிகையாளராக (photojournalist) மாறினார். 1978ம் ஆண்டில், ஐ.நா சபை இவரை தலைமைப் புகைப்படக்கலைஞராக உயர்பொறுப்பு வழங்கியது, அவர் 1998ல் ஐ.நா சபையின் புகைப்படப்பிரிவுத் தலைவராக உயர் பதவியில் பணிவகித்து ஓய்வுபெற்றார்.

கடந்த 2020ம் ஆண்டு நோய் அச்சகாலச் சூழ்நிலையில் 'குக்கூ இணையவழி உரையாடல்' நிகழ்வில் ஒளிப்படக்கலைஞர் ஜான் ஐசக் அவர்கள் பங்கேற்று உரையாடிய ஆசிரியச் சொற்கள் அகத்தில் நினைவெழுகிறது. தன்னுடைய வாழ்வனுபவத்தின் ஒளிபொருந்திய கதைகளையும் தகவல்களையும் அவ்வுரையாடலில் அவர் பகிர்ந்துகொண்டார். சமகாலத்தில், ஒளிப்படத்துறையின் இன்றியமையாத மூத்த முன்னோடி மனிதர் ஜான் ஐசக். எதிர்வரும்காலத்தில் எத்தனையோ ஒளிக்கண்களுக்கு மானசீக ஆசானாக மாறப்போகிற பேருள்ளம். ஒளிப்படக்கலை குறித்தும் வாழ்வு குறித்தும் அவருடன் நிகழ்ந்த நல்லுரையாடல் நமது வாழ்வின் தரிசனப்பக்கங்களில் ஒன்றென, அகத்தின் அழியாநினைவெனப் பதியும். இயற்கை எய்திய காணுயிர் ஒளிப்படக்கலைஞர் ஜான் ஐசக் அவர்களுக்கு எங்கள் அஞ்சலி. - என குக்கூ காட்டுப்பள்ளி சார்பில் பதிவொன்றை இட்டிருக்கின்றார் நண்பர் சிவராஜ்.

# இந்தவார ராசிபலன் 03.12.2023 - 09.12.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - கார்த்திகை 17
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

தொழிலை அபிவிருதி செய்வீர்கள். பேச்சு திறனால் செல்வாக்கை அதிகரிப்பீர்கள். நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். உதியோகஸ்தர்களுக்கு ஊதிய, பதவி உயர்வுகளுக்கு வாய்ப்புண்டு. வியாபாரிகளுக்கு வியாபாரம் பெருகும். விவசாயிகளுக்கு லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு தொண்டர்கள் உதவியாக இருப்பார்கள். கலை துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

தொழிலில் மறைமுக எதிர்ப்புகளைச் சந்திப்பீர்கள். வீட்டை சீரமைப்பீர்கள். வெளியூர் பயணம் செல்ல நேரிடும். உதியோகஸ்தர்கள் அலுவலகதில் புதிய பயிற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரிகள் கடன் அளிக்க வேண்டாம். விவசாயிகள் கால்நடைகளுக்குச் செலவழிக்க நேரிடும். அரசியல்வாதிகளின் பெயரும் புகழும் உயரும். கலை துறையினர் பிறருக்கு உதவிகளைச் செய்து மகிழ்வீர்கள்.பெண்கள் கணவர் குடும்பதாரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். மாணவர்கள் கடுமையாக உழைதுப் படிதால் வெற்றி நிச்சயம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களுடன் பழகுவீர்கள். உடன்பிறந்தோருடன் சுமுக உறவு தொடரும். வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். பிறரால் பாராட்டப்படுவீர்கள். உதியோகஸ்தர்களுக்கு விரும்பிய பணியிட மாற்றம் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். விவசாயிகள் புதிய குதகைகளை எடுப்பீர்கள். அரசியல்வாதிகள் வெற்றி இலக்கை அடைவீர்கள். கலை துறையினருக்கு நன்மைகள் உண்டாகும். பெண்கள் மன விரக்தியில் இருந்து விடுபடுவீர்கள். மாணவர்களின் கனவுகள் நிறைவேறும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடன் பிரச்னைகள் குறையும். பெற்றோருடன் அனுசரிது நடப்பீர்கள். சமுதாயதில் புதிய பொறுப்புகள் தேடி வரும். சுப நிகழ்ச்சிகளை நடதுவீர்கள். உதியோகஸ்தர்கள் மேலதிகாரிகளை அனுசரிது நடப்பீர்கள். வியாபாரிகள் வியாபாரதைப் பெருக்குவீர்கள். விவசாயிகள் கால்நடைகளுக்குச் செலவழிப்பீர்கள். அரசியல்வாதிகளின் பெயரும் கௌரவமும் உயரும். கலைதுறையினர் சக கலைஞர்களிடம் உதவி பெறுவீர்கள். குடும்பதாருடன் மகிழ்வாக இருப்பீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

குடும்பதில் மகிழ்ச்சி நிறையும். உடனிருப்போரின் ஆதரவைப் பெறுவீர்கள். எதிர்பார்த பணம் கிடைக்கும். உதியோகஸ்தர்கள் பிற ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பீர்கள். வியாபாரிகளுக்கு முன்னேற்றம் உண்டு. விவசாயிகள் பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அரசியல்வாதிகள் மேலிடக் கட்டளைகளை புரிந்து நிறைவேற்றுவீர்கள். கலை துறையினருக்கு வருவாய் அதிகரிக்கும். பெண்கள் பிரச்னைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

வழக்குகள் சாதகமாக முடிவடையும். உடனிருப்போரின் ஆதரவு அதிகரிக்கும். வருவாய் கூடும். இலக்குகளை நிர்ணயிது உழைப்பீர்கள். உதியோகஸ்தர்களுக்கு அலுவலகப் பணிகளில் வெற்றி கிடைக்கும். வியாபாரிகள் கூட்டாளிகளின் ஆலோசனைகளைக் கேட்பீர்கள். விவசாயிகள் வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அரசியல்வாதிகள் தனிதிறன்களை வெளிப்படுதுவீர்கள். கலை துறையினருக்கு பண ரவு சீராக இருக்கும். பெண்கள் உஷ்ணமான வார்தைகளைப் பேசாதீர்கள். மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்துவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

கடுமையாக உழைது வெற்றி பெறுவீர்கள். நீண்டநாள் எண்ணங்கள் நிறைவேறும். அன்பும் பாசமும் அதிகரிக்கும். முக்கிய விஷயங்களில் அகலக்கால் வைக்க வேண்டாம். உதியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் கவனம் தேவை. விவசாயிகளுக்கு லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் எச்சரிக்கையுடன் இருக்கவும். கலை துறையினருக்குப் பாராட்டுகள் கிடைக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தொழிலில் கஷ்டம் இருந்தாலும் விடாமுயற்சியால் தடைகளை தாண்டிவருவீர்கள். போட்டியாளர்களைச் சமாளிப்பீர்கள். கடன்களை அடைப்பீர்கள். உதியோகஸ்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். வியாபாரிகள் கூட்டாளிகளுடன் இணக்கமாக நடப்பீர்கள். விவசாயிகள் சந்தையில் நிலவும் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு பணம், பொருள் வந்து சேரும். மாணவர்கள் பிறரிடம் ஒற்றுமையாகப் பழகுவீர்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

காரியங்களைச் சாதிப்பீர்கள். உயர்ந்தோரிடம் பழகுவீர்கள். கடன் தொல்லையில் விடுபடுவீர்கள். உதியோகஸ்தர்கள் சக ஊழியர்களின் அன்புக்குப் பாதிரமாவீர்கள். வியாபாரிகளின் தனிதிறமை வெளிப்படும். விவசாயிகள் கால்நடைகளின் மீது தனிக் கவனம் செலுதவும். அரசியல்வாதிகள் பிடிவாத குணதை விடுது, திறந்த மனதுடன் செயலாற்றுவீர்கள். கலை துறையினரின் எதிரிகள் அச்சப்படும் நிலை உருவாகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

உயர் பண்புகள் வெளிப்படும். உங்கள் பெருந்தன்மையை பிறர் பாராட்டுவார்கள். மதிப்பும் கௌரவமும் உயரும். பொருளாதாரதில் ஏற்ற நிலை உண்டாகும். உதியோகஸ்தர்கள் விட்டுக் கொடுது நடப்பீர்கள். வியாபாரிகளின் பிரச்னைகள் தீரும். விவசாயிகள் புதிய குத்கைகளை எடுப்பீர்கள். அரசியல்வாதிகள் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். கலை துறையினருக்கு வெற்றி கிடைக்கும். பெண்கள் குடும்பதை திறம்பட நடதி உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

பெற்றோரின் ஆசைகளைப் பூர்தி செய்வீர்கள். குடும்பதில் அமைதி நிறையும். பிறர் விஷயதில் தலையிடாதீர்கள். தொழில் மேம்படும். உதியோகஸ்தர்கள் தங்கள் பணிகளை திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். வியாபாரிகள் தனிதே முடிவுகளை எடுப்பீர்கள். விவசாயிகள் விவசாயப் பணிகளில் அக்கறையோடு நடப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு தொண்டர்களின் ஆதரவு கிடைக்கும். கலை துறையினர் போட்டிகளை தாண்டி வெற்றி பெறுவீர்கள்.பெண்கள் புதிய தோழிகளைப் பெறுவீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இல்லதில் சுபகாரியங்கள் நடக்கும். அரசு வழியில் ஆதரவு கிடைக்கும். நண்பர்களுடன் போட்டி போட வேண்டாம். உதியோகஸ்தர்கள் அலுவலகப் பணிகளில் அக்கறை செலுதுவீர்கள். வியாபாரிகள் கடுமையாக உழைப்பீர்கள். விவசாயிகள் பூச்சிகொல்லிகளைச் சரியான நேரத்தில் பயன்படுத்துவீர்கள். அரசியல்வாதிகள் பிரச்னைக்குரியவர்களை ஒதுக்குவீர்கள். கலை துறையினருக்கு பிறர் தேடிவந்து உதவுவார்கள். பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும். மாணவர்கள் தைரியதுடன் விளையாட்டுகளில் ஈடுபடுவீர்கள்.

# ‘இலங்கை மக்கள் அனைவரும் கைகோத்து போராட்டத்தை வலுப்படுத்துவோம்’



சென்னை மடல் -பகவான் சிங்-

கடந்த திங்கட்கிழமை, நவம்பர் 27, மாவீரர் நாளன்று, யூரியூபில் வெளியான ஒரு காணொலி பற்றிய சூடான வாத விவாதங்களில் நீங்கள் இன்னும் திணறிக்கொண்டிருப்பீர்கள். அதில், விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகள் துவாரகா என்று தன்னைக் கூறிக்கொள்ளும் பெண், ‘ஒரு முக்கிய மான நாளில்’ தான் நேரில் தோன்றவிருப்பதாகக் கூறு கிறார். நான்கு தசாப்தங்களாக தீவிரமாக தார்மீகக் கொள்கைகளைப் பின்பற்றி வந்த ஒரு பத்திரிகையாள னாக, அந்தப் பெண்மணி கூறிக்கொள்வது உண்மை என்று இறுதி ஆதாரம் வெளியாகி நிரூபிக்கப்படும் வரை, அவரை நான் ‘துவாரகா என்று கூறிக்கொள்ளும் பெண்’ என்றே குறிப்பிட விரும்புகிறேன். சேலை கட்டி யிருந்த அந்தப் பெண்மணி, “எத்தனையோ ஆபத்துகள், நெருக்கடிகள், சவால்கள், துரோகங்களைக் கடந்தே இன்று உங்கள் முன் நான் வெளிப்படுகின்றேன். ஒரு நாள், தமிழீழத் தாயகம் திரும்பி, எம் மக்களுக்கான பணிசெய்யக் காலம் வாய்ப்பளிக்கும் என்று அசையாத நம்பிக்கை எனக்குண்டு” என்று கூறுகிறார். இலங்கை இராணுவம், ஈழப்போரின் இறுதியில் பிரபாகரனும் அவரது குடும்பமும் உயிரிழந்து விட்டதாக அறிவிக்க வழிவகுத்த, மே 2009 முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு 14 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் காணொலி வெளியாகியுள்ளது.

இலங்கைத் தமிழில் பேசிய அந்தப் பெண்மணி, “தனித்து நின்று எங்களோடு போர் புரியத் திராணியற்ற சிங்கள அரசு, சக்தி வாய்ந்த நாடுகளைத் தன் பக்கம் வளைத்து, தோல்வியின் விளிம்பில் நின்ற தருணங்களி லெல்லாம், அந்நிய சக்திகளிடமும் சக்தி வாய்ந்த நாடுகளிடமும் மண்டியிட்டு யாசகம் புரிந்தது.” என்று கூறியிருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சுதந்திரப் போர் தொடரும் என்று உறுதியளித்த அவர், தமிழர்கள் தங்கள் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றி ணைய வேண்டும் என்ற அறைகூவலும் விடுத்திருக்கி றார். தமிழீழம் மட்டுமே சுயாட்சி மற்றும் வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்க முடியும் என்று கூறிய அவர், தமிழர் போராட்டம் என்பது சிங்கள மக்களுக்கு எதிரானதன்று என்றும், அப்பாவி சிங்கள மக்களைத் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டிவிடும் சுயநல சிங்கள அரசுக்கு எதிரானது என்றும் குறிப்பிட்டார். அந்தக் காணொலியின் மொத்த உள்ளடக்கத்தையும் இங்கு நான் குறிப்பிட வேண்டியதில்லை. நீங்கள் அனைவரும் இல்லையென்றாலும், பெரும்பாலானோர் என்னைப் போலவே இதைப் பலமுறை பார்த்து புளகாங்கிதம் அடைந்திருக்கலாம்.

திங்களன்று நள்ளிரவுக்குப் பிறகு ரொறன்ரோவைச் சேர்ந்த நண்பர் ஒருவர் இதை ‘வாட்ஸப்பில்’ அனுப்பி னார். அது எனக்கு ஆச்சரியமளிக்கவில்லை. காரணம், 1980- 90களில் ஈழப் போராளியாக இருந்த, லண்டனில் வசிக்கும் முக்கிய தமிழ்த் தலைவர் நண்பர் ஒருவர், சில வாரங்களுக்கு முன்னரே, விடுதலைப் புலிகளின் ஒரு பிரிவினர், பாதுகாப்பான நாடொன்றில் துவாரகாவைப் பேணி வருவதாகவும், மாவீரர் நாள் உரையின் மூலம் அவர் ஈழ அரசியலில் தனது வருகையைப் பதிவு செய் வார் என்றும் கூறியிருந்தார். அவரது உரையை, யூரியூப் மற்றும் பல்வேறு தமிழ்த் தொலைக்காட்சி சனல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் வாயிலாக உலகுக்கு முன் கொண்டு வருவது குறித்து ஆய்ந்து வருவதாக அந்தப் புலிகள் குழு அவரிடம் கூறியிருந்தது. “இந்த வீடியோ வரும்போது, பெரிய புயல் உருவாகும் அண்ணே. அது மட்டும் நிச்சயம். ஆனால், அதன் நம்பகத் தன்மை பற்றி எனக்கு இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்” என்றார்,

தொலைபேசியில் பேசிய எனது லண்டன் நண்பர், தன்னை துவாரகா என்று கோரும் இந்தக் காணொலி யைப் புறந்தள்ளும் புலிகள் ‘போட்டி’க் குழுவினர், இதை உருவாக்கியவர்கள், இந்தப் பெண்மணிதான் துவாரகா என்று நிரூபிக்கும் வகையில், தனது இளமைக் கால வாழ்க்கை மற்றும் பிற விவரங்களை வெளியிட வேண்டும் என்று கோருகின்றனர். இந்தப் போட்டிக் குழுக்கள், உண்மையிலேயே துவாரகா கடந்த கால இருண்ட வாழ்க்கையிலிருந்து இப்போது வெளிச்சத் துக்கு வந்தால், முள்ளிவாய்க்கால் கொடுமைக்குப் பிறகு, தாங்கள் பதுக்கிவைத்துள்ள, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சொத்துகளுக்குக் கணக்கு காட்டவேண் டுமே என்ற கவலையில் இருப்பதுடன், துவாரகாவின் தலைமையை ஆவலுடன் ஏற்கும் ஈழத் தமிழர்களுடன் இணங்கிச் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் சிக்கக் கூடும் என்ற அச்சத்தில், இந்தப் போட்டி புலிகள் குழு இருப்பதாக என் லண்டன் நண்பர் கூறியிருந்தார். உறக்கம் கலைந்த நான், ரொறன்ரோ நண்பர் அனுப்பிய காணொலியை நிதானமாகப் பார்க்க விரும்பி, எனது பணி மேசைக்கு வந்தேன். திங்கட்கிழமை நள்ளிரவு தாண்டி 20 நிமிடங்கள் கடந்திருந்தன. துவாரகா என்று தன்னைக் கூறிக்கொள்ளும் அந்தப் பெண்ணின் பத்து நிமிடக் காணொலியைப் பார்த்து முடித்த நான், மிகவும் உணர்ச்சி வசப்பட்டேன். தூக்கம் தழுவிய என் கண்கள் பனித்தன. தளர்ந்த என் உடலின் ரோமங்கள் குத்திட்டு நின்றன.



## ‘தங்கச்சி’ யாரோ? ஆனால், தகவுடைய சொல்!

அந்த கனடா நண்பருக்கு நான் வாட்ஸப்பில் அனுப் பிய பதில் செய்தி இதுதான்: “முள்ளிவாய்க்கால் படு கொலைக்குப் பிறகு, தப்பிச் சென்ற புலிகள் தலைவர்க ளும் தொண்டர்களும் உலகின் பல்வேறு பகுதிகளில் பல குழுக்களை அமைத்தனர். இயக்கத்தின் சொத்து களுக்காக ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டனர். அவற்றில் பலம் வாய்ந்த ஒரு குழுதான், துவாரகா உயிரு டன் இருப்பதாகவும், இந்த ஆண்டு மாவீரர் நாள் உரை யின் மூலம் ஈழ அரசியலில் அடியெடுத்து வைக்க விருப்பதாகவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. போட்டி புலிக் குழுக்கள் இதைப் பொய் என்று கூறிப் புறந்தள்ளி யதுடன், அவற்றில் ஒன்று, இதை நிரூபிக்க அந்தப் பெண்ணிடம் உண்மைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் கேள்விகளை எழுப்பவிருப்பதாகவும் கூறியது. இந்தக் காணொலியைப் பகிர்ந்ததற்கு நன்றி அம்மா. இது உண்மையாகவே இருக்கட்டும். அந்த உரை மிக வும் நன்றாக இருந்தது. மயிர்க்கூச்செறிந்து கண்ணீரை வரவழைத்தது. அவர் உயிருடன் இருந்து இதுவும் உண் மையாக இருந்தால், நானே அவரது உறுப்பினராகி விடுவேன்”

குட்டிமணி மற்றும் தங்கதுரையுடன் இணைந்து ஆயுதப் போராட்டத்துடன் நெருங்கிய தொடர்பிலி ருந்த ஒரு மூத்த ஈழத் தலைவருடனும் இந்தக் காணொ லியை பகிர்ந்தேன். துவாரகாவின் பழைய புகைப்படங் களை இந்தக் காணொலியில் இருக்கும் உருவத்துடன் ஒப்பிடும் வகையில் அனுப்பி, இது பொய் என்ற தனது வாதத்தை வலியுறுத்தினார் அவர். அந்தப் படங்களை இங்கு நான் உங்களுடனும் பகிர்கிறேன். நீங்களே இந்தப் புதிரை விடுவித்துக்கொள்ளுங்கள்.



என் ‘ஈழநாடு’ நண்பர்களே! ஏற்கெனவே, இந்த மாவீரர் நாள் உரையின் எதிர்வினைகளை நீங்கள் யூரியூபிலும் சமூக ஊடகங்களிலும் பார்த்திருப்பீர்கள். வெளிநாடு வாழ் ஈழத் தமிழர்களின் ஒரு பிரிவினர், இந்தக் காணொலி உண்மையானது என்றும் இத்தனை ஆண்டுகளாக, துவாரகா மறைந்து வாழும் நிலையில், இதை விடப் பாதுகாப்பான சூழலைக் கொடுக்கக்கூடிய ஒரு தேசத்தை அவர் அடைந்து விட்டால், சரியான நேரத்தில் அவர் தன்னை முழுமையாக வெளிப்படுத்திக் கொள்வார் என்றும் வலியுறுத்தி வருகின்றனர். மற்ற பிற தலைவர்கள் இதைப் போலி என்று முற்றிலும் புறக் கணிக்கின்றனர். இணக்கமற்ற சிங்கள அரசுக்கு எதிராக மீண்டும் ஈழ எதிர்ப்புக்கு உயிரூட்ட முயற்சி செய்யப் படுவதாக இந்திய உளவு அமைப்பான ‘றோ’ மீது சிலர் குற்றம் சாட்டுகின்றனர். மேலும் சிலர், இங்கிலாந்து, ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஈழத் தமிழர் வாழும் பிற பகுதிகளில், விடுதலைப் புலிகள் குழுக்களுக்கிடையில் நிலவும் மோசமான, சந்தர்ப்ப வாதப் பிரிவினைகளைப் பயன்படுத்தி, இலங்கை உளவு அமைப்புகள் இவற்றில் சிலவற்றுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு, ஈழ பூதத்தை அவ்வப்போது உயிர்ப்பித்து, புலிகள் ஆபத்து இன்னும் நாட்டுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் காட்டிக் கொள்வதன் மூலம், ஜெனீவாவில் உள்ள ஐ. நா. மனித உரிமைகள் ஆணையத்தில் தனது அரசுக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்த விழைவதாகவும் குற்றம் சாட்டுகி றார்கள். புலிகள் அமைப்பின் சொத்துகள் குறித்த தக ராறு மற்றும் அதன் குழுக்களுக்கிடையிலான ஒற்றுமை யின்மையை இலங்கை அரசின் அமைப்புகள் சாதகமா கப் பயன்படுத்திக்கொள்வதாக இலங்கை விவகாரங்க ளில் நீண்டகால நிபுணத்துவம்பெற்ற ஒருவர் என்னிடம் கூறினார்.

இங்கு பிரபலமான ‘இந்தியா டுடே’ இதழ், இலங்கை அரசுக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெளியிட்ட ஒரு செய்தியில், துவாரகா பிரபா கரன் என்ற பெயரில் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தக் காணொலி வெளியி டப்பட்டதாக அந்த அரசிடம் தகவல் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் காணொலி போலியானது என்று புறந்தள் ளும் பலருள், நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமரான விஸ்வநாதன் ருத்ரகுமாரனின் அறிக்கையைப் படித்தி ருப்பீர்கள். அதில், தனது அரசாங்கம், துவாரகாவின் பெயரில் வெளியான காணொலியை நம்பத்தகுந்ததாகக் கருதவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் அவர். காணொ லியைத் தீவிரமாக ஆய்வு செய்த பிறகே தனது அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும், பிரபாகரன் குடும்பத் தைச் சேராத ஒருவரை அவரது மகளாக முன்னிறுத்த சிலர் முனைந்திருப்பது வேதனையளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். காணொலியில் காணப்படும் அந்தப் பெண்மணி, தன்னை புலிகள் தலைவர் பிரபாகரனின் மகள் என்று நிரூபிக்க, மரபணுச் சோதனைக்கு உட்பட வேண்டும் என்ற கோரிக்கையை யாரேனும் முன்வைக் கக்கூடும். பிரபாகரனின் மரபணு மாதிரிகள் கொழும்பி டம் உள்ளன. மேலும் அவை, மஹிந்தா-கோட்டாபய சகோதரர்களுக்குத் துணையாக இந்தப் போரை முடிவுக் குக் கொண்டுவர வகைசெய்த இந்தியா மற்றும் பிற நாடுகளிடமும்கூட இருக்கக்கூடும். இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில், தமிழ்த் தேசியத் தலைவர் பழ நெடுமாறன், பிரபாகரன் நலமுடன் இருப்பதாகவும், இப்போது அவர் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளத் தக்க சூழல் நிலவுவதாகவும் அறிவித்தார். முள்ளிவாய்க் கால் படுகொலையைத் தொடர்ந்து நெடுமாறன், பிரபா கரன் உயிருடன் தப்பிப் பாதுகாப்பாக ஒரு நாட்டில் இருப்பதாகவும், காலம் கனிந்தவுடன் ஈழப்போரை மீண் டும் தொடர அவர் முன்வருவார் என்றும் கூறியிருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். இலங்கை அரசின் பாது காப்புத் துறை நெடுமாறனின் கருத்தை மறுத்ததுடன், முள்ளிவாய்க்கால் மோதலில் பிரபாகரன் கொல்லப்ப ட்டதற்கான மரபணு ஆதாரங்கள் தன்னிடம் இருப்ப தாகவும் உறுதியாகக் கூறியது. சென்னைப் புறநகரில் வசிக்கும் விடுதலைப் புலிகளின் புரட்சிக் கவிஞரான காசி ஆனந்தன், ‘துவாரகா’வின் மாவீரர் நாள் உரை யைப் போற்றியும், ஈழப்போருக்கான முழக்கத்தை முன் னெடுக்க இதுவே சரியான தருணம் என்று கூறியும் ஒரு காணொலி பேட்டியில் தெரிவித்திருக்கிறார். வெளி நாடு வாழ்வோர் உள்ளிட்ட அனைத்து ஈழத் தமி ழர்களுக்கும், நீண்ட காலமாக மறுக்கப்பட்ட, இலங் கைத் தமிழர்களின் கௌரவமான வாழ்வுரிமையைப் பெற, ஈழப் போரை உயிர்ப்பிக்கச் செய்ய, ஒன்றி ணைந்து துவாரகாவின் தலைமையை ஏற்குமாறு அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

துவாரகா என்று தன்னைக் கூறிக்கொள்ளும் பெண்மணி அந்தக் காணொலியில், எதிர்காலத்தில் இது அரசியல் போராட்டமாகத்தான் இருக்கும் என்று குறிப் பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது (அதாவது ஆயுதப் போர் அல்ல). முழுச் சுதந்திரத்துக்கான இந்தப் போரில் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றி ணையவேண்டும் என்றும் அனைத்துத் தமிழர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். அது மட்டுமல்லாமல், நேர்மையற்ற தங்கள் தலைவர்களின் கைகளில் பகடை களாகிவிட்ட சிங்கள மக்களுக்கு எதிராக வெறுப்பு ணர்ச்சியை வளர்த்துக்கொள்ளக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டி ருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

‘இன்பத்தமிழ்’ யூரியூப் சனல் நண்பரான அவுஸ்திரே லியாவின் சிட்னியைச் சேர்ந்த பிரபாகரன், லண்டனில் இருக்கும் புலிகள் நிர்வாகியான சேரமான் என்ற சிறிஸ் கந்தராஜா என்பவரின் பேட்டியை வெளியிட்டிருந்தார். அதில், சேரமான், இந்த வீடியோ உண்மையானது

(14ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# ஜனாதிபதி தேர்தலில் மக்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகள்



வீரகத்தி தனபாலசிங்கம்

இந்த கட்டுரையின் தலைப்பு சில வேளைகளில் உரிய காலத்துக்கு மிகவும் முந்திய - தருணப் பொருத்தமில்லாத ஒன்றாகவும் சிலருக்கு தோன்றலாம். ஆனால், இடையில் எதிர்பாராத விதமாக அல்லது அரசியல் சூழ்ச்சித்தனமான செயல்களின் விளைவாக ஏதாவது இடையூறுகள் வராமல் இருந்தால், ஜனாதிபதி விக்கிரமசிங்க அறிவித்திருப்பதன் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் நடந்தால் அடுத்த வருடம் இந்த நேரம் நாம் ஒரு புதிய ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் இருப்போம். அதனால் மக்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகள் குறித்து பேசுவது பொருத்தமானது அல்ல என்று கூறிவிடமுடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்களை எவ்வாறு அணுகிவந்திருக்கிறார் என்பதை இந்த பத்தியில் சில தடவைகள் அல்ல பல தடவைகள் எழுதியிருக்கிறோம். மீண்டும் ஒரு தடவை அதைப் பற்றி எழுதவேண்டிய தேவையை அவர் கடந்தவாரம் இந்தியாவின் பிரபரல்யமான ஊடவியலாளர் ஒருவரிடம் தெரிவித்த கருத்துக்கள் ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்தியாவின் Firstpost என்ற செல்வாக்குமிக்க இணையத்தள செய்திச் சேவையின் நிர்வாக ஆசிரியர் பால்கி சர்மாவுடன் யூரியூப் அலைவரிசையில் 'Vantage with Balki Sharma' என்று நிகழ்ச்சியில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.



“தனது ஆட்சிக்கால பொருளாதார செயற்பாடுகளை நியாயப்படுத்தி பெருவாரியான புள்ளிவிபரங்களுடன் அறிக்கையொன்றை வெளியிடடிருக்கும் மகிந்த ராஜபக்ச 2015 ஜனாதிபதி தேர்தலில் செய்த அரசியல் தவறை மக்கள் மீண்டும் செய்யக்கூடாது” என்று கேட்டிருக்கிறார்.

உள்நாட்டு விவகாரங்கள், பிராந்திய நிலைவரங்கள், சர்வதேச அரசியல் மற்றும் கிரிக்கெட் என்று பல்வேறு விவகாரங்கள் குறித்து பால்கி சர்மாவின் கேள்விகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி சர்ச்சைக்குரிய கேள்விகளுக்கு நழுவல் பதில்களைக் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

“நீங்கள் ஒரு சிறந்த இராஜதந்திரியாக இருக்கவேண்டியவர் என்று நான் நினைப்பதுண்டு. ஆனால் அரசியல்வாதியாக வந்துவிட்டீர்கள்” என்று ஜனாதிபதியைப் பார்த்து அந்த பெண் ஊடகவியலாளர் சிரித்துக்கொண்டு கூறினார்.

“அடுத்த வருட ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் போட்டியிடுவீர்களா?” என்று அவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த



விக்கிரமசிங்க தனது முதல் பணி பொருளாதாரத்தை ஒரு உறுதியான நிலைக்கு கொண்டுவருவதே என்று கூறினார். அதைச் செய்த பிறகு எத்தகைய முடிவை எடுப்பீர்கள் என்று கேட்கப்பட்டபோது முதலில் பொருளாதாரம் உறுதிப்பாட்டுக்கு வரட்டும், அதற்கு பிறகு எத்தகைய தீர்மானத்தை எடுப்பது என்று பார்க்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

வேளை உங்களைப் போன்று ஒரு ஊடகவியலாளராக வந்தாலும் வருவேன். உங்கள் செய்தி சேவையில் எனக்கு இடம் தருவீர்களா என்று பால்கி சர்மாவை நோக்கி ஜனாதிபதி நகைச்சுவையாக கேட்க அவரும் நிச்சயமாக உங்களை வரவேற்போம். உங்களிடம் இருந்து அறிய நிறைய இருக்கிறது என்று சிரித்த வண்ணம் பதிலளித்தார்.

முதன் முதலாக 1993 மேயில் பிரதமராக பதவியேற்ற விக்கிரமசிங்கவிடம் நேர்காணல் ஒன்றின்போது அரசியலுக்கு வரவில்லை என்றால் என்ன செய்திருப்பீர்கள் என்று கேட்கப்பட்டபோது பத்திரிகை ஆசிரியராக வந்திருப்பேன் என்று அவர் அளித்த பதில் இச்சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருகிறது. அவரின் குடும்பம் ஊடகத்துறையுடன் பின்னிப்பிணைந்தது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் ராஜபக்ஷக்களின் கட்சியின் ஆதரவைக் கோருவீர்களா என்ற பால்கி சர்மாவின் கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி தான் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், கட்சி அடிப்படையில் சிந்திக்காத ஜனாதிபதியாக செயற்பட்டு வருவதாகவும் கட்சி அடிப்படையில் சிந்திக்கவேணடிய நேரம் வரும்போது இந்த கேள்விக்கு பதிலளிப்பதாகவும் கூறினார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து திட்டவட்டமாக அவர் பதிலளிப்பதை தவிர்த்த மேலும் ஒரு சந்தர்ப்பமாக இந்த நிகழ்ச்சி அமைந்தது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் 2024 பட்ஜெட்டை சமர்ப்பித்த மறுநாள் தனது செயலகத்தில் பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்த ஜனாதிபதியிடம் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் எழுப்பிய கேள்விக்கும் நாட்டின் வங்குரோத்து நிலையை முடிவுக்கு கொண்டுவருவதில் முழுமையாக கவனத்தைச் செலுத்தியிருப்பதால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை என்றே அவர் பதிலளித்தார்.

இதேவேளை, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச கடந்தவாரம் பாராளுமன்றத்திலும் வெளியில் செய்தியாளர்கள் மகாநாட்டிலும் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டார் என்றும் ஏதேனும் சர்வதேச அமைப்பொன்றில் முக்கிய பதவியைப் பெற்றுக்கொண்டு அவர் தனது ஓய்வு காலத்தைக் கழிப்பார் என்றும் கூறியிருந்தார்.



வீரவன்ச அரசியலில் எல்லாம் தெரிந்தவர் என்ற தோரணையில் தான்தோன்றித்தனமாக பேசும் சுபாவத்தைக் கொண்டவர் என்றபோதிலும், அவர் கூறிய கருத்துக் குறித்து ஜனாதிபதியைச் சந்தித்த ஆளும் கட்சி அரசியல்வாதிகள் கவனத்துக்கு கொண்டுவந்தனர். அதற்கு பதிலளித்த அவர் தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பதை தீர்மானிப்பது வீரவன்ச அல்ல என்றும் அரசியலில் தொடருவதா இல்லையா என்பதை தானே தீர்மானிப்பார் என்றும் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சியில் இருந்து எதிரணிக்கு பாய்ந்தவர்களும் எதிர்க்கட்சிகளில் இருப்பவர்களும் தனது அரசியல் பயணத்தை ஏதோவொரு வழியில் முடக்கப்பார்க்கிறார்கள் என்று கூறிய ஜனாதிபதி, தனது அரசியல் பயணத்தை அவர்களால் ஒருபோதும் முடக்கமுடியாது என்று தெரிவித்ததாக செய்திகள் வெளியாகின.

தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஜனாதிபதி கூறுவதற்கு ஜனாதிபதி தொடர்ச்சியாக மறுத்து வருகின்ற போதிலும், அவருக்கு நிகராக அரசியல் அனுபவத்தையும் அறிவையும் சர்வதேச செல்வாக்கையும் கொண்ட வேறு எந்த அரசியல் தலைவரும் இல்லை என்று அவரின் அரசியலை வெறுப்பவர்களில் பலரும் கூட பகிரங்கமாகக் கூறுவதுண்டு.

இதுவரையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுமே தங்களை அறிவித்திருக்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கூட தனக்கும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் உத்தேசம் இருக்கிறது என்று சில மாதங்களுக்கு முன்னர் கூறினார். ஆனால் அதை யாரும் கணக்கெடுத்ததாக தெரியவில்லை.

அண்மைய கருத்துக்கணிப்புகள் சகலதுமே பிரேமதாசவை விடவும் திசாநாயக்கவே மக்கள் செல்வாக்கில் முன்னிலையில் நிற்பதாக கூறுகின்றன. ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.) வின் பொதுக்கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் மக்கள் பெருமளவில் அணிதிரண்டுவந்தாலும், அந்த ஆதரவு தேர்தல்களில் வாக்குகளாக மாறுவதில்லை என்ற இதுகாலவரையான நிலை இனிமேலும் அவ்வாறே தொடரும் என்று ஒருபோதும் கூறமுடியாது என்பதே அரசியல் அவதானிகளின் பரவலான அபிப்பிராயமாக இருக்கிறது.

கடந்த வருடத்தைய அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான அரசியல் சூழ்நிலையை அனுகூலமாகப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் செல்வாக்கை கணிசமானளவுக்கு தேசிய மக்கள் சக்தி வளர்த்துக்கொண்டிருக்கிறது. பாரம்பரியமான பிரதான அரசியல் கட்சிகள் மீதான வெறுப்பே இதற்கு முக்கிய காரணம்.

தேசிய மக்கள் சக்தியின் மக்கள் செல்வாக்கு கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் தூதரகங்களுக்கும் ஒரு மருட்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அமெரிக்க தூதுவர் உட்பட பல நாடுகளின் தூதுவர்கள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களை அடிக்கடி சந்தித்து பேசுகிறார்கள். அமெரிக்கா உட்பட மேற்குலக ‘ஏகாதிபத்தியங்களை’ கர்ணகடூரமாக எதிர்த்துவந்த அந்த தலைவர்கள் அந்த ‘தோற்றப்பாட்டை’ பெருமளவுக்கு மாற்றிக்கொள்ள விரும்புகிறார்கள் என்று தோன்றுகிறது.





“பாரம்பரிய அரசியல் முகாம்கள் மீது வெறுப்படைந்த ஆர்ஜன்டீன மக்களைப் போன்று பொருளாதாரத்தை நாசமாக்கிய ஊழல்காரர்களை பழிவாங்குவதற்கு அந்த முகாம்களுக்கு வெளியில் உள்ள தீவிரவாத சிந்தனைகொண்ட ஒருவருக்கு இலங்கை மக்கள் வாக்களிப்பார்களா?”

தங்களிடம் ஆட்சியை தந்துபார்க்குமாறு மக்களுக்கு அறைகூவல் விடுக்கும் அந்த தலைவர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு உள்நாட்டில் மக்களை அணி திரட்டுவது மாத்திரம் போதாது சர்வதேச சமூகத்தின் ஆதரவும் தேவை என்ற புரிதலுடன் தங்களது செயற்பாடுகளை முன்னெடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. பொருளாதாரக் கொள்கைகளை பொறுத்தவரையிலும் கூட மாறிவிட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



பனங்காட்டான்

# ஜனாதிபதித் தேர்தலுக்கும் அப்பால் விஜேவர்த்தன குடும்ப அரசியலை மீளெழுச்சி காண வைப்பதே ரணிலின் மூல இலக்கு!



2024ம் ஆண்டு என்பது இலங்கையில் தேர்தல் ஆண்டு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்திலும் பொதுவெளியிலும் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளதால், நிச்சயமாக தேர்தல்கள் இடம்பெறுமென்று எவராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது.

தேர்தல் சட்ட விதிகளின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் அடுத்தாண்டு அக்டோபர் மாதத்துக்குள் நடைபெற்றாக வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலை 2025 நடுப்பகுதிக்குள் எப்போது வேண்டுமானாலும் நடத்தலாம்.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து வரும் மகிந்தவின் பொதுஜன பெரமுனவினர் பொதுத்தேர்தலை 2024ல் நடத்த வேண்டுமென கோரவில்லை, நெருக்கவுமில்லை. ஆனால், தேர்தல் வேலைகளை முன்னெடுக்க ஆயத்தமாகியுள்ளனர். இந்த மாதம் 15ம் திகதி நடைபெறும் பெரமுனவின் முக்கிய கூட்டத்தில் இதுபற்றி முடிவெடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடக்கூடாது என்று கேட்பவர்களுடன் அரசியல் சித்து வியைாட்டு நடத்தும் நோக்குடன் இரண்டு தேர்தல்களும் 2024ல் நடத்தப்படுமென்று அறிவித்துள்ள ரணில், குட்டையைக் குழப்பியுள்ளார். இதன் வழியாக பேரம் பேசும் யுக்தி ஒன்றை இவர் கையாளுவது தெரிகிறது.

2024ல் பொதுத்தேர்தல் வேண்டாமென்று பெரமுனகாரர்கள் கேட்பார்களானால் அதற்கான பிரதியுபகாரமாக ஜனாதிபதி தேர்தலில் அவர்கள் பகிரங்கமாகத் தம்மை ஆதரிக்க வேண்டுமென்று அவர் கேட்பதற்கு கதவு திறக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ரணிலை தனிமையில் சந்தித்து உரையாடிய பசில் ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் பெரமுனவுக்கு அக்கறையில்லை என்று தெரிவித்ததன் ஊடாக, நாடாளுமன்ற தேர்தலை பெரும் சீரியஸாகப் பார்ப்பது தெரியவந்துள்ளது. இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் ரணிலைத் தவிர வேறெவரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடாதென்பதில் பெரமுன மிகவும் ஜாக்கிரதையாக உள்ளது.

கொழும்பு மையப்படுத்தி வரும் கருத்துக் கணிப்புகள் ஜே.வி.பி.யின் அனுரகுமார திசநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைவிட செல்வாக்குக் கூடியவராக இருப்பதாக தெரிவித்து வருகின்றன. ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் ஏகோபித்த வெற்றியைப் பெறக்கூடியளவுக்கு ஜே.வி.பி. தலைவருக்கான 'காலநிலை' இல்லையென்பதையும் சுட்டிக்காட்டுகின்றன.

பெரமுன உட்பட அனைத்து அரசியல் கட்சிகளையும் சிதறடித்து, அதன் வழியாக தமது இருப்பை ஸ்திரப்படுத்த ரணில் இதுவரை எடுத்து வந்துள்ள - இப்போது எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் பகிரங்கமானவை. இதுபோன்ற ஒரு முயற்சியில் அண்மையில் சஜித் பிரேமதாசவும் ஈடுபட்டார்.

கிரிக்கெட் விளையாட்டை அரசியலாக்கி, அதில் ஆதாயம் பெற அவர் எடுத்த முயற்சி இது. விளையாட்டுத்துறை அமைச்சர் றொசான் ரணசிங்கவை ரணிலுக்கு எதிராக 'விளையாட' வைத்த நிகழ்வு எதிர்பாராத விதமாக சுழன்று றொசானை வீழ்த்தி விட்டது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்த விளையாட்டுப் பற்றி இந்தப் பத்தியில் எழுதியபோது, 'அவுட்' ஆகப் போவது யார் என்ற கேள்வியை எழுப்பியிருந்தேன்.

எதிர்பார்த்ததைப் போன்று றொசான் ரணசிங்க 'அவுட்' ஆகியுள்ளார் அல்லது 'அவுட்' ஆக்கப்பட்டுள்ளார். கிரிக்கெட் விளையாட்டில் முக்கியமானது பந்து. இது எவர் கையில் இருக்கிறதோ அவரே விளையாட்டின் வெற்றியை அநேகமாக நிர்ணயிப்பவராக இருப்பார். இலங்கையின் அரசியலில் பந்து ரணிலின் கையில்தான் இருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மூன்று வாரங்களாக ஆட்டத்தை வேகமாக ஓடவிட்ட ரணில் தடாலென றொசானை அமைச்சர் பதவியிலிருந்து வீசி விட்டார். பெரமுனவின் ஆதரவுடனேயே தமது கதிரையை தக்க வைத்துக் கொண்டிருக்கும் ரணில் பெரமுனவின் முக்கியஸ்தர்களில் ஒருவரான றொசானை அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி எறிந்தமை சுவாரஸ்யமானது மட்டுமல்ல துணிச்சலானதும்கூட. இது பதவிகளை எதிர்பார்த்து நச்சரித்துக் கொண்டிருக்கும் மற்றைய பெரமுனக் காரர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

**வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டுமென்பதில் ரணில் ஆரம்பத்திலிருந்தே கரிசனையாகவும் சூட்சுமமாகவும் காரியங்களை ஆற்றி வருகிறார். அதேசமயம் அடுத்தடுத்த தேர்தல்களில் தமது தாய்வழி 'விஜேவர்த்தன' குடும்ப மீளெழுச்சியை ஏற்படுத்துவதே இவரது மூல இலக்கு.**

ரணிலுடன் றொசான் முட்டி மோதிக் கொண்டு மாறி மாறி அறிக்கைகளை விடுத்துக் கொண்டிருக்கையில் சில ஊடகங்கள், "றொசான்தான் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு எதிரான பொதுவேட்பாளர்" என்று அவரை உசுப்பேத்திக் கொண்டிருந்தன. இந்த வேளையில் ரணிலுக்குத் தெரியாமல் றொசானை அழைத்து சஜித் பிரேமதாச தனிமையில் உரையாடினார்.

சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ரணிலுக்கு சாதகமாக அமைந்தன. எதிர்க்கட்சித் தலைவரான சஜித்தை அமைச்சர் பதவி வகிக்கும் தான் சந்தித்ததற்கான காரணத்தை றொசானால் கூற முடியாத நிலையில், அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது. இதன் அடுத்த கட்டமாக ரணில் மேற்கொண்ட அமைச்சரவை நியமனங்கள் எல்லாவற்றுக்கும் உச்சமானது.

றொசானிடம் மூன்று அமைச்சுகள் இருந்தன. அவற்றுள் விளையாட்டுத் துறை, இளையோர் விவகாரம் என்பவற்றை ஹரின் பெர்னான்டோவிடமும், நீர்ப்பாசன அமைச்சை பவித்திரா வன்னியாராச்சியிடமும் கையளித்தார். இவ்விருவர் தெரிவும் மிக நுட்பமான அரசியல் முடிவுகள்.

சஜித் பிரேமதாச அணியிலிருந்து ரணில் பக்கம் தாவி அமைச்சர் பதவி பெற்றவர்களில் ஒருவர் ஹரின் பெர்னான்டோ. இவருக்கு மேலும் இரண்டு அமைச்சுகள் வழங்கப்பட்டது சஜித்துக்கு உக்ஷ்ணத்தை அதிகப்படுத்தியிருக்கும். பவித்திரா வன்னியாராச்சி ராஜபக்ஷக்களின் அரசியல் செல்லப்பிள்ளை. மகிந்த ஆட்சிக்காலத்திலும் கோட்டாபய ஆட்சியிலும் தொடர்ச்சியாக அமைச்சர் பதவி வகித்த ஒரேயொரு பெண்மணி. இவருக்கு மேலதிக அமைச்சு வழங்கியது மகிந்த தரப்புக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும்.

இத்தனை காரியங்களையும் நாசூக்காக மேற்கொண்டு வரும் ரணில் 2024



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டாரெனவும், சர்வதேச ரீதியான பதவி ஒன்றைப் பெற்று ஓய்வு காலத்தைக் கழிக்கப் போகின்றார் என்றும் தெரிவித்து விமல் வீரவன்ச தம்மை கேலிக்கூத்துக்கு உள்ளாக்கியுள்ளார். இதற்கு சுடச்சுட பதிலளித்த ரணில், உரிய நேரத்தில் தமது அறிவிப்பு வருமென கூறியுள்ளதுடன் தாம் போட்டியிடுவதை விமல் வீரவன்ச தீர்மானிக்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

1977ல் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும், பல்வேறு அமைச்சர் பதவிகளையும், நான்கு தடவைகள் பிரதமராகவும் இருந்தவர் ரணில். இவரது தீராத தாகமாக இருந்தது ஜனாதிபதிப் பதவி. ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரை காத்திருந்த இவர் 2020 ஆகஸ்ட் மாதத் தேர்தலில் தாமும் தோற்று தமது கட்சியையும் முழுமையாகத் தோற்கடித்தார்.

பல மாதங்கள் காத்திருந்து தேசியப் பட்டியலால் கிடைத்த ஒரேயொரு எம்.பி. பதவியை தமதாக்கி நாடாளுமன்றம் புகுந்த இவருக்குக் கிடைத்த அதிரஷ்டம் அறகலய. கூரையைப் பிய்த்துக் கொண்டு அதிர்ஷ்டம் கிடைக்கும் என்ற வாக்குக்கு ஒப்பாக பிரதமர் பதவியும் ஜனாதிபதி அந்தஸ்தும் அடுத்தடுத்து இவருக்குக் கிடைத்தன.

ஜனாதிபதிப் பதவியை மக்களின் நேரடி வாக்குகளால் தேர்தல் ஒன்றின் மூலம் மீளப்பெற்று அரசியலிலிருந்து ஓய்வு பெற வேண்டுமென்பதே இவரது விருப்பம். அதற்காகவே இப்பொழுது அத்திவாரமிட்டுக் கொண்டிருக்கிறார்.

2005 நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிடம் தோல்வி கண்டவர் இவர். வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் இத்தேர்தலை புறக்கணித்ததாலேயே ரணில் தோல்வியுற்றார் என்பது வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. இதன் பின்னர் 2010, 2015 ஜனாதிபதித் தேர்தல்களில் இவர் போட்டியிடவில்லை.

மாறாக, ராஜபக்ஷக்களின் அரசியல் பலத்தை உடைக்க வேண்டுமென்ற முனைப்பே இவரிடமிருந்தது. இதற்கான மறைமுக நடவடிக்கையாக மகிந்த தரப்பிலிருந்தவர்களை தம் பக்கம் இழுத்து அவர்களூடாக பொறி வைத்தார். யுத்த கால போர்த்தளபதியாகவிருந்து, பின்னர் ராஜபக்ஷக்களின் பரம விரோதியாக மாறிய சரத் பொன்சேகாவை 2010 தேர்தலில் பொது வேட்பாளராக களமிறக்கினார். பொன்சேகா வெற்றி பெறவில்லையாயினும் ராஜபக்ஷக்களை சிறிது ஆட்டங்காண வைத்தது இத்தேர்தல்.

2015ல் ராஜபக்ஷக்களின் மூத்த அமைச்சராகவிருந்த மைத்திரிபால சிறிசேனவை சந்திரிகா குமாரதுங்கவின் ஆதரவோடு வெளியே இழுத்து ஐக்கிய முன்னணியின் பொதுவேட்பாளராக நிறுத்தி மகிந்தவை தோற்கடித்தவர் இவரே. இதன் தொடர்ச்சியாகவே அறகலயவின் திரைக்குப் பின்னாலான இவரின் செயற்பாடுகளும் கிடைத்த பதவிகளும்.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலை ராஜபக்ஷக்களுக்கு ரணிலை எதிர்க்கவோ ஒதுக்கவோ முடியாதுள்ளது. தங்களின் இளவரசராக நினைக்கும் நாமல் ராஜபக்ஷவுக்கு அரசியல் பக்குவம் (வயது) வரும்வரை - அடுத்த ஐந்தாண்டுகளுக்கு தங்களுக்கு பங்கம் ஏற்படுத்தாது பார்த்துக் கொள்ளக்கூடிய ஒருவரை ஜனாதிபதிக் கதிரையில் வைத்திருப்பது அவர்களுக்கு அவசியமாகிறது.

அந்த நம்பிக்கையை ஊட்டக்கூடியதாக தமது நகர்வுகளை நெளிவு சுழிவாக முன்னெடுத்து வரும் ரணில், பெரமுனவின் அனைத்து விருப்புகளையும் (அமைச்சுப் பதவிகள்) நிறைவேற்றக் கூடியவர் அல்ல என்பதையும் செயலில் காட்டி வருகிறார். றொசானின் பதவி பறிப்பும் இரு வேறு தரப்பினருக்கு அவரின் அமைச்சுகளை பங்களித்தமையும் செயல் வடிவிலான இவரது எடுத்துக் காட்டு.

இவையெல்லாவற்றுக்கும் அப்பால் தமது தாய்மாமன் (ரைம்ஸ் பத்திரிகை நிறுவன அதிபர் றஞ்சித் விஜேவர்த்தன) மகனான றுவான் விஜேவர்த்தனவை ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவராக்கி, மாவட்ட அடிப்படையில் கட்சியைப் புனரமைக்கும் பணிகளை ஒப்படைத்து, தமது விசேட ஆலோசகர்களில் ஒருவராக அமர்த்தி, தமது வெளிநாட்டுப் பயணங்களின் போதெல்லாம் அவரையும் அழைத்துச் செல்லும் பின்னணியை மறைத்துவிட முடியாது.

ஜே.ஆரிடம் கற்றவைகளையும் பெற்றவைகளையும் அமைதியாக ரணில் விதைத்து வருகிறாரென்று சொல்லலாமா?

# பிரிட்டனில் சர்ச்சையை ஏற்படுத்தும் கிரேக்க, இந்திய கலைச் சிற்பங்கள்!

## ‘துண்டாடப்படும் மோன லீசா ஓவியம்’?

மாலி



வெளிநாட்டு விவகாரங்களால் பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் மற்றோர் அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறார். பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் புராதன கிரேக்க எல்ஜின் மாபிள் சிற்பங்கள் தொடர்பிலான விவகாரத்தில், ஐக்கிய இராச்சிய - ஐரோப்பிய ஒன்றிய உறவு ஓர் அச்சுறுத்தலுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. லண்டன் வந்திருந்த கிரேக்க பிரதமருடனான சந்திப்பை, பிரதமர் ரிஷி சுனக் திடீரென்று இரத்துச் செய்தார்.

உலகில், உன்னத கலைநயத்துடனான, அதி சிறந்த பாரம்பரிய சிற்பத் தொகுதிகளுள் ஒன்றாக, கிரேக்க நாட்டின் இந்த எல்ஜின் (Elgin) மாபிள் சிற்பங்கள் விளங்குகின்றன. கி. மு. 5ஆம் நூற்றாண்டில் பிடியாஸ் (Phidias) என்ற சிற்பியால் வடிக்கப்பட்ட இச் சிற்பங்கள் ஏதென்ஸ் தேவாலயத்தையும், ஏதென்ஸ் நகர்ப் பகுதியையும் அழகுபடுத்தியவை. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒட்டொமன் பேரரசு காலத்தில் அங்கு பிரிட்டிஷ் தூதராகவிருந்த 7ஆம் எல்ஜின் பிரபுவின் முகவர்களால் இச் சிற்பங்கள் யாவும் அங்கிருந்து அகற்றப்பட்டு, இங்கிலாந்துக்கு கொண்டுவரப்பட்டன.

மேலை நாகரீகத்தின் தோற்றுவாய் என்று, இந்த கிரேக்க பாரம்பரிய அழகுச் சிற்பங்கள் ஏதென்ஸ் நகருக்கு பெருமை சேர்ப்பவை. பிரிட்டனுக்கு கொண்டுவரப்பட்ட இச் சிற்பங்கள் பிரித்தானிய அருங்காட்சியகத்துக்கு விற்கப்பட்டு, இவை 1817இலிருந்து, இங்கு காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒட்டொமன் பேரரசால் இவை சரியாக பேணப்படாத ஆதங்கத்திலேயே இவற்றை அங்கிருந்து அகற்றியதாக, ராஜதந்தரியும் புராதன கலைப்பொருள் சேகரிப்பாளருமான எல்ஜின் கூறினார். ஆனால், ஒரு நாசகார செயலாக, இவற்றை அவர் அங்கிருந்து கொள்ளையிட்டதாகவே குற்றஞ்சாட்டப்பட்டார். ஏதென்ஸ் அழகைச் சிதைத்த குற்றவாளி என்று பைரன் பிரபு (பிரபல ஆங்கில கவிஞர்) கவிதை ஒன்று புனைந்தார்.

‘இந்த மாபிள் சிற்பங்கள் யாருக்கு சொந்தமானவை? இவை லண்டனிலேயே இருக்கவேண்டுமா?’ என்ற சர்ச்சை, பிரிட்டிஷ் - கிரேக்க அரசுகளிடையே தொடர்கிறது. ஒட்டொமன் பேரரசிலிருந்து 1832இல் சுதந்திரம் பெற்ற கிரேக்கம், இவற்றைத் தம்மிடம் திருப்பி கையளிக்க, தொடர்ந்து கோரி வருகிறது, 1983இல் லண்டன் வந்த கிரேக்க கலாசார அமைச்சர், கிரேக்க அரசின் உத்தியோகபூர்வ கோரிக்கையாக இதனை அப்போது முன்வைத்தார். இது சர்வதேச மயப்படுத்தப்பட்ட நிலையில், அடுத்த ஆண்டு பிரிட்டிஷ் அரசு, உத்தியோகபூர்வமாக கிரேக்க அரசின் கோரிக்கையை நிராகரித்தது.





இச் சிற்பங்கள் தமக்கு சட்டரீதியாக சொந்தமானவை என்றும், கிரேக்கத்துக்கு அவற்றை நிரந்தரமாக திருப்பியளிக்க முடியாது என்றும் பிரிட்டிஷ் அருங்காட்சியகம் கூறுகிறது. உலக பார்வையாளர்களின் பார்வைக்காக இவற்றைப் பேணி பாதுகாக்கும் சட்டரீதியானதும் தார்மீகமானதுமான பொறுப்பு தம்முடையது என்று அருங்காட்சியகம் தெரிவிக்கிறது. பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தின் மிக முக்கிய காட்சிப் பொருளாகும் இச் சிற்பங்கள், ஆண்டொன்றுக்கு 40 லட்சம் பார்வையாளர்களை ஈர்க்கின்றன.

1963ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் அருங்காட்சியக சட்டம், அருங்காட்சியகத்தின் தேட்டமாகும். எந்தவொரு காட்சிப்பொருளும் அங்கிருந்து அகற்றப்படுவதைத் தடுக்கிறது. எனின், சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினாலன்றி, கிரேக்க அரசின் கோரிக்கை சாத்தியமானதல்ல. ரிஷி சுனக் அரசாங்கமோ அல்லது எதிர்க்கட்சியோ இதற்கான எண்ணமெதனையும் கொண்டிருக்கவில்லை.

அரிதான சில கிரேக்க கலைப் படைப்புகளை பிரிட்டிஷ் அருங்காட்சியகத்துக்கு அளித்து, அங்குள்ள இந்த எல்ஜின் மாபிள் சிலைகளை கிரேக்க அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தும் ஒரு பரிவர்த்தனைத் திட்டம் - எவரும் இவற்றுக்கு உரிமை கொண்டாடாத உடன்பாட்டுடன் - கிரேக்க தரப்பில், பிரிட்டிஷ் அருங்காட்சியகத்துடனான ஆலோசனைகளுடனும் முன்னெடுக்கப்படுகிறது. கிரேக்க அருங்காட்சியகத்தில் அசலான கிரேக்க சிற்பங்களுடன், பிரிட்டிஷ் அருங்காட்சியத்திலுள்ள இந்த எல்ஜின் மாபிள் சிற்பங்கள், பிளாஸ்ரிக் ‘மாதிரி’களாக தற்போது காட்சிப்படுத்தப்படுகின்றன.

இந்த மாபிள் சிலைகள் எல்ஜின் பிரபுவால் கொள்ளையிடப்பட்டவை என்பது கிரேக்க அரசின் நிலைப்பாடு. ஆனால், ஏதென்ஸ் - லண்டன் சட்ட அதிகாரிகளின் பூரண அநுமதியுடனும், அவர்கள் இதனை முற்றிலும் அறிந்திருந்த நிலையிலுமே இவை கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கும் பிரிட்டிஷ் அருங்காட்சியகம், 1816இல் இடம்பெற்ற பிரிட்டிஷ் பாராளுமன்ற விசாரணை ஒன்றில், இவற்றைக் களவாடிய குற்றச்சாட்டிலிருந்து எல்ஜின் பிரபு விடுவிக்கப்பட்டதையும் முன்வைக்கிறது. ஆனால், ஒட்டொமன் பேரரசு காலத்து அநுமதியின் சட்ட அதிகாரத்தை கிரேக்கம் ஏற்க மறுக்கிறது

இங்கிலாந்துமீது சட்ட நடவடிக்கை எதையும் இது தொடர்பில் மேற்கொள்ளப்போவதில்லை என்று கிரேக்கம் 2015இல் தெரிவித்தது. 2013இல் தொடங்கப்பட்ட யுனெஸ்கோ அநுசரணையுடனான சமரச முயற்சியும் 2015இல் கைவிடப்பட்டது.

இந்த பின்னணியில், கடந்த வாரம் லண்டன் வந்திருந்த கிரேக்க பிரதமர் கீராகொஸ் மிற்சராகொஸ் (Kyriakos Mitsotakis), செவ்வாய்க் கிழமை பிரதமர் ரிஷி சுனக்குடனான தனது சந்திப்புக்கு முன்னதாக, பிபிசி தொலைக்காட்சியின் ஞாயிறு காலை அரசியல் அரங்கத்தில் தோற்றினார். “உங்களிடன் நான், மோன லீசா ஓவியத்தை இரண்டாக வெட்டி, பாரிசின் லூவர் அருங்காட்சியகத்தில் ஒரு பாதியையும், லண்டனின் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் மறு பாதியையும் வையுங்கள் என்று சொன்னால், பார்வையாளர்கள் அந்த ஓவியத்தின் அழகை ஆராதிப்பார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?” - என்று, எல்ஜின் மாபிள் விவகாரம் குறித்து அவர் அங்கு எழுப்பிய வினா, பிரதமர் அலுவலகத்தில் சங்கடத்தை ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் குறித்த ஒரு பிரச்சார மேடையாக தனது இங்கிலாந்து விஜயம் பயன்படுத்தப்படமாட்டாது என்று அளித்த உறுதிமொழியை அவர் மீறியதாக விசனம் தெரிவித்த பிரதமரின் டவுனிங் தெரு வாசஸ்தல வட்டாரம், கிரேக்க பிரதமருடனான பிரிட்டிஷ் பிரதமரின் சந்திப்பை ரத்துச் செய்ததில், நூற்றாண்டுகள் தொடரும் இப் பிரச்னை மீண்டும் புதிய கவனத்தைப் பெற்றது. உறுதிமொழி அளிக்கப்பட்டதை கிரேக்க தரப்பு மறுத்தது.

புவிசார் அரசியலில் முக்கியத்துவம் பெறும் ஐரோப்பிய ஒன்றிய - ‘நேட்டோ’ அங்கத்துவ நாடான கிரேக்கத்துடனான நட்பில், அரசியல் ரீதியில் இத்தகைய ஒரு முரண்பாடு தவிர்க்கப்பட்டிருக்க வேண்டியதென உள்ளூரிலும் ஐரோப்பிய நாடுகளிலும் கண்டனங்களும் ஆதங்கங்களும் எழுகின்றன. சந்திப்பை கடைசி நேரத்தில் பிரிட்டிஷ் பிரதமர் ரத்துச் செய்ததும், தனக்கு பதிலாக துணைப் பிரதமருடனான சந்திப்புக்கு ஏற்பாடு செய்ததும் பொதுவான ராஜதந்திர சம்பிரதாயங்களை மீறிய செயல்பாடுகள் என்று பிரிட்டனைக் கண்டிக்கும் ஐரோப்பிய ராஜதந்திர வட்டாரங்கள், பிரதமருடனான சந்திப்புக்கு முன்னதாக கிரேக்க பிரதமர் பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் கியர் ஸ்ராமரை (Keir Starmer) சந்தித்தமையும் சம்பிரதாயத்தை மீறிய ஒரு செயல்பாடே என்று தெரிவிக்கின்றன.

எல்ஜின் மாபிள் விவகாரத்தைவிட பிரிட்டனுக்கு மிகப் பெரும் சவாலாகப்போகும் விதத்தில், இந்தியா தனது பெறுமதியற்ற கலைப் பொருள்களை பிரிட்டனிடமிருந்து மீளப்பெற முயல்வதாகவும் செய்திகள் இவ்வேளையில் வெளியாகின. பிரிட்டிஷ் அருங்காட்சியகம், லண்டன் விக்ரோறியா அல்பேட் அருங்காட்சியகம் போன்ற, இங்கிலாந்தின் பல்வேறு நிறுவனங்களில் உள்ள ஆயிரக் கணக்கான கலைப்பொருள்களை இந்தியா மீளப்பெற எதிர்பார்ப்பதாக ‘டெய்லி ரெலிகிராப்’ பத்திரிகை செய்தி வெளியிட்டது. 1858இலிருந்து 1947 வரையிலான பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின்போது, நூற்றாண்டுக்கு மேலாக, இந்தியாவிலிருந்து கொணர்ந்து சேர்க்கப்பட்ட இவை, நெறியற்ற விதத்தில் அங்கிருந்து அகற்றப்பட்டன என்று இந்திய அதிகாரிகள் தெரிவிப்பதாக ‘டெய்லி ரெலிகிராப்’ தெரிவித்தது.

எனினும், இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட, தவறான செய்தி என்று இந்திய அரசாங்க வட்டாரங்கள் தெரிவிப்பதாக தெரிவித்த சென்னையின் ‘இந்து’ பத்திரிகை, இங்கிலாந்திலிருந்து சில கலைப் பொருகளை மீளப்பெறுவதில் இந்தியா தீவிரமாக இருப்பதாகவும் தெரிவித்தது. கோஹினூர் வைரம் மற்றும் சிற்பங்கள், சிலைகள் முதலான இந்திய கலைப்பொருள்களை இந்தியா மீளப்பெறும் பத்திரிகைச் செய்தியை, தொடர்பான இந்திய வட்டாரங்கள் மறுப்பதாக ‘என்டிரிவி’ யும் தெரிவித்தது.

பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் ஏராளமான இந்து சிலைகளும் அமராவதி சிற்பங்களும் இருக்கின்றன. மைசூரை ஆண்ட திப்பு சுல்தானின் ‘இயந்திர’ மரப் புலி, விக்ரோறியா அல்பேர்ட் அருங்காட்சியகத்தில் உள்ளது.

திப்பு சுல்தானுடனான மூன்றாவது தடவைப் போரில் அவனைக் கொன்ற கிழக்கிந்திய கம்பனி இராணுவம் நகரைக் கொள்ளையடித்து, அவனின் சொத்துக்களைச் சூறையாடி தமக்குள் பங்கிட்ட பின்னர், மன்னனின் இந்த மரப் புலியை கப்பலில் இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தது. முழு அளவிலான ஐரோப்பிய மனிதன் ஒருவனை வீழ்த்திக் குதறுவதுபோல் செதுக்கி வடிவமைக்கப்பட்டது இம் மரப் புலி.

1600 - 1830 காலப்பகுதியில் தெற்கு, கிழக்கு ஆசிய பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைப் பொருள்கள் இங்கிலாந்தின் வேல்ஸ் அருங்காட்சியகத்தில் உள்ளன. “இப் புராதன பொருள்களை மீளக் கொணர்வது அரசுக்கு மிக முக்கியமானது. பிரதமர் மோடி இதனைத் தனது தனிப்பட்ட முன்னுரிமையொன்றாகவும் கருதுகிறார்” என்று, இந்திய கலாசார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ‘டெய்லி ரெலிகிராப்’ குறிப்பிட்டிருந்தது.

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் தெரிவுகளும் வாய்ப்புகளும்!

கந்தையா அருந்தவபாலன்

இலங்கையின் அரசியலமைப்புக்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு செப்ரம்பர் மாதத்துக்கு முன்னர் நடைபெறும் என்பது பெருமளவுக்கு உறுதியாகியுள்ளது. அதற்கான தயார்ப்படுத்தல்களில் பிரதான தேசிய சிங்களக் கட்சிகள் இறங்கியுள்ளதுடன் வரும் ஜனவரி மாதத்திலிருந்து அவை மேலும் வேகம் பெறும் என்பதை எதிர்பார்க்கலாம். அதேவேளை வரும் ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு தமிழ்த்தரப்பு எதிர்கொள்வது என்பது பற்றி பிரதான தமிழ்க் கட்சிகள் தனித்தோ அன்றி கூட்டகவோ சிந்தித்ததாகவோ அன்றிக் கலந்துரையாடிதாகவோ செய்திகளில்லை. ஜனாதிபதித் தேர்தல் எமக்கானது அல்ல என்ற எண்ணம், கடைசி நேரத்தில் 'சுடுகுது மடியைப் பிடி' என்று செயல்படும் தமிழ்க் கட்சிகளின் அரசியல் பண்பாடு, தமிழ்க் கட்சிகளிடையேயான ஒற்றுமையின்மை போற்றவற்றுடன் முக்கிய சில தலைவர்களின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் என்பனவும் இத்தாமதத்திற்கான காரணிகளாக இருக்கக் கூடும். எனினும் தமது அரசியல் அபிலாசைகளை அடைவதற்குக் கிடைக்கக் கூடிய அத்தனை வாய்ப்புகளையும் பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்கும் தமிழ்த்தரப்பு வரும் ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு தம்மக்களுக்குச் சாதகமாக்கலாம் என்பது பற்றிக் கூட்டாகச் சிந்திப்பது அவசியமான தொன்றாகும். அவ்வகையில் வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்மக்களுக்கு முன்னுள்ள தெரிவுகள் யாவை, அத்தெரிவுகள் தொடர்பாக எதிர்பார்க்கக்கூடிய பலம், பலவீனம் எவை, மேற்கொண்ட தெரிவை செயற்படுத்துவதற்கான உத்திகள் யாவை என்பது தொடர்பாகக் கவனஞ் செலுத்துவது பயன்தரும்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமிழ் மக்கள் முன் மூன்று முக்கிய தெரிவுகள் உள்ளன.

1. தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணித்தல்.
2. தமிழ் மக்கள் சார்பில் பொதுத் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துதல்.
3. தேசியக் கட்சியொன்றின் வேட்பாளருக்கு ஆதரவளித்தல்.

வெற்றிகரமான தெரிவு என்பது கிடைக்கும் பல்வேறு வாய்ப்புகளில் மிகச்சிறந்ததொன்றைத் தேரந்தெடுத்தலாகும். எனினும் அரசியலில் தெரிவு என்பது சூதாட்டத்துக்கு ஒப்பானது. நாம் எதிர்பார்த்தது கிடைக்காமலும் போகலாம் என்பதுடன் அதுவே எமக்குப் பாரதூரமான பின்னடைவுகளையும் ஏற்படுத்தலாம். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக 2005இல் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற விடுதலைப் புலிகளின் தீர்மானத்தை அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுவதுண்டு. தேர்தலைப் புறக்கணித்தல் மற்றும் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துதல் இரண்டும் அடிப்படையில் ஒரே அரசியல் வெளிப்படுத்தலுக்கான வேறுபட்ட இரு உத்திகள். அதாவது ஜனாதிபதித் தேர்தல் சிங்கள மக்கள் தமது தலைவரைத் தெரிவு செய்வதற்கான ஒரு தேர்தல், இதானால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை, இதன்காரணமாக இப்போட்டியில் தமிழ் மக்கள் பங்கெடுக்க விரும்பவில்லை, இதிலிருந்து தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகள் வேறானவை, அந்த அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்த இதன் மூலம் தமிழ் மக்கள் ஒற்றுமைப் பட்டுள்ளார்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதே இவ்விரு தெரிவுகளின் நோக்கமாக இருக்கும். அதேபோல இவ்விரு தெரிவுகளுக்கான பலவீனங்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவையே. எனினும் ஒப்பீட்டு ரீதியில் எது வாய்ப்புக் கூடியது என மதிப்பிட முடியும்.

தேர்தலைப் புறக்கணிப்பது எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும்? இதனை வடக்கு கிழக்கின் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழும் செல்வாக்கின்கீழும் வைத்திருந்த விடுதலைப் புலிகள் 2005இல் மேற்கொண்ட தேர்தலைப் புறக்கணிப்பது என்ற தீர்மானத்தின் போது இடம் பெற்ற வாக்குப் பதிவுப் புள்ளி விபரங்களைக் கொண்டு மதிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

2005 இல் வடக்குக் கிழக்கில் பதிவான வாக்குகளின் சதவீதம் - தேர்தல் மாவட்ட ரீதியாக

யாழ் மாவட்டம் - 1.2 வீதம்
வன்னி மாவட்டம் - 34.3 வீதம்
மட்டக்களப்பு மாவட்டம் - 48.5 வீதம்
அம்பாறை மாவட்டம் - 72.7 வீதம்
திருகோணமலை மாவட்டம் - 63.84 வீதம்

தமிழர் பாரம்பரியப் பிரதேசம் என நாம் உரிமை கோரும் பிரதேசத்தில் யாழ் மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் தேர்தல் புறக்கணிப்பு வெற்றியடையவில்லை என்பதைத் இத்தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதற்கு வேறு பல காரணங்கள் இருக்கலாம். தொகுதியடிப்படையில் நோக்கினால் தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் வாக்களிப்பு சதவீதம் குறைந்த மட்டத்தில் இருந்தாலும் அதைக் கையாள்வது எமது தாயகக் கோட்பாட்டை நாமே கைகழுவுவது போலாகி விடும். இன்றைய சூழ்நிலையில் தேர்தல் புறக்கணிப்பு என்ற உத்தி முன்பைவிட இன்னும் மோசமாக இருப்பதற்கான வாய்ப்பே அதிகம். காரணம், ஒன்று இப்போது விடுதலைப் புலிகள் இல்லை. இரண்டாவது சனப்பரம்பலில் ஏற்பட்டுள்ள மாற்றம். மற்றது தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடுமா என்ற ஐயம். ஒன்றுபட்டாலும் அவற்றின் செயற்பாடுகள் ஒற்றுமையாக இடம்பெறுமா என்ற ஏக்கம், இன்னொன்று தமிழ்க் கட்சிகள் மீதான மக்கள் நம்பிக்கையில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியும் தமிழரிடையே தேசிய சிங்களக் கட்சிகளின் வளர்ச்சியும். இவற்றினடிப்படையில் நோக்கும்போது இப்போது தமிழ் மக்களின் பிரச்சினையை வடக்குப் பிரச்சினை என வர்ணிக்கும் சிங்களத் தலைவர்கள் எதிர்காலத்தில் யாழ்ப்பாணப் பிரச்சினை என மட்டுப்படுத்துவதற்கு தேர்தல் புறக்கணிப்பு வழிவகுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.







**பிரிந்து நிற்கும் தமிழ்த் தலைவர்கள் முதலில் ஒன்றுபட வேண்டும். அரசியல் சூதாட்டத்தில் வெற்றியைப் போல் தோல்விக்கான வாய்ப்பு சம அளவாக இருப்பினும் வெற்றி பெறுவதற்கான நிகழ்தகவை அதிகரிக்கும் வாய்ப்புகளும் உள்ளன.**

மேற்கூறிய பலவீனங்கள் பொது வேட்பாளராகத் தமிழர் ஒருவரை நிறுத்தும்போதும் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவற்றுக்கு மேலாகத் தமிழ்மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொது வேட்பாளர் ஒருவரை இனங்காண்பது மிகக் கடினம். ஜனாதிபதித் தேர்தலில் இவ்வாறான ஒரு தெரிவைத் தமிழர் தரப்பு எடுக்குமானால் அதற்குச் சம்பந்தன் பொருத்தமான ஒருவர் எனச் சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். சம்பந்தனுக்கு அவரது அன்றாடக் கடமைகளைச் செய்வதற்கே துணை தேவைப்படும்போது இது எவ்வளவுக்குச் சாத்தியமாகும். சம்பந்தன் எம்.ஜி.ஆரும் இல்லை. ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டு மக்களைப் போன்றவரும் இல்லை. அதேபோல இப்போதிருப்பது தந்தை செல்வா காலமுமன்று. அவரை விடுத்து வேறு ஏதாவதொரு கட்சித்தலைவரை நிறுத்துவதற்கு ஏனைய கட்சித் தலைவர்கள் முழுமனதுடன் உடன்படுவார்களா என்பதும் ஐயமே. ஏனெனில் எமது தலைவர்கள் தன்னைவிட இன்னொருவர் அவர் தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவரென்றாலும்கூட மக்கள் மத்தியில் பிரபலம் அடைவதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதற்கு மேலாக இச் செயற்பாட்டுக்கு பெருமளவு நிதியும் தேவைப்படும். அதை யார் வழங்குவது? ஏனைய தேர்தல்களில் தமது வெற்றி வாய்ப்புக்காக வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தமது சொந்த நிதியை வாரி இறைப்பது போன்ற நிலைமை இங்கில்லை. இத்தனை தடைகளைக் கடந்து பொது வேட்பாரை நிறுத்துவதன் மூலம் எதனைச்சாதிக்கப் போகிறோம்? இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் முறையில் செலுத்தப்பட்ட வாக்குகளில் 50 வீதத்திற்கு மேல் முதல் தடவையில் ஒரு வேட்பாளர் பெறாதவிடத்து ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணப்பட்டு சேர்க்கப்படும். அதுவும் போதாதவிடத்து மூன்றாவது விருப்பு வாக்குச் சேர்க்கப்படும். இம்முறையின் கீழும் ஒருவருக்கு 50 வீதம் மேல் ஒரு வாக்கேனும் கிடைக்காது போனால் மட்டுமே மீண்டும் தேர்தல் நடத்தப்படும். அந்நிலையில் மட்டுமே தமிழ்த்தரப்பு தமது வேட்பாளர் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் பேரம் பேச முடியும். இதுவும் மூன்றாவது தெரிவான தேசியக்கட்சியொன்றுடன் உடன்பாடு கண்டு அதற்கு ஆதரவளிப்பதை ஒத்ததே. நேரடியாகத் தொடவேண்டிய மூக்கை தலையைச் சுற்றித் தொடுவதற்கு ஒப்பானது. அதற்கும் வாய்ப்பும் கிடைக்க வேண்டுமே. இலங்கையில் இதுவரை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் சில சந்தர்ப்பங்களில் மிகக் குறைந்த வித்தியாசம் இருந்த போதும் முதல் எண்ணிக்கையிலேயே ஜனாதிபதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது எவ்வளவுக்கு நன்மை தரும் என்பது ஆழமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு உத்தியாகும். மாறாகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு காலதாமதமின்றி புறக்கணித்தல் அல்லது பொது வேட்பாளரை நிறுத்துவது என்பதில் தமது உறுதியை வெளிப்படுத்தினால் அது மூன்றாவது உத்திக்குக் கூடுதலான வலுவைத் தரக்கூடும்.

மூன்றாவது தெரிவான தேசியக் கட்சி ஒன்றுடன் நிபந்தனை அடிப்படையில் உடன்பாடு கண்டு அக்கட்சிக்கு ஆதரவளிப்பது, முதல் இரண்டு தெரிவுகளைவிட சாத்தியப்பாடு கூடியது எனினும் அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் நிச்சயமற்றவை. ட்ட்லி, சிறிமா, சந்திரிகா வரிசையில் இறுதியாக நல்லாட்சியில் ரணிலுக்கு முண்டு கொடுத்தது வரை தமிழர்கள் ஏமாற்றப்பட்டதே இலங்கையின் வரலாறு. இவற்றைப்போல இன்னொரு ஏமாற்றத்தை இத்தெரிவு தமிழர்க்குத் தரக்கூடும் என்பதற்காக முயற்சிகளைக் கைவிடவேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்போதுதான் உண்மையான நிலவரங்களை மதிப்பிட முடியுமாயினும் இன்றைய தென்னிலங்கை அரசியல் களநிலவரங்களின்படி அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் தமிழ்மக்களின் வாக்குகள் முன்னரைவிட அதிக கனதியுடையவையாகத் தென்படுகின்றன.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளராக சஜித்தும், தேசிய மக்கள் சக்தி சார்பில் அனுரகுமாரவும் போட்டியிடுவார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மைத்திரி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடும் நிலையில் இல்லை. ரணில் மற்றும் ராஜபக்ஷ தரப்பு என்ன முடிவெடுப்பார்கள் என்பதில் இதுவரை தெளிவில்லை. இத்தேர்தலில் போட்டியிடப் பெரிதும் விரும்பும் ரணில் வெற்றி வாய்ப்புக்கான களநிலைமைகளை உருவாக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது தெரிகிறது. குறிப்பாகக் கட்சி சார்பற்ற பொதுவேட்பாளர் என்ற பதாகையின் கீழ் ஏனைய கட்சிகளிலிருந்து உறுப்பினர்களை தம்பக்கம் சேர்த்து உறுதியான அடித்தளம் ஒன்றை உருவாக்க அவர் முயலுகிறார். அதில் அவர் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது போலத் தெரிகிறது. இம்முயற்சிகளில் அவர் வெற்றி பெற்று தேர்தலில் வெற்றி பெறுவதற்கான ஒளிக்கீற்று சிறிது தென்பட்டாலும் ஏனைய கட்சிகளில் மதில்மேல் பூனைகளாக இருப்போரும் உதிரிகளாக இருப்போரும் ரணில் தரப்புக்குப் பாய்வதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. அண்மைக்காலத்தில் அடிக்கு மேல் அடிவாங்கி வரும் ஒரு கட்சியாகப் பொதுஜன பெரமுன காணப்பட்டாலும் இன்றும் கிராம மட்டத்தில் அதற்கு உறுதியான வாக்கு வங்கி இருப்பதுடன் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான உத்திகளைச் சிறப்பாகக் கையாளும் வல்லமையும் அக்கட்சிக்கு நிறையவே உள்ளது. இருந்தாலும் இன்றைய களநிலைமைகளில் அக்கட்சி தனித்து நின்று தேர்தலில் வெல்வதற்கான வாய்ப்புகள் துளியும் இல்லை. அது அவர்களுக்கும் தெரியும். அதனால் அவர்கள் தாம் மீண்டெழுவதற்கான வாய்ப்புகளையும் காலத்தையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை. இதற்கு இப்போது உள்ளவர்களில் மிகப் பொருத்தமானவர் ரணில் மட்டுந்தான் என அவர்கள் கருதுகிறார்கள். இதனால் வரும் தேர்தலில் ராஜபக்ஷ தரப்பு ரணிலுக்கு ஆதரவளிப்பதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளது. குறிப்பாக பஷில், கோதாபய போன்றோர் ரணில் பக்கம் நிற்பதாகத் தெரிகிறது. மறுபுறத்தில் ரணிலுக்கு ராஜபக்ஷக்களின் ஆதரவு தேவையென்றாலும் தான் அவர்களில் தங்கியிருக்கவில்லை என்ற

(14ஆம் பக்கம் பார்க்க)

# கனடா தாய்வீடு: இம்மாதம் தாமரைச்செல்வி சிறப்பிதழ் வெளியீடு

அவுஸ்திரேலியா குவின்ஸ்லாந்து மாநிலத்தில் வதியும் எழுத்தாளர் தாமரைச் செல்வியின் அரை நூற்றாண்டு கால இலக்கியப் பணியை ப்பாராட்டி கனடாவிலிருந்து வெளியாகும் தாய்வீடு மாத இதழ் சிறப்பிதழ் வெளியிட்டுள்ளது.




இம்மாதம் (டிசெம்பர் ) வெளியாகியிருக்கும் தாய்வீடு சிறப்பிதழில் இதர ஆக்கங்களுடன், தாமரைச் செல்வியின் எழுத்துலகம் குறித்த கட்டுரைகளின் விசேட இணைப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

தாமரைச்செல்வியின் வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் ஆக்கங்களை எழுத்தாளர்கள் சி. கருணாகரன், லெ. முருகபூபதி, யசோதா பத்மநாதன், சார்ள்ஸ் குணநாயகம், ரஞ்ஜனி சுப்பிரமணியம், தமிழக படைப்பாளி இந்திரன், சந்திரா இரவீந்திரன், ஆகியோர் எழுதியிருக்கின்றனர். தாரைச்செல்வியுடனான நேர்காணலை சேகர் தம்பிராஜா எழுதியுள்ளார்.

ஓவியராகவும் திகழும் தாமரைச்செல்வியின் சில ஓவியங்களும் இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் கடந்த காலங்களில் தாமரைச்செல்வியை பாராட்டி அட்டைப்பட அதியாக அவரை கௌரவித்த இலக்கிய இதழ்களின் முகப்புகளும் வெளிவந்துள்ளன.

கடந்த செப்டெம்பர் மாதம், அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கமும் தனது 23 ஆவது தமிழ் எழுத்தாளர் விழாவில் தாமரைச்செல்விக்கு இலக்கிய சாதனையாளர் விருது வழங்கி பாராட்டியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளிவிழா






கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளிவிழா 01.12 . 2023 வெள்ளி காலை 9 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டு திருப்பலியை ஒப்புக் கொடுத்ததுடன் ஆசிரிய மாணவர்களுக்கு விசேட அருட்பிரசாதம் வழங்கி ஒளிவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான பதக்கங்களை சூட்டியும் சான்றிதழ்களை வழங்கியும் கௌரவித்தார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் கே. ஜெ பிரட்லி கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பங்கு அருட்தந்தை எம.எல்.மொன்பேட் அடிகளார் மற்றும் மறைக்கல்வி நடுவு நிலைய இயக்குனர் அருட்பணி டபிள்யூ.ஜேம்ஸ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிறிஸ்தவ மன்ற காப்பாளர் விரிவுரையாளர் பிரபாலினி தனம் பிரதி அதிபர் த. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்

நிகழ்வில் இனிய விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம் சிரேஷ்ட விரிவுரையாளர்களான திருமதி பப்சி மரியதாஸ், திருமதி எஸ். கெலன் மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரியின் மாணவ ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.




கலாசாலையின் அண்மைக்கால வர லாற்றில் முதன்முறை யாக பேராயர் ஒருவர் கலாசாலைக்கு வருகை தந் தமை இதுவே முதல் தடவை ஆகும். கலாசாலைக்கு வருகை தந்த பேராயரைக் கலாசாலை சமூகத்தினர் தவில் நாதஸ்வர இசையுடன் வாயிலிருந்து மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். பேராயர் தனது வருகையின் போது கலாசாலையில் அமைந்துள்ள மரியன்னை சிற்றாலயத்தையும் தரிசித்தார். நிகழ்வில் சிறப்பு கௌரவமாக கலாசாலையில் கத்தோலிக்க சமய பாடத்தை திறம்படப் போதித்த விரிவுரையாளர் பா. பாலகுமார் பேராயரால் கௌரவிக்கப்பட்டார்.

---

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**எஸ், கிருஷாந்த்,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பழங்கால இந்து ஆலயங்களை அழித்து பௌத்த விகாரைகள், மடாலயங்களை அமைக்கும் முயற்சியை தடுப்பதற்கு பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான மத்திய அரசு தலையிட வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் எம்.பியுமான தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளாரே.

**வியுக்தியார்:** அவருக்கு அந்த விசயம் தெரியாது போலும், பாரதீய ஜனதாக்கட்சி அரசு இப்போது சிறிலங்காவிலுள்ள அனைத்து பௌத்த விகாரைகளுக்கும் சூரிய ஒளியில் மின்சாரம் வழங்குகின்ற விடயத்தில் அல்லவா கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றது. அவர் வேண்டுமானால், அப்படி விகாரைகளுக்கு ஒளியேற்றுகின்றபோது, இப்படி இந்துக் கோவில்களை அழித்து கட்டப்பட்ட விகாரைகளுக்காவது உதவி செய்யாதீர்கள் என்று அல்லவா கேட்டிருக்கவேண்டும்.

---

**த. பிரதீபன்,**
**சின்ன உப்போடை, மட்டக்களப்பு**

**கேள்வி:** இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் சி. சிறீதரன், எம். ஏ.சுமந்திரன் ஆகியோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனராமே. அது என்ன எப்போதும் யாழப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் தான் தலைவராக இருக்கவேண்டும் என்று எழுதப்படாத விதி ஏதாவது தமிழரசு கட்சி யாப்பில் இருக்கின்றதா?

**வியுக்தியார்:** ஒரு கட்சி என்று வந்துவிட்டால், அதன் தலைமைப் பதவிக்கு வருவதற்கு எல்லோரும் விரும்புவது வழமைதானே. அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காக, அவர்களில் ஒருவர்தான் தலைவராக வர வேண்டும் என்பதில்லையே. தமிழரசுக்கட்சியின் பாரம்பரியம்போல, இருவர் போட்டியிட்டால் யாராவது ஒருவர் பின்னர் வாபஸ்பெற்றவிடுவார், அல்லது கட்சியிலுள்ள மற்றவர்கள் தலையிட்டு இருவரையும் தவிர்த்து வேறு ஒருவரை தலைவராக போட்டுவிடுவார்கள். இதுதான் ஆண்டாண்டு காலமாக நடந்துகொண்டிருக்கின்றது. அது சரி, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சம்பந்தன் ஐயா தலைவராக இருந்ததுபோல, இந்த முறையும் கிழக்கிலிருந்து ஒருவர் ஏன் தலைமைப் பதவிக்கு போட்டியிட முன்வரவில்லை என்பது தெரியவில்லையே. நீங்கள் (கிழக்கு மாகாணத்தவர்) போட்டியிடாமல் இருந்துகொண்டு யாழ்ப்பாணத்தவர்தான் வர வேண்டுமா என்று கேட்பது சரியானதல்லவே.

---

**கே. கோகுலன்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**

**கேள்வி:** பதில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டமையை கடுமையாக எதிர்ப்பதாக தெரிவித்துள்ள பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை அவமதிக்கும் செயலாகும் என்றும் குறிப்பிட்டுள்ளாரே.

**வியுக்தியார்:** யாரை நியமித்தாலும் அவர் இப்படித்தான் சொல்லியிருப்பார். இன்று பொலிஸ் மா அதிபராக வருவதற்கு தகுதி உள்ள அனைவருமே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றபோது பொலிஸ் திணைக்களத்தில் உயர் பதவியில் இருந்தவர்கள்தான். பேசாமல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையையே அரசியலமைப்பு பேரவைக்கும் நியமித்துவிட்டால் பரவாயில்லை.

**க.சுகிர்தகுமார், பூவரசங்குளம், வவுனியா**

கேள்வி: மின்சார கட்டணம் மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது என்று திறைசேரியின் பிரதி செயலாளர் ஏ. கே. செனவிரட்ன அரச நிதி செயல்குழுக் கூட்டத்தில் வைத்து தெரிவித்துள்ளாராமே. இப்படியே எல்லாவற்றையும் அதிகரித்துக்கொண்டே போனால் என்ன நடக்கும்?

**வியுக்தியார்:** என்ன நடக்கும் என்பது தெரிந்து கொண்டுதானே அதிகரிக்கிறார்கள். இப்படியே அதிகரித்துக்கொண்டு போனால், புதிதாக ஆட்சிக்கு வருபவர் அதனை ரத்துச் செய்வார், அப்படி ரத்துச் செய்தால் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படும். அரகலய வரும். அப்படி வந்தால் மீண்டும் ஜனாதிபதி ஆகலாம் என்று நினைக்கிறாரோ தெரியவில்லையே. என்ன, இப்போது தொழில்துறையினர்தான் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இனி இங்குள்ள சிறிய நிறுவனங்களும் மூடப்படும். அதன்பின்னர், சாதாரணர்களும் வெளியேறுவார்கள். அவ்வளவுதான்.

---

**வை. சிவலோகலிங்கம் குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** ‘தமிழரசு கட்சியின் தலைமைக்கு இருவர் போட்டியிடுகிறார்கள் என்று சொல்வது தவறு. பலரின் பெயர்கள் முன்மொழியப்படுகின்றன. கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் 200இற்கும் மேற்பட்ட வர்கள் கூடி வாக்களித்து தீர்மானிப்பார்கள். எவர் வெற்றி பெற்றாலும் இணைந்து கட்சி அங்கத்தவர்களாக நாங்கள் செயல்படுவோம்” என்று தலைவர் பதவிக்கு போட்டியிடும் சுமந்திரன் எம்.பி. தெிவித்திருக்கிறாரே. இதனை இப்போதே அவர் தோல்வியை ஒப்புக்கொள்வதாக எடுத்துக்கொள்ளலாமா?

**வியுக்தியார்:** அதனை ஏன் தோல்வியை ஒப்புக்கொள்வதாக எடுத்துக்கொள்கின்றீர்கள்?. தான் வெற்றிபெற்றாலும், தோல்வியடைந்தவர்களை நோக்கி அவர் விடுக்கும் அழைப்பாகவும் எடுக்கலாம்தானே. ஆனாலும், இருவர் மட்டும்தான் போட்டியிடுகிறார்கள் என்று சொன்னது தவறு என்பது சரியானதுதான். கடந்த ஜனாதிபதி தேர்தலில் சுமார் இருபதுபேர் போட்டியிட்டார்கள். ஆனால் சஜித்துக்கும் கோட்டாவுக்குமிடையே தானே போட்டி நடந்தது. அதுபோலத்தான் பலர் போட்டியிட்டாலும் இருவர் இடையேதான் போட்டி என்றுதானே ஊடகங்கள் சொல்லும்.

# ரஷ்யா - ஆபிரிக்கா நட்புறவு உச்சி மாநாடு:
## புர்கினா பாசோவின் இளம் தலைவர் இப்ராகிம் தரோரே!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

சர்வதேசத்தின் முழுக்கவனமும் காசாவிலும், உக்ரேனிலும் மூழ்கிப் போயிருக்க, ரஷ்யாவின் ஆபிரிக்கா நோக்கிய இராஜதந்திர உறவுகள் சத்தமின்றி அமைதியாக வலுப்பெறுகிறது.

தற்போது மேற்கு ஆபிரிக்காவில் பிரான்சின் ஆதிக்கம் பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதற்கு முன்பாக ஜீலை இறுதியில் உலகின் முக்கியமான மாநாடு பீட்டர்ஸ்பர்க் நகரில் நடைபெற்றது.

ஆயினும் மேற்கத்தய ஊடகங்கள் இந்த மாநாட்டினை இருட்டடிப்புச் செய்திருந்தன. ரஷ்யா - ஆபிரிக்கா உச்சி மாநாடு 2023 ஜூலை 27-28 திகதிகளில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடைபெற்றது. நீண்ட பல ஆண்டுகளின் பின் நடந்துள்ள இந்த மாநாடு உலக அரசியல் அரங்கில் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. ஆபிரிக்க கண்டத்தில் மொத்தமுள்ள 54ல் 49 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இம்மாநாட்டில், இப்ராகிம் தரோரே உள்பட 17 ஆபிரிக்க நாடுகளின் ஜனாதிபதிகளும் பங்கேற்றார்கள். ரஷ்யா - உக்ரைன் போர் நீடித்து வரும் நிலையில், இந்தப் போரை முன்னிறுத்தி அமெரிக்கா தலைமையிலான நேட்டோ ராணுவக் கூட்டணி ரஷ்யாவை சுற்றி வளைத்து போரிடுகிறது.

இந்நிலையில் ஆபிரிக்க நாடுகளுடன் ரஷ்யா தனது உறவை வலுப்படுத்து வருகிறது. அமெரிக்கா மற்றும் பிரான்ஸ்க்கு எதிராக மேற்கு ஆபிரிக்க நாடுகள் எழுந்துள்ள நிலையில் அவர்களுக்கு உடனடியாக ஆதரவு தெரிவித்து, நேரில் அழைத்து உறவுகளை ரஷ்யா பலப்படுத்து வருகிறது.






இது போன்ற நிகழ்வுகள் இன்றைய உலக அரசியல் அரங்கில் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவை. ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு உள்ளவை. ஆயினும் வேண்டுமென்றே மேற்கத்தய ஊடகங்கள் இந்த மாநாட்டினை இருட்டடிப்புச் செய்திருந்தன.

ஆபிரிக்காவின் இளம்தலைமுறை நாயகனாக விளங்கும் கேப்டன் இப்ராகிம் தரோரே செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடந்த ரஷ்யா - ஆபிரிக்கா மாநாட்டில் ஒரு கதாநாயகனைப் போல வரவேற்பு பெற்றார்.

இம்மாநாட்டின் மைய நோக்கமாக, அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏக ஆதிக்கத்தை கட்டுப்படுத்த ஆபிரிக்கா நாடுகள் முயன்றன.

இந்த மாநாட்டில் இப்ராகிம் தரோரே ஆற்றிய உரை துள்ளல் மிக்கது. இளமைத் துடிப்புமிக்கது. பல்லாண்டு காலமாக அடிமைகளாக இருக்கும் தங்களது மக்களை விடுவிக்க வேண்டும் என்ற ஆபிரிக்க இளைய தலைமுறையின் ஆக்ரோசத்தை வெளிப்படுத்தியது.

**மேற்கு ஆபிரிக்காவில் நடப்பது என்ன?**

மாலி மற்றும் சஹேல் பிராந்தியம் முழுவதும் பிரெஞ்சு ஆதிக்கத்தில் 2022 வரை இருந்தது. தற்போது மக்கள் எதிர்ப்பினை தீவிரமாக வெளிக்காட்டி வருகின்றனர். முன்பு மாலி மற்றும் நைஜரில் உள்ளதைப் போலவே புர்கினா பாசோவிலும் (Burkina Faso)இராணுவ ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது.

பிரெஞ்சு மற்றும் நேட்டோ துருப்புக்களின் பிரசன்னத்திற்கு எதிராக பாரிய வேலைநிறுத்தங்கள் மற்றும் எதிர்ப்புக்கள், மதிப்பிழந்த பிரெஞ்சு சார்பு ஆட்சியாளர்களை அகற்றுவதற்கு போராட்டங்கள் வலுப்பெற்றுச் சென்றன.

புர்கினா பாசோ, நைஜர், மாலியில் முன்னாள் காலனித்துவ சக்தியான பிரான்சை தங்கள் நாடுகளில் இருந்து, அதனது படைகளை திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொண்டன.

தற்போது மேற்கு ஆபிரிக்கா முழுவதும் அரசியல் ரீதியாக பிரான்சை எதிர்க்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆயினும் புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் மீது படையெடுப்பதற்கு தயாராகுமாறு மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகம் மீது பிரெஞ்சு அழுத்தம் கொடுக்கிறது. அக்டோபர் மாத தொடக்கத்தில், இந்த மூன்று நாடுகளும் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை, சஹேல் அரசுகளின் கூட்டமைப்பு என்பதை உருவாக்கிக் கொண்டன.

இந்த மூன்று நாடுகளில் ஒன்றிற்கு எதிரான படையெடுப்பு முயற்சிக்கு,

> ஆபிரிக்கா நோக்கிய ரஷ்யாவின் இராஜதந்திர உறவுகள் சத்தமின்றி அமைதியாக வலுப்பெறுகிறது. ரஷ்யா - ஆபிரிக்கா உச்சிமாநாட்டில் 49 ஆபிரிக்க நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் பங்கேற்றனர்

இந்த மூன்று நாடுகளுக்கும் எதிரான தாக்குதலாகும் என்று கருதி, இந்த மூன்று நாடுகளும் சேர்ந்து பதிலளிப்பார்கள் என்று இந்த ஒப்பந்தம் குறிப்பிடுகிறது.

பாரிஸின் காலனித்துவ கொள்கைகளை விமர்சித்துவந்த ஆபிரிக்க ஆட்சிகளை வெளியேற்றுவதற்கு, ஆபிரிக்க நாடுகளில் பல சதிப்புரட்சிகளை பிரான்ஸ் மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளது.

1987 இல், புர்கினா பாசோவில், சோவியத் சார்பு ஜனாதிபதி தோமஸ் சங்கராவை தூக்கியெறிந்து கொலை செய்த பிளைஸ் கம்போரேவை பிரெஞ்சு அரசாங்கம் ஆதரித்தது.

ஆபிரிக்காவின் மிக மோசமான அகதிகள் நெருக்கடிகளில் ஒன்றான, புர்கினா பாசோவில் நடந்துவரும் சண்டையால் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் பல்லாயிரக்கணக்கானோர் பட்டினியின் விளிம்பிற்கும் தள்ளப் பட்டுள்ளனர்.

**புர்கினா பாசோ இராணுவப் புரட்சி**

கடந்த செப்டம்பரில் நடந்த சதிப்புரட்சியை முறியடித்ததாக புர்கினா பாசோவின் ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். செப்டம்பர் 2022 இல் புர்கினா பாசோவில் இளம் தலைவர் கேப்டன் இப்ராகிம் தரோரே பதவிக்கு வந்த ஒரு வருடத்திற்குப் பிறகு, இந்த தோல்வியுற்ற சதி முயற்சி நடந்துள்ளது.

பொது மக்கள் பாதுப்பை தொடர்ந்து உறுதி செய்யும் அனைத்து புர்கினா மக்களுக்கும் நன்றி என்று இப்ராகிம் தரோரே தெரிவித்தார்.

சுமார் 23 மில்லியன் மக்கள் வசிக்கும் புர்கினா பாசோவில், கடந்த ஆண்டில் மட்டும் இரண்டு இராணுவப் புரட்சிகளைக் கண்டுள்ளது. 2022 செப்டம்பர் பிற்பகுதியில், கப்டன் தராரே ஆட்சியைக் கைப்பற்றினார்.

**அடிமைத்தனத்திற்கு எதிராக கிளர்ச்சி**

ஓர் அடிமை, அந்த அடிமைத்தனத்திற்கு எதிராக தான் நடத்தும் கிளர்ச்சி, யாராலும் இரக்கத்துடன் பார்க்கப்படக் கூடாது என்றே விரும்புவான். நாங்கள் ஒருபோதும் எங்களுக்காக வருத்தப்படவில்லை. எங்களுக்காக யாரும் வருத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை என்ற இப்ராகிம் தரோரின் முழக்கம் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் மட்டுமல்ல, மேற்கத்திய சக்திகளின் உலகிலும் எதிரொலித்தது.

வறுமைக்கு எதிரான போராட்டத்தை ஒட்டுமொத்த ஆபிரிக்கர்களும் பெரும் எழுச்சியுடன் நடத்த வேண்டிய தருணத்தில் இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆபிரிக்காவில் மக்களின் அடிமைத்தனத்திற்கு எதிராக தாங்கள் நடத்தும் போராட்டத்திற்கு இதற்கு முன்பும் இப்போதும் பெரும் ஆதரவு அளிக்கிற ரஷ்யாவை நன்றிப் பெருக்குடன் பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

**ரஷ்யாவின் உதவி :**

இரண்டாம் உலகப்போரின் நாசிகளின் பிடியிலிருந்து இந்த உலகையே பாதுகாப்பதற்காக ரஷ்யா (சோவியத் ஒன்றியம்) செய்த தியாகங்கள் அளவிட முடியாதவை. எங்களது ஆப்பிரிக்க மக்கள், எங்களது மூதாதையர்கள், நாசிசத்தின் பிடியிலிருந்து - பாசிசத்தின் பிடியிலிருந்து ஐரோப்பா தன்னை விடுவித்துக் கொள்வதற்காக பலவந்தமாக போர்க்களத்தில் நிறுத்தப்பட்டார்கள்.

வரலாற்றின் பக்கங்களிலிருந்து, எங்களது மூதாதையர்களின் இந்த மகத்தான தியாகம் மறைக்கப்பட்டு விட்டது. பாசிசத்திற்கு எதிரான போரில் எங்களது பங்கைப் பற்றி யாரும் எழுதவில்லை. திரைப்படங்களும் எடுக்கவில்லை.

பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் ரஷ்யாவும் ஆப்பிரிக்காவும் தோளோடு தோள் நின்று போராடிய மகத்தான தோழமை வரலாறு உண்டு.

எங்களது மக்களுக்கு ஒரு சுதந்திரமான எதிர்காலத்தை உறுதிசெய்வதற்காகவே உங்கள் முன்னால் நிற்கிறேன். எங்களது உள்நாட்டு விவகாரங்களில் யாரும் தலையிடாத இறையாண்மை உறுதி செய்யப்பட வேண்டும் என இந்த மாநாட்டில் இப்ராகிம் தரோரே உரையாற்றினார்.






# ஜனாதிபதித் தேர்தலில்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றத்தை வெளிக்காட்டவேண்டிய அவசியமும் உள்ளது. அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் இப்புதிருக்கு விடை கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் ஜனாதிபதியாக யார் வரவேண்டும் அல்லது யார் இருக்க வேண்டும் என்பதைத் தனியே இலங்கை மக்கள் தீர்மானிக்கும் நிலையும் மாறிவிட்டது. அண்டை நாடு உட் பட சில வல்லரசுக ளின் விருப்பங்களும் காய்நகர்த்தல் களும் இதில் மறைந்துள்ளன என்பது கசப்பான உண்மை. மேற்குலகைப் பொறுத்தமட்டில் அவர்களின் தெரிவு ரணிலாக இருப்பினும் இந்தியாவைப் பொறுத்த மட்டில் ரணில் மீதான அவர்களின் நம்பிக்கை இன்னும் முழுமை பெறவில்லை என்றே தோன்றுகிறது. இவற்றையும் தமிழ்த் தரப்புகள் கவனத்தில் கொள்ள வேண்டும். எதுவாயினும் கஜேந்திரகுமாரைத் தவிர ஏனைய தமிழ்த் தலைவர்கள் இந்தியாவின் விருப்பத்துக்கு மாறாக எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கமாட்டார்கள் என்பது உறுதி. அவ்வாறான ஒரு நிலைமை தோன்றுமாயின் அந்நாடுகளுடன் இணைந்து குறித்த வேட்பாளருடன் முத்தரப்பு கனவான் ஒப்பந்தமொன்றை செய்வதன் மூலம் தமது பக்கப் பலத்தை தமிழ்த்தரப்பு அதிகரித்துக் கொள்ளமுடியும். எதுவாயினும் வெற்றி பெறும் குதிரைமீது பணத்தைக் கட்டுவதே அறிவார்ந்த செயல். எக்குதிரை வெற்றி பெறும் என்பதை இப்போது கணிப் பது கடினமாயினும் அதற்கான தயார்ப்படுத்தல்களில் தமிழ்த்தரப்பு இப்போதிருந்து செயற்படுவது அவசியம். அதற்கு பிரிந்து நிற்கும் தமிழ்த் தலைவர்கள் முதலில் ஒன்றுபட வேண்டும். அரசியல் சூதாட்டத்தில் வெற்றியைப் போல் தோல்விக்கான வாய்ப்பு சம அளவாக இருப்பினும் வெற்றி பெறுவதற்கான நிகழ்தகவை அதிகரிக்கும் வாய்ப்புகளும் உள்ளன.

# இலங்கை மக்கள்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் 'தங்கச்சி' விரைவில் வெளிப்படுவார் என்றும் வலியுறுத்துகிறார். புலிகள் இயக்கத்தின் பொருளாளர்களில் ஒருவராக இருந்த அப்துல்லா, 'தங்கச்சி' காணொலியை வெளியிட உதவியதையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார். போட்டி புலிகள் குழுக்கள், இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த சுவிஸ் பெண்மணியான மித்து துயா ராஜரத்னம் என்பவரை இந்தக் காணொலியில் போலியாகப் பயன்படுத்தியதாக அப்துல்லாமீது குற்றம் சாட்டுவதையும் சேரமான் கண்டித்துள்ளார்.

ஒரு புலிகள் ஆதரவாளராகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ள பிரபாகரனின் 'இன்பத்தமிழ்' யூரியூப் சனல் பேட்டியைக் காணுமாறு நான் தங்களைக் கோருகிறேன். இன்னும் சில காலம், சர்ச்சைக்குரிய இந்த 'துவாரகா' காணொலி, ஈழத் தமிழ் இல்லங்களிலும் அரசியல் மேடைகளிலும் புயல் வீசும் என்பதை என்னைப்போல் நீங்களும் நிச்சயம் ஒப்புக்கொள்வீர்கள். இந்த, வாத விவாதங்கள் தொடரட்டும். துவாரகா என்று தன்னைக் கூறிக் கொள்ளும் பெண்மணி, காணொலியில் கூறியிருப் பதை நாம் அசை போடுவோம். 'தங்கச்சி' ஈழத் தமிழர்களின் தலைவியாக தலை தூக்கினாலும் இல்லாவிட்டாலும், அவர் சொன்ன கருத்தை நாம் தீவிரமாக எடுத்துக் கொள்ள இதுவே தக்கதருணம் என்பதை மறுக்கவும் முடியுமா? - "நம் வேறுபாடுகளனைத்தையும் மறந்து, இலங்கை மற்றும் வெளிநாடு வாழ் ஈழத் தமிழர்கள் அனைவரும் மட்டுமல்லாமல், இணக்கமான அப்பாவி சிங்கள மக்களும் கூட கைகோர்த்து, தனிப்பட்ட கௌரவத்துக்கும் தேச வளர்ச்சிக்குமான போராட்டத்தை வலுப்படுத்துவோம்." இதை நாம் செய்ய வேண்டாமா?

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# ஜனாதிபதித் தேர்தலில் மக்களுக்கு....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நிலைவரங்களுக்கு பொருத்தமான முறையில் தங்களது நிலைப்பாடுகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதாகவும் ஆரம்பகால ஜே.வி.பி.யை மனதிற்கொண்டு தங்களை மதிப்பிடுவது பொருத்த மானது அல்ல என்றும் அவர்கள் பகிரங்கமாக கூறுகிறார்கள்.

அடுத்ததாக, சஜித் பிரேமதாசவைப் பொறுத்தவரை தனது தந்தையார் விட்டுச்சென்ற இடத்தை நிரப்பக் கூடிய ஒருவராக தன்னை நிரூபிப்பதற்கு அவர் கடுமையாக முயற்சிக்கிறார். எதிர்க்கட்சி தலைவர் என்ற வகையில் சிறந்த பாராளுமன்றவாதியாகவும் செயற்படுவதில் கடும் முனைப்பைக் காட்டுகிறார்.

ஆனால், பாரதூரமான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை இலங்கை எதிர்நோக்கும் நிலைவரத்துக்கு மத்தியில் நாட்டை வழிநடத்தக்கூடிய அரசியல் முதிர்ச்சியுடனும் தொலைநோக்குடனும் கூடிய ஒரு தலைவராக அவரை ஏற்றுக்கொள்வதற்கு நாட்டின் பெரும்பாலான மக்கள் தயாராயிருக்கிறார்களா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

தன்னிடம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தை தரமறுத்த விக்கிரமசிங்கவை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத தோல்வியைத் தழுவச்செய்ததன் மூலம் பிரேமதாச தனக்கு அரசியலில் நம்பகத்தன்மையை தேடிக்கொண்ட போதிலும், கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பையேற்று பிரதமர் பதவியை ஏற்காததை வைத்துக் கொண்டு அவர் சவால்களுக்கு முகங்கொடுக்க தயங்கும் ஒரு தலைவர் என்ற எதிர்மறையான பிரதிமையை உருவாக்குவதில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசிய கட்சியும் முழுமூச்சாக ஈடுபடுகிறார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் சவாலை ஏற்றுக்கொள்ள பிரேமதாச முன்வரவில்லை என்பதை ஜனாதிபதி பாராளுமன்றத்திலும் வெளியிலும் எண்ணற்ற தடவைகள் கூறியிருப்பார்.

### மகிந்தவின் அறிக்கை

இது இவ்வாறிருக்க, பொருளாதார நெருக்கடிக்கு தங்களது நிருவாகத்துக்கு இருந்த பொறுப்பின் காரணமாக மக்கள் மத்தியில் மீண்டும் ஆதரவைத் திரட்டுவதில் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கிவந்த ராஜபக்ஷக்களுக்கு அண்மைய உயர்நீதிமன்ற தீர்ப்பு மேலும் பின்னடைவாக அமைந்தது. அந்த தீர்ப்பின் விளைவாக தங்களது எதிர்கால அரசியலுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை உணர்ந்த அவர்கள் இப்போது பொருளாதார நெருக்கடிக்கு தாங்கள் முற்றிலும் பொறுப்பு அல்ல என்ற பிரசாரங்களை முன்னெடுக்கவேண்டிய பெரும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

ஏனைய ராஜபக்சாக்களை விட மகிந்த ராஜபக்ஷவே இந்த பணியை முன்னெடுக்கவேண்டியிருக்கிறது. அந்த குடும்பத்தின் பிதானமான அரசியல் முகமாக அவரே இன்னமும் விளங்குகிறார். வேறு எந்த ராஜபக்ஷவாலும்பல வருடகால அரசியல் ஈடுபாட்டுக்கு பின்னரும் கூட அவரின் பாத்திரத்தை வகிக்கக்கூடிய நிலைக்கு கிட்டவும் வர முடியவில்லை.

மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்தை உறுதிசெய்து கொள்வதற்காக தங்களது ஆட்சிக்காலச் செயற்பாடுகளை நியாயப்படுத்த வேண்டிய தேவை மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கிறது.

தனது பதவிக்காலத்தில் அதாவது 2006 - 2014 காலப்பகுதியில் உறுதிவாய்ந்த பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டிருந்ததாக கூறி அவர் கடந்த வாரம் "இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மூலங்கள்" என்ற தலைப்பில் நீண்ட அறிக்கையொன்றை வெளியிட்டார்.

நிதியமைச்சராக இருந்தபோது பாராளுமன்றத்தில் பட்ஜெட்டுக்களை சமர்ப்பித்த சந்தர்ப்பங்களில் புள்ளிவிபரங்களை மகிந்த ராஜபக்ஷ கையாண்டிருந்தாலும், மற்றும்படி அவரது பேச்சுக்களிலோ அல்லது அறிக்கைகளிலோ வழமையாக அவர் புள்ளிவிபரங் களில் கவனம் செலுத்துவதில்லை. அவரின் பேச்சுக்கள் பெரும்பாலும் ஜனரஞ்சகமானவையாகவே இருக்கும். ஆனால், இந்த அறிக்கை முற்றிலும் புள்ளிவிபரங்களைக் கொண்டதாக இருக்கிறது.

2014 செப்டெம்பரில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையின் பெரும்பாக பொருளாதாரச் செயற்பாடுகள் பொதுவில் எதிர்பார்க்கப்பட்டதையும் விட அதிகமாக இருந்ததாகவும் அன்றைய அண்மைய வருடங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்ட இலங்கை மேல் மத்தியதர வருமானத்தையுடைய நாடுகளின் அணியில் இணைவதை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது என்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விரைவாக வளர்ச்சியடைந்து வரும் முன்னரங்க ஆசிய பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குகிறது என்றும் கூறப்பட்டிருந்ததை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கும் அவர் 2015 ஜனவரியில் மிகவும் துடிப்பான ஒரு பொருளாதாரத்தையே தான் விட்டுச் சென்றதாக கூறியிருக்கிறார்.

மீண்டும் 2019 நவம்பரில் பிரதமராக பதவியேற்றபோது தங்களது அரசாங்கம் ஏற்கெனவே பெரும் பின்னடைவைக் கண்ட ஒரு பொருளாதாரத்தையே கையேற்கவேண்டியிருந்தது என்று கூறியிருக்கும் மகிந்த ராஜபக்ச அத்தகைய ஒரு பலவீனமான நிலையிலேயே இலங்கையை கொவிட் - 19 பெருந்தொற்று தாக்கியது என்று குறிப்பிட்டார்.

"பொருளாதாரம் தொடர்பான எந்தவொரு விவாதத்திலும் ஆள்வீத நிகர உள்நாட்டு உற்பத்தியே மிகவும் அடிப்படையான பொருளாதார குறிகாட்டி என்பதை கவனத்தில் எடுக்கவேண்டியது முக்கியமானதாகும். 2006 - 2014 காலப்பகுதியில் எனது அரசாங்கத்தில் இலங்கையின் ஆள்வீத நிகர உள்நாட்டு உற்பத்தி சுதந்திரத்துக்கு பின்னர் பதவியில் இருந்த சகல அரசாங்கங்களின் காலத்தினதும் கூட்டுமொத்த நிகர உள்நாட்டு உற்பத்தியின் இரு மடங்கிற்கும் அதிகமானதாகும். அதனால் மக்கள் தங்களது தீர்மானங்களை கூச்சலையும் பொய்களையும் பிரசாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு அல்ல உகந்த தரவுகளையும் விளக்க விபரங்களையும் அடிப்படையாக வைத்தே எடுக்கவேண்டும். 2015 ஜனவரியில் செய்த அரசியல் தவறைப் போன்ற இன்னொரு தவறை இலங்கை தாங்கமாட்டாது" என்று அவர் தனது அறிக்கையில் இறுதியாகக் கூறியிருக்கிறார்.

அவரது இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெருவாரியான புள்ளிவிபரங்களை இந்த கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருந்த தருணம் வரை எவரும் நிராகரித்துப் பதில் அறிக்கை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில அரசியல் அவதானிகளையும் அறிக்கை தடுமாற வைத்திருக்கிறது.

2015 ஜனாதிபதி தேர்தலில் தன்னைத் தோற்கடித்து செய்த அரசியல் தவறை மீணடும் செய்யவேண்டாம் என்று நாட்டு மக்களிடம் விடுத்த வேண்டுகோளின் மூலமாக மகிந்த ராஜபக்ச கூறுகின்ற செய்தியை புரிந்துகொள்வதில் எவருக்கும் சிரமமிருக்காது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தலில் அதன் வேட்பாளரைக் களமிறக்கும் என்றே ராஜபக்ஷாக்களும் அவர்களின் விசுவாசிகளும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த கட்சியின் சார்பில் நிறுத்தப்படக்கூடிய வேட்பாளர் ஒரு ராஜபக்ஷவை தவிர வேறு எவருமாக இருப்பதற்கு பெரும்பாலும் வாய்ப்பு இல்லை. தங்களது மக்கள் செல்வாக்கு மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதால் தாங்களே நேரடியாக இந்த தடவை களமிறங்காமல் தங்களது விசுவாசிகளில் ஒருவரை (தம்மிக்க பெரேரா போன்றவர்களை) போட்டியிடவைப்பதற்கும் அவர்களுக்கு யோசனை இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் அடிபடுகிறது. ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை பொதுஜன பெரமுன ஆதரிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவிய கட்டம் ஒன்று இருந்தது. அந்த நிலை இப்போது இல்லை. அடுத்துவரும் மாதங்களில் இலங்கை அரசியலில் பல நாடகபாணி நிகழ்வுகளை நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

இத்தகைய ஒரு பின்புலத்தில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மக்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகள் தொடர்பில் கடந்த வாரம் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் 'சிற்றிசன் சில்வா' பத்தியில் இரு வாரங்களுக்கு முன்னர் தென்னமெரிக்க நாடான ஆர்ஜனடீனாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுடன் இலங்கை நிலைவரத்தை ஒப்பிட்டு எழுதப்பட்டிருந்த கருத்து மிகவும் சுவாரஸ்யமானதாகவும் சிந்தனையை தூண்டுவதாகவும் இருந்தது.

'கடந்த வாரம் ஆர்ஜன்டீனாவில் நடந்ததை நாம் மனக்கலக்கத்துடன் நோக்கவேண்டியிருக்கிறது. ஒப்பீட்டளவில் அனுபவமில்லாத ஒரு பொருளியலாளரான ஜாவியர் மில்லீயை அந்நாட்டு மக்கள் தங்களது புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்திருக்கிறார்கள். அவரை கிறுக்கன் (Madman) என்றும் அழைப்பார்களாம்.

"மில்லீக்கு ஓர் அமைச்சராகவோ அலலது ஆளுநராகவோ பதவி வகித்த முன்னனுபவம் எதுவும் கிடையாது. ஆக இரு வருடங்கள் மாத்திரமே அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். கன்சர்வேட்டிவ் மற்றும் பெரோனிஸ்ட் முகாம்களைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தங்களது நாட்டை தவறாக ஆட்சிசெய்து பொருளாதாரத்தை நாசமாக்கிவிட்டார்கள் என்று கண்ட ஆர்ஜன்டீன மக்களுக்கு இறுதியில் அனுபவம் குறைந்த மில்லீயே தெரிவாக அமைந்தார்.

"இலங்கையைப் போன்று ஆர்ஜன்டீனாவும் கடுமையான பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. தங்களது வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டமுடியாதவர்களாக மக்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள். இரு பாரம்பரிய அரசியல் முகாம்களையும் சேர்ந்த தலைவர்களுக்கு எதிராக மில்லீ தொடுத்த கடுமையான பிரசாரங்கள் மக்களின் உண்வுகளுடன் ஒத்துப்போனது. பாரம்பரிய அரசியல் தலைவர்களை வாக்காளர்களை கொள்ளையடிப்பவர்கள் என்று அவர் சாடினார்.

"மாறிமாறி பச்சையையும் நீலத்தையும் தெரிவு செய்து எந்த நன்மையையும் காணாத எம்மைப் போன்றே ஆர்ஜனடீன மக்களும் இரு பிரதான அரசியல் முகாம்கள் மீதும் அதிருப்தியடைந்து விட்டர்கள். அவர்களுக்கு போதும் போதும் என்றாகிவிட்டது

"பழைய தலைவர்கள் மத்தியில் இருந்து ஒருவரை மீண்டும் தெரிவுசெய்வதன் மூலம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்த அந்நாட்டு மக்கள் பழைய முகாம்களுக்கு வெளியில் இருந்து ஒருவரை தங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்திருக்கிறார்கள்.

"அடுத்த வருடம் இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடந்தால் ரணிலை விடவும் பேச்சாற்றலால் மக்களைக் கவரக்கூடிய ஒருவருக்கு நாம் வாக்களிப்போமா? அல்லது தற்போது இருப்பவர்களில் குறைந்தளவுக்கு ஆட்சேபனைக்குரிய ரணிலுக்கு வாக்களிப்போமா?

"பாரம்பரிய அரசியல் முகாம்கள் மீது வெறுப்படைந்த ஆர்ஜன்டீன மக்களைப் போன்று பொருளாதாரத்தை நாசமாக்கிய ஊழல்காரர்களைப் பழிவாங்குவதற்கு தீவிரவாத சிந்தனைகொண்ட வெளியாள் ஒருவருக்கு மக்கள் வாக்களிப்பார்களா?"

## பயங்கரவாத....

படவிருந்த மாவீரர் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபத் தலைவர் என்.நகுலேஸ் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதேபோன்று புலிகளின் ஆடையை அணிந்திருந்ததாக கூறி யாழில் இளை ஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அத்துடன், மாவீரர் நிகழ்வில் கலந்து கொண்ட 7 பேர் கைதுசெய்யப்பட்டுள் ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.

இந்த கைதுகளுக்கு சர்வதேச ரீதியில் கடும் எதிர்ப்புகள் வலுபெற்றுள்ளமை யும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## அச்சுவேலி...

ஆவார். விற்பனை நிறுவனம் ஒன்றின் பட்டா ரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது என தெரி விக்கப்படுகிறது.

இந்த விபத்து சம்பவத்தில் காய மடைந்த இருவரில் ஒருவர் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையி லும், மற்றையவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இந்நிலையில், உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் அச்சு வேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அடுத்த....

அமெரிக்க டொலர் களும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இருநூறு மில்லியன் அமெரிக்க டொலர்களும் பெறப்பட உள்ளன.

சர்வதேச நாணய நிதியம் தொடர் பாக, கடனாளர் மறுசீரமைப்பு பாரிஸ் கிளப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு சீனா மற்றும் இந்தியா முன்பு அதன் ஒப்புதலை வழங்கியிருந்தன. அதன்படி, 5.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை மறுசீரமைக்கப் படும். கடனாளர் மறுசீரமைப்பின் ஒப்புதலின் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழு டிசெம் பர் 14 ஆம் திகதி கூடவுள்ளது. இரண் டாம் தவணை கொடுப்பது தொடர்பாக விவாதத்திற்கு தயாராகி வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண் டாம் தவணை எதிர்வரும் டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் பெற் றுக்கொள்ளப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## ஊடக....

பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற தரப்புக்கள் தமிழ் ஊடகங்களை அடக்கியாள நினைப்பது வழமையான தொடர்கதையாகவே இருந்து வருகிறது.

குறிப்பாக, 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்கு வரும் வரையில் அதிகாரத் தரப்பின் வன்முறைகளால் 39 ஊடகவிய லாளர்களின் இன்னுயிர்களை நாம் இழந் துள்ளோம். அதற்கான நீதி மறுக்கப்பட்ட நிலையில் இன்றும் நீதி கோரி போராடி வருகின்ற தரப்பாக நாம் இருக்கின்றோம்.

இதேவேளை மாற்றுக்கருத்துக்களை ஒடுக்கும் இந்த அரசாங்கம், ஊடகங் களை ஒடுக்கி, மக்களின் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளது.

அத்துடன், வவுனியாவில் கட மையாற்றிவரும் பிராந்திய ஊடக வியலாளர்கள் தொடர்ச்சியாக பொலிஸ ாரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரு கிறார்கள்.

எனவே, ஜனநாயகத்தை பாதுகாப்ப தற்காக ஊடகவியலாளர்கள் ஆகிய நாம் தொடர்ச்சியாக குரல் கொடுப்போம் என்பதை அதிகாரத்தரப்புக்கு தெரி வித்துக்கொள்கிறோம்-என்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் "ஊடக சுதந்திரத்தை உறுதிசெய்", "பொய்வழக்கு போடாதே", "ஊடகப் படுகொலைகளுக்கு நீதி வேண்டும்", "கருத்துச் சுதந்திரமே மக்களின் சுதந்திரம்" என்றவாறு கோஷம் எழுப்பினர்.

இப்பேரணி வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆரம்பமாகி வவுனியா தலைமை பொலிஸ் நிலையம் வரை சென்று, அங்கிருந்து மீண்டும் பழைய பேருந்து நிலையத்தை அடைந்ததோடு போராட்டம் முற்றுப்பெற்றது.

ஊடகவியலாளர்களுக்கு ஆதர வாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத் தில் இலங்கை தமிழரசு கட்சி, ஈழ மக் கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமி ழீழ விடுதலை இயக்கம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழீழ மக்கள் விடு தலை கழகம், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிச கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதி களும் வவுனியா வர்த்தக சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி கண்ட றியும் சங்கங்கள், போராளிகள் நலன் புரிச் சங்கம், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு ஆகிய அமைப்புக் களின் முக்கியஸ்தர்களும், மதகுருமார்க ளும் பொதுமக்களும் கலந்துகொண்ட னர். (அ)

## இன்று புயல்....

திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது திருகோணமலைக்கு வடகிழக்கே 10.5 வடக்கு அட்சரேகை மற்றும் 84.1 கிழக்கு தீர்க்கரேகை பகுதியில் சுமார் 380 கிலோமீற்றர் தொலைவில் உள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது இன்று மேலும் சூறாவளியாக உருவாகும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு இலங்கையின் வடக்கு கடற்கரைக்கு அருகில் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து வடக்கு நோக்கி இந்தியாவின் வட தமிழக கடற்கரையை நோக்கி 4ஆம் தேதி நகர்ந்து தெற்கு ஆந்திர கடற்கரையை 5ஆம் தேதிக்குள் கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அமைப்பின் தாக்கம் காரண மாக, நாட்டின் பல பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப் படுகின்றது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய் யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேற்கு மற்றும் தென் மாகாணங்களிலும் திரு கோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மணிக்கு 40 தொடக்கம் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழையுடன் கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின் னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய விபத்துக்களை குறைப்பதற்கு தேவை யான நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள் ளது. (அ)

## வைத்தியசாலை....

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அன்றைய தினமே சத்திர சிகிச்சை (சிசேரியன்) மூலம் இரண்டு குழந்தைகளை பிரசவித் துள்ளார்.

பின்னர் 25ஆம் திகதி சனிக்கிழமை தாய்க்கு அம்மை நோய் தொற்று அறி குறிகள் காணப்படுவதாக கூறி சில மருந் துகளை எழுதி தந்து, அவற்றை வாங்கி கொடுக்குமாறும், அம்மை நோயுடன், வைத்தியசாலை விடுதியில் வைத்திருக்க வேண்டாம் வீட்டிற்கு அழைத்துச் செல் லுங்கள் என்றும் வைத்தியசாலைத் தரப் பினர் தெரிவித்தனர்.

இது குறித்து உறவினர்கள் கூறுகை யில், "காலையில் இரத்த அழுத்தம் அதிகமாக இருப்பதாக கூறினார்கள். மாலை 5 மணிக்கு தாயையும் குழந்தை களையும் அழைத்துச் செல்லுமாறு பணித்ததால், நாம் வீட்டிற்கு அழைத் துச் சென்றோம்.

வீடு வந்த பின்னர் தாய் மிக சோர் வாக, பலவீனமாக இருந்தார். பிள்ளை களுக்கு பாலூட்டவோ, அவர்களை அரவணைக்கவோ முடியாத அளவுக்கு தாயின் உடல் பலவீனமாக இருந்துள் ளது.

அதனால் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை நெல்லியடியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு சென்று வைத்திய ரிடம் காட்டிய போது, உடனடியாக நீங்கள் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு செல்லுங்கள், தங்கி நின்று சிகிச்சை பெற வேண்டும் என வைத்தியர் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை மாலையே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யில் அனுமதித்தோம். சிறுநீர் பரி சோதனையை தனியார் ஆய்வு கூடத்தில் செய்து வருமாறு கொடுத்தனர். பரி சோதனை செய்து கொடுத்தோம்

பின்னர் இரவு 12 மணியளவில் மேல திக சிகிச்சைக்காக நோயாளர் காவு வாக னம் மூலம் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மறுநாள் திங்கட்கிழமை காலை, தாயின் சிறுநீரகத்தில் கிருமி தொற்று ஏற்பட்டு உள்ளமையால், உடல் உறுப் புக்கள் பழுதடைந்து செல்கின்றன என்று தெரிவித்தனர்.

மீள சிறுநீர் பரிசோதனை செய்து வருமாறு திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கிருந்து திரும்பி போதனா வைத்திசாலைக்கு வந்து சிறிது நேரத்தில் மாலை 4.45 மணியளவில் தாயை காப் பாற்ற முடியவில்லை என தெரிவித்தனர்.

வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் நடந்த அனைத்து விடயங்களையும் கூறி முறையிட்டோம். விசாரணைகளை ஆரம்பிப்பதாகவும், பிரசவம் நடந்து 48 மணி நேரத்தில் தாய் உயிரிழந்து உள்ள மையால், அதனை மறைத்து விட முடி யாது. முழுமையான விசாரணை நடத் தப்படும் என நம்பிக்கை தந்து அனுப்பி வைத்தார்.

மரண விசாரணை அதிகாரி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் பாதிக் கப்பட்டவர்களுடன் நடந்து கொண்ட விடயம் அவர்களின் அணுகு முறை என் பனவும் ஏற்றுக்கொள்ள முடியாத வகை யில் அமைந்திருந்தது.

பொலிஸ் அதிகாரி, தானாகவே "இது ஒரு போதனா வைத்தியசாலை. இங்கே கவனயீனம், வைத்திய தவறுகள் நடக்க சாத்தியமில்லை" என கூறினார்.

எம்மிடம் விசாரணைகளை மேற் கொள்ளவோ, எமது தரப்பு கருத்தை கேட்கவோ அவர் விரும்பவில்லை. பாதிக்கப்பட்ட எமது குரலை அடக் கவே முயன்றார்.

சடலத்தை அடையாளம் காட்டி குறிப்புக்களை சொல்லும் போதும் அவர் அருகில் வரவில்லை. தூர நின்றே குறிப்பெடுத்தார்.

அதன் போது பிரேத அறையில் இருந்த ஊழியர்கள் அருகில் வந்து சட லத்தை பார்த்து குறிப்பெடுங்கள் என அழைத்த போது, ஊழியர்களை மிரட்டி, தான் அருகில் வர தேவையில்லை என்றார்.

சட்ட வைத்திய அதிகாரியிடம் வைத்தியசாலையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் கூறிய போது, அவ ரும் அது தொடர்பில் பணிப்பாளரிடம் முறையிடுங்கள்.

மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றியே தான் அறிக்கை தர முடியும் என்றார்.

பின்னர் சில மாதிரிகளை மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்ப வேண்டும். அறிக்கை கிடைக்க இரண்டு கிழமைகளுக்கு மேலாகும் என்றார்.

உடலத்தை மீள சோதனை செய்ய வேண்டி வருமா என சட்ட வைத்திய அதிகாரியிடம் கேட்ட போது, தேவை யான மாதிரிகள் எடுத்து விட்டோம். உங்கள் சமய வழக்கப்படி செய்யுங்கள் என கூறினார்.

இன்று தாய் இல்லாமல் இரு பிள்ளை களும் தவித்து வருகின்றன. வைத்திய சாலையில் இருந்து தாயையும் பிள்ளை யையும் உடனே அழைத்து செல்லுங்கள் என கூறியதால் தான், உரிய சிகிச்சைகள் இன்றி தாய் உயிரிழக்க வேண்டி ஏற்பட் டது.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்" என உறவினர் கள் கோரியுள்ளனர். (அ)

## நாணய....

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவு இந்த மாத இறுதிக்குள் எட்டப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தி னால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் சிலவற்றை மாத்திரமே ஈடு செய்திருந் தது.

அதற்கமைய, பல மாற்றங்களையும் இலங்கை கோரியிருந்ததாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எனினும், பணவீக்கம் உட்பட சில இலக்குகளை இலங்கை அடைந்துள் ளது.

இந்தநிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் முதற்கடன் தவணை கடந்த மார்ச் மாதம் கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து, கடந்த செப்ரெம்பர் மாதம் இரண்டாம் தவணைக்கடன் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் என குறிப்பிடப்பட்டது.

எனினும், சர்வதேச நாணய நிதியத் தின் திட்டத்திற்கு அமைய அதன் இலக்குகள் சிலவற்றை இலங்கை நிறை வேற்ற தவறியது.

இந்தநிலையில், இலங்கைக்கான இரண்டாம் தவணைக்கடன் வசதி இந்த மாத இறுதிக்குள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## காணாமற்....

சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச் சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகள் தற் போது வினைத்திறனாக்கப்பட்டுள்ளன.

அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 62 முறைப்பாடுகள் தொடர்பில் மாத்திரமே கடந்த காலங்க ளில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டன. ஆனால், புதிய நிர்வாக கட்டமைப் புடன் 4795 முறைப்பாடுகள் தொடர் பில் பூர்வாங்க விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டுக்குள் அலுவலகத் துக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப் பாடுகள் தொடர்பான விசாரணைகளை நிறைவு செய்து ஒரு தீர்மானத்தை எடுக்க எதிர்பார்த்துள்ளோம் -என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# உயர்தரத்துக்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கு புலமைபரிசில்!

*ஜனாதிபதியின் பணிப்பில் ஆரம்பம்!*



கொழும்பு, டிசெ. 03

க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதிபெற்றுள்ள மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தால் புலமைப்பரிசில் வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலில் மேற்படி புலமைப்பரிசில் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இதன்படி நாட்டிலுள்ள 100 கல்வி வலயங்களும் உள்ளடங்கும் வகையில் ஒரு கல்வி வலயத்தில் இருந்து 50 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு 5 ஆயிரம் மாணவர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடத்தில் 3 ஆயிரம் மாணவர்களுக்கு 24 மாதங்களாக ஜனாதிபதி நிதியத்தால் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.

2022 (2023) ஆண்டில் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு முதன்முறையாக தோற்றி, சித்தியடைந்து உயர்தரம் பயில்வதற்கு தகுதிபெற்றிருப்பது, அரச அல்லது கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலையில் கல்வி கற்பது, குடும்ப மாத வருமானம் வருடம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறைவாக இருப்பது இந்த புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க அடிப்படை தகுதியாக கருதப்படுகிறது.

புலமைப்பரிசில் வேலைத்திட்டத்துக்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதி செயலகம் presidentsoffice.gov.lk, ஜனாதிபதி நிதியம் presidentsfund.gov.lk ஜனாதிபதி ஊடகப் பிரிவு pmd.gov.lk ஆகிய இணைய தளங்களில் இருந்து தரவிறக்கம் செய்யலாம்.

விண்ணப்பங்களை சாதாரண தரம் கற்ற பாடசாலைகளின் அதிபர்களிடம் கையளிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்!

## சபையில் கூறினார் காவிந்த ஜயவர்த்தன

கொழும்பு, டிசெ. 03

**உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, தமது உறவுகள் ஏன் கொல்லப்பட்டார்கள் என்று பாதிக்கப்பட்ட எம் மக்கள் இன்றும் கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால், தீர்வு கிடைக்கவில்லை. நான்கரை ஆண்டுகளுக்குப் பின்னர் குண்டுத்தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, யாருக்காக நடத்தப்பட்டது என்பதையும், தற்போது அவர்களை பாதுகாப்பவர்களையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் சட்டம் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் ஒரு சிலர் சட்டத்தில் இருந்து விடுவிக்கப்படுகிறார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டு நான்கரை ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை நீதி கிடைக்கவில்லை. உண்மை பகிரங்கப்படுத்தப்படவில்லை. எவரும் தண்டிக்கப்படவுமில்லை.

2019ஆம் ஆண்டு அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை முன்னிலைப்படுத்தியே ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தவுடன் குற்றவாளிகளை தண்டிப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டது. ஆனால் இன்று வரை அந்த வாக்குறுதிகள் பொய்யாக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பயங்கரவாதி சஹ்ரான் உட்பட அவனது தரப்பினர்கள் முதல் குற்றவாளிகளாகவும், குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் போதுமான அளவு புலனாய்வு தகவல் கிடைத்தும் உரிய நடவடிக்கை எடுக்காத அரச மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் இரண்டாம் தர குற்றவாளிகளாகவும், முதல் குற்றவாளிகளையும், இரண்டாம் தர குற்றவாளிகளையும் பாதுகாக்கும் தரப்பினர் மூன்றாம் தர குற்றவாளிகள் எனவும் இந்த குண்டுத்தாக்குதலில் குற்றவாளிகளை அடையாளப்படுத்தலாம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, தமது உறவுகள் ஏன் கொல்லப்பட்டார்கள் என்று பாதிக்கப்பட்ட எம் மக்கள் இன்றும் கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால், தீர்வு கிடைக்கவில்லை. குண்டுத்தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, யாருக்காக நடத்தப்பட்டது என்பதையும், தற்போது அவர்களை பாதுகாப்பவர்களையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட தேசிய கத்தோலிக்க பேராயர்கள் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்கள். அந்த கடிதத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த கடிதத்தை சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

விசாரணைகளை முன்னெடுக்குமாறு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினருக்கு பதவி உயர்வு வழங்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்டுள்ள எம் சமூகத்தினருக்கு எவ்வாறு நீதி கிடைக்கும் - என்றார். (அ)

# செட்டிக்குளம் இரட்டை கொலை; 19 வயதான இளைஞர் கைதானார்

வவுனியா, டிசெ. 03

வவுனியா - செட்டிக்குளம் இரட்டைக் கொலை தொடர்பில் 19 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி - பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உருத்திரபுரம் பகுதியில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 30 ஆம் திகதி செட்டிக்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வர்த்தக நிலையமொன்றில் கணவன், மனைவி இருவரும் தாக்கிக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இதன்போது 10,000 ரூபா பணமும் தங்க நகையும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, அவர் குற்றச்செயலின் போது அணிந்திருந்த ஆடைகளும் திருடப்பட்ட தங்க நகையும் பை ஒன்றில் மறைத்து வைத்து கிணற்றில் வீசப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# இஸ்ரேலுக்குத் தொழிலாளர்களை அனுப்புவதை உடன் நிறுத்தவேண்டும்

## ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரேரணை நிறைவேற்றம்

கொழும்பு, டிசெ. 03

இஸ்ரேல் பலஸ்தீனில் மேற்கொண்டுவரும் மனிதாபிமானமற்ற செயலை கண்டிக்கும் வகையில் இலங்கையில் இருந்து தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

டிலான் பெரேரா பலஸ்தீன் இலங்கை நட்புறவு சங்கத்தின் சால்வையை கழுத்தில் அணிந்த நிலையில் சபைக்கு வந்தே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்ரேல் மனிதாபிமானமற்ற முறையில் பலஸ்தீனில் செயற்பட்டு வருகிறது. சிறுவர்கள், பெண்கள் என அனைவரையும் கொலை செய்து வருகிறது. குண்டுகளை வீசி பலஸ்தீன் மக்களின் வீடுகளை தரைமட்டமாக்கி வருகிறது. இந்த செயலை எங்களுக்கு அனுமதிக்க முடியாது.

பலஸ்தீன மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என நாங்கள் இந்த சபையில் விவாதித்திருக்கிறோம். அண்மையிலும் இந்த தாக்குதலை நிறுத்தி அங்கு இரு தரப்பினரும் அமைதியை கடைப்பிடிக்க வேண்டும் என நாங்கள் பிரேரணை நிறைவேற்றி இருந்தோம்.

அதனால் இஸ்ரேல் பலஸ்தீனில் மேற்கொண்டுவரும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எமது நாட்டில் இருந்து இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்புவதை அங்கு யுத்தம் நிறுத்தப்படும் வரை தவிர்த்துக்கொள்ள வேண்டும். சிறிமா பண்டாரநாயக்க பிரதமராக இருந்தபோது அன்று இஸ்ரேலுடனான இராஜதந்திர நடவடிக்கையை துண்டித்திருந்தார். தற்போதும் பல நாடுகள் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றன.

எனவே இந்த பிரச்சினையை முஸ்லிம் பிரச்சினையாக பார்க்கக்கூடாது. இது மனிதாபிமானமற்ற பிரச்சினை. 6 நிமிடங்களுக்கு ஒரு குழந்தையை கொலை செய்கிறார்கள். 10 நிமிடங்களுக்கு ஒரு பெண்ணை கொலை செய்கிறார்கள். காஸாவில் வைத்தியசாலைகள், அகதி முகாங்கள் பாடசாலைகள் மீது குண்டு தாக்குதல் மேற்கொள்கிறார்கள்.

அதனால் இஸ்ரேலின் இந்த மிலேச்சத்தனமான மனிதாபிமானமற்ற நடவடிக்கைக்கு எதிராக முழு பாராளுமன்றமும் எழுந்து நின்று இதனை நிறுத்த குரல் கொடுக்க வேண்டும். அதற்காக பணத்தை பார்க்காமல் மனிதாபிமானத்தை பார்த்து இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்புவதை நிறுத்த நடவடிக்கை எடுப்போம்.

இல்லாவிட்டால் நாங்களும் மனிதாபிமானமற்றவர்கள் என்ற நிலைக்கு தள்ளப்படுவோம். பலஸ்தீன் மக்களின் போராட்டத்துடன் எமது பாராளுமன்றமும் இருக்கிறது என்ற தகவலை தெரிவிக்க வேண்டும் என்ற பிரேரணையை முன்வைக்கிறேன்-என்றார்.

இதன்போது எழுந்த ஆளும் கட்சி உறுப்பினர் சீ.பி ரத்நாயக்க குறிப்பிடுகையில், ,இஸ்ரேல் பலஸ்தீன யுத்தம் தொடர்பாக டிலான் பெரேரா எம்.பி. பிரேரணை ஒன்றை முன்வைத்தார். அதற்கு ஆதரவளித்தவனாக, இந்த யுத்தம் மேலும் தொடர்ந்தால் 3ஆம் உலக யுத்தம் இடம்பெறும் நிலைக்கு செல்லும். எமது நாட்டிலும் யுத்தம் இடம்பெற்றது. அப்போது மனித உரிமை அமைப்புகள் பாரியளவில் தலையிட்டு வந்தன. எமது அதிகாரிகள் பலருக்கு சர்வதேச நாடுகளுக்கு செல்வதற்கு தடைகளை ஏற்படுத்தினார்கள்.

அத்துடன் முறைகேடாக அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக செயற்படும் இஸ்ரேலின் நடவடிக்கைக்கு எதிராக செயற்படு, அங்கு அமைதி ஏற்பட நாங்கள் முழு பாராளுமன்றமாக இணைந்து செயற்பட வேண்டும். அதற்கா டிலான் பெரேரா கொண்டுவந்த பிரேரணையை நான் தனிப்பட்ட ரீதியில் வழிமொழிகிறேன் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

எஸ்.ஜெகதீசன்



# மாத்திரை!

உலகை உலுக்கிய கொடிய ரக நோயிலிருந்து பூரண நிவாரணம் அளிக்கும் மாத்திரைகளில் என்னால் விலை கொடுத்து வாங்க முடிந்த சிலதை இந்த மருத்துவமனைக்கு வழங்கவென்று டாக்டர் பலராமை சந்திப்பதற்காக வரவேற்பு அறையில் காத்திருந்த என்னை உள்ளே வருமாறு அழைத்தார் தாதி.

சம்பிரதாய வரவேற்பைத் தொடர்ந்து "அன்றாட மருந்துகளுக்கே அல்லாடும் நோயாளர்கள் அத்தியாவசிய மருந்துகளுக்கு அலறியடிக்கும் காலத்தில் உங்களின் உதவி நிகரற்றது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு வெளி நாடுகளில் இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடிய இந்த அபூர்வ ரக மாத்திரை மருந்தை சட்ட விரோதமாக இறக்குமதி செய்பவர்கள் பெரும் தொகை பணத் துக்கு விற்று கொள்ளை லாபமீட்டு வதால் தட்டுப்பாடு தாண்டவமாடுகின்றது. இது எல்லோருக்கும் தெரிந்தாலும் எதுவுமே செய்ய முடியாத நிலைமை." என்றார் டாக்டர் பலராம்.

எனது பெயர் கணேஷ். நான் விடுமுறைக்காக கனடாவிலிருந்து வந்துள்ளேன். கொடிய ரக நோய் வியாபிக்கின்றது முன்னரே எனக்குத் தெரியும். கொ.ர.நோ என்ற தமிழ் எழுத்துக்களே உலகெங்கும் அந் நோய்கான பெயரை கொடுத்தன என்று அவசர ஆய்வாளர் எவராவது இதுவரை அறிக்கை விடாததால் வரும் சிரிப்பையும் சிரமப்பட்டு அடக்கிக்கொள்வேன். ஆனால் நாடெங்கும் உள்ள நோயின் உக்கிரத்தையும் பரவும் தீவிரத்தையும் இங்கு வந்த பின்பே விரிவாக அறிந்தேன். இவற்று டன் மருத்துவர்களின் பற்றாக்குறை வேறு பயமுறுத்துகின்றது.

நீங்கள் உதவ முன்வந்தது மகிழ்ச்சி கணேஷ். உங்கள் பரோபகார சிந்தை பேருவகை அளிக்கின்றது. நீங்கள் அன்பளிப்பு செய்யவுள்ள மருந்து வீரியம் மிக்கது. பத்தாயிரம் ரூபாய் சந்தை விலை உள்ள அதனை இப்பொழுது இருபது லட்சத்துக்கும் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றது.

சரிதான் டாக்டர் பலராம். பாதி ஊர்கள் பகலிலும் உறங்கிக் கொண்டிருப்பதை அவதானித்ததன் விளைவே என்னாலான உதவிகளை செய்யத் தூண் டியது. அதனால் மனம் மாறி எனது விடு முறைக்கென ஒதுக்கியிருந்த காசை இதற்கு வழங்குவதெனத் தீர்மானித்தேன். பதுக்குபவர்கள் மட்டுமல்ல நோயால் பாதிப்புக்குள்ளானோரும் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு அதிகரித் துள்ளனர். என்னிடம் இருக்கும் காசுக்கு ஆகக் குறைந்தது அறுநூறு பேருக்காவது மருந்து வாங்க முடியும் என நினைத்திருந்தேன். ஆனால் அதே காசுக்கு இப்பொழுது ஆறு பேருக்கான மருந்தை மட்டும் வாங்க முடிந்தது மனதை உறுத்துகின்றது.

நான் வெட்கத்தை விட்டுச் சொல்கின்றேன். நான் டாக்டர்தான். எனது வருமானத்தில் எனக்குத் தேவை என்றால் கூட உந்த மருந்தை என்னால் வாங்க முடியாது. என்னைப் போல் மேலும் ஐந்து டாக்டர்கள் கனத்த மனதுடன் இவ்விதம் இங்கு பணி புரிகின்றார்கள்.

ஓம்! ஓம்! எல்லோருமே திறமைசாலிகள். கருணை மிக்கவர்கள். கைராசிக் காரர்கள் சமூக அக்கறை நிறைந்தவர்கள் என்று நானும் கேள்விப்பட்டுள்ளேன்.

இந்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் தினம் தினம் படும் வாதைகளைத் தாங்கும் சக்தி மனதுக்கும் கிடையாது. உடம்புக்கும் கிடையாது என்றார் டாக்டர்.

எண்பது வயதுக்கு மேற்பட்ட எனது நெருங்கிய உறவினர்கள் ஐவர் இங்கு தங்கி சிகிச்சை பெறுகின்றனர். அவர்க ளும் உதனையே சொன்னார்கள் என்றேன் நான்.

நோயாளரை பராமரிக்கும் பகுதிக்கு சென்றோம்.

வயது பேதமின்றி துவண்ட நிலையில் சுமார் நூறு பேர். அவர்களது பயம் பார்வையாளர்களையும் பயமுறுத்தும் போலிருந்தது. எலும்புக் கூடுகளில் பிதுங்கிய முழிகள் கோரம் காட்டின.

இறைவன் இவர்களுக்காக காத்திருக்கின்றானா? இவர்கள் இறைவனுக்காக காத்திருக்கின்றனரா? என்பது எவருக்குமே தெரியாது என்றார் பலராம்.

இறைவா! என்னால் செய்ய முடிந்ததற்கு மேலேயே செய்வதற்கு ஆசைப் படும் படி என்னை ஆக்கு! மனம் தன் பாட்டுக்கு பிரார்த்தித்தது.

தெய்வ நம்பிக்கை என்பது வருத்தக் காரர்களின் வருத்தமல்ல. ஆரோக்கியமானவர்களின் சுகானுபவம்! யாரோ ஞானி சொன்னது ஞாபகத்தில் வந்தது.

எங்கும் நிசப்தம். கடைநிலை ஊழியரின் தள்ளு வண்டில்களின் ஒலி மட்டும் அவ்வப்பொழுது அங்குமிங்கும் ராணுவ வாகனங்கள் உறுமியபடி செல்வது போலத் திகிலை ஏற்படுத்தின.

பலராமின் அலுவலக அறைக்குத் திரும்பினோம்.ஏனைய ஐந்து டாக்டர்களும் அங்கு எனக்காக காத்திருந்தார்கள். அனைவர் முன்னிலையிலும் என்னிடமிருந்த ஆறு மாத்திரைகளையும் கொடுத்தேன். அது மிகவும் சொற்பம் என்று அவர்களுக்கும் தெரியும். ஆனா லும் அவர்கள் அனைவரது முகங்களிலும் மகிழ்ச்சி அப்பிக் கொண்டதோர் உணர்வு என்னுள் ஏற்பட்டது.

அடுத்த வினாடி சிறிதும் எதிர் பாராத அக்கிரமம் ஒன்று மின்னல் வேகத்தில் அங்கு நடந்தேறியது.

பலராமின் கையில் இருந்த மாத்திரைகளில் ஒன்றை பலவந்தமாக நிமிண்டி கண் மூடித்திறப்பதற்குள் விழுங்கி ஏனையோரையும் அவ்வாறே செய்யுமாறு நிர்ப்பந்தித்தது அவர்களுள் வயதில் மிக இளைய டாக்டரான ஜீவன்.

நம்ப முடியாத மனிதாபிமானத் திருட்டு மாத்திரை மருந்து வடிவில் கண்ணெதிரே மாத்திரை நேரத்தில் ஒப்பேறியது.

வினயமான ஜீவனின் முகத்தில் மின்னி மறைந்தது புன்சிரிப்பா இகத் தாளமா? அனுமானிக்க முடிய வில்லை!

மனம் மரத்துப் போவதற்கு நோயும் துயரங்களும் தேவையில்லை. ஏமாற்றங்களும் சில நம்பிக்கைத் துரோகங்களும் மட்டும் போதும். இப்படியான வாய்ப்பு வரும் என்றே மதப்புடன் காத்திருந்தாயோ? குமுறினேன்.

"இது கிரைம் என்பது எனக்கும் தெரியும். கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. இந்த மாத்திரைகளை நோயாளிகளுக்கு கொடுத்திருந்தால் தேறாத ஆறு பேர் மட்டும் தேற்றம் பெற்றிருப்பர். நீங்கள் சொல்லாவிடினும் தார்மீக கடமை என கருதி இங்குள்ள உங்கள் நெருங்கிய உறவினர்கள் ஐவருக்கும் முன்னுரிமை கொடுத்திருந்தாலும் எண்பது வயதுக்கு மேற்பட்ட அவர்களிடமிருந்த வருத்தம் மட்டுமே மாறியிருக்கும். பின்பு அவர்களில் ஒருவராலாவது எனை யோரை பராமரிக்கவோ பாதுகாக்கவோ முடிந்திருக்குமா?" சிறிதும் குற்ற உணர்வின்றி முறைத்த ஜீவனிடமிருந்து மென்று விழுங்கிய வார்த்தைகள் சன்னமாக வெளி வந்தன.

எனக்குத் தெரிந்த அத்தனை மொழிகளிலும் உள்ள கெட்ட வார்த்தைகள் மூளையிலும் வந்தன. வாயிலும் வந்தன.

எல்லை தாண்டிய எனது ஆத்திரம் ஆவேசமாகிற்று!

கொஞ்சமும் கருணையே இல்லாத நஞ்சு உள்ளம் கொண்ட உங்களையெல்லாம் டாக்டர்கள் என்று சொல்லவே நாக்கூசுது என்றவாறே கதறக் கதற அவனை துவம்சம் செய்தேன்.

விறைத்த அந்த ஜீவனின் உரத்த குரலில் நடுக்கம் இருந்தாலும் வார்த்தைகள் தடித்தன!

"ஐயா!.எமக்கென்று ஒரு நியமம் உள்ளது. அதற்கு ஒரு நியதியும் உண்டு. நியாயமும் உண்டு. நீங்கள் நினைப்பது போல் நோயாளர்களை பரிதவிக்க விட்டுவிட்டு நாம் மட்டும் இந்த அபூர்வ மாத்திரையை உட்கொண்டால் காணும் என்ற எண்ணம் எனக்கும் இல்லை.எமக்கும் இல்லை! பல நோயாளிகளுடன் அன்றாடம் புழங்கும் கடற்பாடும் கட்டுப்பாடும் உள்ளவர்கள் நாம் என்பது உங்களுக்கும் நன்கு தெரியும். நாம் ஒன்றும் வானத்தில் இருந்து வந்து குதிக்கவில்லை. மிகவும் தட்டுப்பாடு நிலவும் இந்த நிலை நீடித்தால் எம்மை யும் நோய் பீடிக்கும் தூரம் அதிக மில்லை என்ற வேளையில்தான் கடவுள் கிருபையால் நீங்கள் வந்தீர்கள். நாம் ஆரோக்கியமாக அல்லது தென்பாக இருந்தால் மட்டுமே தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் அனைவரையும் பாதுகாக்கவும் முடியும். பராமரிக்கவும் முடியும். நீங்கள் கொடுத்த மாத்திரை ஆறு பேருக்கல்ல. அறுநூறு பேருக்கு நிகரானது. எனவே இது மருத்துவம் மட்டுமல்ல. மகத்துவம்."

மனசின் உயரம் தாண்டி ஜீவனது ஞாயத்தின் பெறுமதி வளர்ந்திட, வான் நோக்கி உயந்தது எனது மாத்திரையின் பெறுமதி!